

# கோவிட்-19 கதைத் தொகுப்பு

“இறுதியில், மனித குலத்துக்கு கோவிட்-19 கற்பிக்கக் கூடிய மிகப்பெரிய பாடம் யாதெனில் நாம் அனைவரும் ஒன்றாய் இணைந்திருக்க வேண்டும் என்பதாகும்.”


Sarvodaya

Shanthi Sena Sansadaya

This project is co-funded by the European Union

UNDP

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| அறிமுகம் | 04 |
| ரவீந்திர கந்தகே அவர்களின் செய்தி | 06 |
| வைத்தியர் வின்யா ஆரியரத்ன அவர்களின் செய்தி | 08 |
| ஐரோப்பிய ஒன்றியத்தின் செய்தி | 09 |
| ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (யு.என்.டி.பி) முன்னுரை | 10 |
| வெள்ளைக்காரர்களும் கூட கொரோனா நோய்க்கு பயப்படுகின்றனர். | 13 |
| எங்கள் வீட்டை ஏன் உடைத்துத் தரைமட்டமாக்கினீர்கள்? | 18 |
| அழகுமிகு கொனகலகல... | 20 |
| இத்தாலியில் இருந்து நரகத்துக்கு... | 25 |
| ஐயோ இப்படியும் ஆண்கள்..... | 27 |
| சுப மங்களம் - இனிய திருமண நல் வாழ்த்துக்கள்!... | 30 |
| கடற்படையைச் சேர்ந்த எனது மகனுக்கு நேர்ந்த துன்பம். | 31 |
| கரை வலை மூலம் கரை சேர்ந்த சஞ்சீவ | 34 |
| பொலிசார் சொல்வது சரியா? அல்லது PHI சொல்வது சரியா? | 36 |
| செல்வமே, உனக்காக சிந்திய கண்ணீர் பெரும் கடலை விடவும் அதிகம். | 41 |
| வித்தியாசமான ஓர் இளைஞரின் கதை | 46 |
| அரச ஊழியர்களின் வீரதீரப் பணிகள். | 48 |
| நாங்கள் பிழைத்துக்கொண்டோம் தம்பி ! | 53 |
| தொற்று நோய்களின் போது தவறான தகவல்கள் பரவினால் என்ன நடக்கும்? | 54 |
| அதிர்ஷ்டம் வரும் போது இப்படித்தான், பாணும் கொடிகட்டிப் பறக்கும். | 58 |
| மிலானோ - டுபாய்- கந்தகாடு - பொலன்னறுவை - ஐ.டி.எச் - லுனாவ | 59 |
| ஏழைகளான எங்களுக்கு எங்கே ஒன்லைன்.? ! | 68 |
| அந்நேரத்தில் அனைவரும் சிறுவர்களை போல அழுதார்கள் | 70 |
| முகம் பார்த்துப் பார்த்துத் தான் பணம் பங்கிட்டார்கள் | 72 |
| குளக்கரையில் தனித்துப் போன பெருமூச்சு | 75 |
| கோவிட் கால நீர்கொழும்பு மனிதாபிமானம் | 77 |
| ATM பிரச்சினை | 80 |
| கதைகளினால் தடுமாறும் மனம் | 82 |
| ஐயோ எங்கள் மாமியார் எங்கே போனாரோ? | 84 |
| கும்பிட போன கோவில் தலையில் இடிந்து விழுந்தது | 86 |
| இன்றைக்கு சந்தோசமாக இருந்து நாளைக்கு இறந்தாலும் பரவாயில்லை. | 89 |

# கொரோ
# னா

# அறிமுகம்

**We are not makers of history.**
**We are made by history.**

**Martin Luther King, Jr.**

நாம் வரலாற்றை உருவாக்குபவர்கள் அல்ல.
வரலாற்றால் நாம் உருவாக்கப்பட்டோம்.

மார்டின் லூதர் கிங், ஜுனியர்

ஆபத்தான கால கட்டமொன்றில் இருந்து வெளியேற முடியா வண்ணம் உலகம் கோவிட் தொற்று நோயில் மூழ்கியது. மக்கள் தங்கள் வீடுகளிலும் பணியிடங்களிலும் சிக்கிக்கொண்டனர். ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மக்கள் இதனால் மிகவும் பாதிக்கப்பட்டனர். இச் சந்தர்ப்பத்தை அர்த்தமுள்ள விதமாக பயன்படுத்தத் தீர்மானித்த சர்வோதய சாந்தி சேனா இயக்கம் இலங்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 மாவட்டங்களில் தொடர்ச்சியான சிறப்புத் திட்டங்களை ஆரம்பித்தது. இந்தத் திட்டத்தின் ஓர் அம்சமே ஊரடங்கு உத்தரவு காலத்தில் மக்கள் அனுபவித்த நிகழ்வுகளின் நினைவுகளைச் சேமித்து வைப்பதாகும். இக் கதைப் புத்தகம் அவற்றை அடிப்படையாக கொண்டு எழுதப்பட்டுள்ளது. இக் கதைகள் அவர்களின் அனுமதியுடனே வெளியிடப்படுகின்றன. கதாநாயகர்களின் வேண்டுகோளின் பேரில், சில கதைகளில் பயன்படுத்தப்படும் பெயர்கள் மற்றும் ஊர்கள் மாற்றப்பட்டுள்ளன.

மனித சமூகம் எதிர்பாராத தருணத்தில் கோவிட் 19 சூழ்நிலையை எதிர்கொண்டது. இந்த அறியப்படாத பேரழிவு மக்களில் அதிர்ச்சியையும் பயத்தையும் ஏற்படுத்தியது. நோய் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு பரவக்கூடும் என்பதால் சந்தேகத்தையும், பயத்தையும், பீதியையும் ஒருவருக்கொருவர் கொண்டிருந்தனர். ஒருபுறம், நோயாளிகளையும் நோயாளிகளின் உறவினர்களையும் தனிமையில் வாழ வைத்தனர். ஒரு சந்தர்ப்பத்தில், ஒரு குறிப்பிட்ட மதக் குழுவில் இந்நோய் ஏற்பட்ட போது, அந்த மதக் குழு ஓரங்கட்டப்பட்டது. அவர்களுக்கெதிராக பாகுபாடு காட்டப்பட்டது. இந்த நோய் நிபுணர்களிடையே பரவியதால், பயிற்சியாளர்கள் ஓரங்கட்டப்பட்டனர். வித்தியாசமாக நடத்தப்பட்டனர். நோய் வாய்ப்பட்டபோது அக்கம்பக்கத்தினர் அவர்களை ஓரங்கட்டினர். மனித நேயமும் மதப் போதனைகளும் மறக்கப்பட்ட காலம் அது.

வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்ட மக்களின் பொருளாதார சக்தி சரிந்தது. பொருளாதார அழுத்தங்கள் மன அழுத்தத்துடன் இணைந்து சமூகத்தில் அமைதியின்மை தோன்றியதால் சமூக சகவாழ்வு தடைப்பட்டது. மதங்களுக்கும் இனக்குழுக்களுக்கும் இடையில் தொடங்கிய வாய்மொழிச் சண்டைகள் சமூக ஓரங்கட்டலாக வளர்ந்தது. இது சமூக ஊடகங்கள் மூலம் மேலும் மேலும் தீவிரமடைந்தது.

இந்தப் பின்னணியில், சர்வோதய சாந்தி சேனா, ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துடன் (UNDP) இணைந்து, நோய் பரவத் தொடங்கிய 10 மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்து, 25 மத, சிவில், இளைஞர் மற்றும் பெண்கள் தலைவர்களை அணிதிரட்டி சமூக தலைமைத்துவ சபையை அமைத்தது. சமூகவியல், ஊடகங்கள், வாய்வழி வரலாறு மற்றும் மருத்துவம் ஆகிய துறைகள் சார் நிபுணர்களின் உதவியுடன் தொடர் கலந்துரையாடல்கள் நடைபெற்றன. அந்த அறிவு மற்றும் புரிதலின் மூலம் அவர்கள் பாகுபாட்டைக் குறைக்க ஒரு பொதுக் கருத்தை உருவாக்கினர். சமூக சகவாழ்வை வலுப்படுத்த மத குழுக்களிடையே நம்பிக்கையை வளர்க்க அவர்கள் பணியாற்றினர். விளைவாக தற்போதுள்ள நோய் நிலைமையை அறிவியல் பூர்வமாக எதிர்கொள்ளத் தயாரான மனோ நிலை மக்களிடையே ஏற்படுத்தப்பட்டது.

குறிப்பாக இந்த கடினமான நேரத்தில், இளம் தொழில் முனைவோர் மிகவும் பரிதாபகரமான சூழ்நிலையை எதிர்கொண்டனர். இடிந்து விழுந்த வணிகங்களை புதுப்பிக்க நிதி உதவி வழங்குவது இத்திட்டத்தின் மற்றொரு முக்கியமான நோக்கமாகும். பொருத்தமான தொழில்முனைவோரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவழைக்கப்பட்டன, ஒரு தேர்வுக் குழு பொருத்தமான வேட்பாளர்களைத் தேர்ந்தெடுத்தது. அவர்களுக்கு அடிப்படைப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. தொழில்முனைவோர்கள் 102 பேருக்கு நிதி உதவி வழங்கப்பட்டது. இதில் பெண் தொழில்முனைவோர், ஊனமுற்றோர் மற்றும் விதவை தொழில்முனைவோர் ஆகியோர் அடங்குவர். சிறிய அளவிலான ஆடைத் தொழில்கள், கைவினைப்பொருட்கள், தோல் பை பொருட்கள், சிமென்ட் பொருட்கள், பயிர்கள், உணவு மற்றும் மிட்டாய் பொருட்கள், தங்கத் தொழில், மீன் வர்த்தகம், அலுமினியப் பொருட்கள், இரும்பு வேலை, தொழில்நுட்பக் கருவி உற்பத்தி மற்றும் சில்லறை விற்பனை ஆகியவை இதில் அடங்கும்.

இந்தக் குழு மூலம், இந்தக் கடினமான காலத்தின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட சில கதைகளைச் சேர்த்து இந்த நினைவுக் குறிப்பை வெளியிட முடிவு செய்தோம். இந்த செயற்திட்டத்தின் மற்றொரு விளைவாகவே இந்தப் புத்தகம் வெளியிடப்படுகிறது.

ஆசிரியர் குழு

# ரவீந்திர கந்தகே அவர்களின் செய்தி

இலங்கையில் கோவிட் நோயினால் பாதிக்கப்பட்ட முதல் நபர் 2020 மார்ச் 11 அன்று பதிவாகியுள்ளார். மார்ச் 16 இற்குள், நோய் பரவுவதைத் தடுப்பதற்கு மாகாணங்களை முடக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. மார்ச் 24 இற்குள் நாடு முழுவதும் மூடப்பட்டது. அனைவரும் வீடுகளுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தனர். தினசரி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. நாட்டின் பிற பகுதிகளுக்கும் நோய் பரவியதால் முழு நாடும் முடக்கப்பட்டது. தங்களால் அந் நிலமையை சமாளிக்க முடிந்தவர்கள் சங்கடம் இல்லாமல் இருந்தார்கள். அன்றாடம் வருமானம் ஈட்டி வாழ்பவர்கள் அநேக துயரங்களை எதிர்கொண்டனர். இந்தக் காலகட்டத்தில் நாட்டில் உள்ள அனைத்து மக்களும் சாதி, மதம், வர்க்கம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் வாழ்க்கையில் இது வரைக்கும் கண்டிராத விடயங்களில் அனுபவங்களைப் பெற்றனர். அவர்களில் சிலர் கவலையுடனும், சிலர் ஊக்கம் அடைந்தவர்களாகவும் இருந்தனர். சில கதைகள் மனிதகுலத்தின் நற்பண்புகளால் நிறைந்தவை. சில கதைகள் நம்ப முடியாத அளவுக்குக் கடுமையானவை. இன்னும் சிலரது கதைகள் மிகவும் அன்பு நிறைந்தவை. இந்தக் கதைகளை வரலாற்றுடன் புதைபட்டுப் போக அனுமதிக்கக் கூடாது என்பதோடு எதிர்கால சந்ததியினருக்குத் தெரியும்படி ஆவணப்படுத்தப்பட வேண்டும் என்ற உந்துதலின் விளைவாக, இந்த கோவிட் கதைப் புத்தகம் வெளியிடப்படுகிறது.

சகோதர சமூகத்தினரின் உண்மையான அனுபவத்தைச் சுற்றி எழுந்துள்ள இந்தக் கதைகளின் தொகுப்பானது, கோவிட் ஊரடங்கு காலத்தில், 10 மாவட்டங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அமைதிப் படைகளுடன் இணைந்து இணைய வழியாக பணியாற்றிய மத, சிவில் மற்றும் இளைஞர் தலைவர்கள் குழுவால் எங்களுக்கு வழங்கப்பட்டது. திரு விஷ்ணு வாசு அவர்கள், எங்களுக்கு அனுப்பப்பட்ட கதைகளின் உள்ளடக்கத்தை மாற்றாமல், இந்நூலின் பக்கங்களை சுவாரஸ்யமான முறையில் வடிவமைத்தார். ஆங்கில மொழிபெயர்ப்பை திருமதி நிலுக்ஷி கூரே மற்றும் செல்வி வின்சிகா ஆகியோரும் தமிழ் மொழி பெயர்ப்பை திரு தாரிக் அலி அவர்களும் செய்துள்ளார்கள். மேலும் தமிழ் மொழிப் பக்கங்களை திரு. ரசிக்க கீதாங்க அவர்கள் தயாரித்தார்.

இந்த நடவடிக்கைகளை மாவட்ட அளவில் ஒருங்கிணைத்த நமது சர்வோதய மாவட்ட இணைப்பாளர்களினதும் ஊழியர்களினதும் பணிகள் பாராட்டுக்குரியவை.

இது போன்றதொரு செயற்திட்டத்தின் முக்கியத்துவம் குறித்து எங்களுக்கு அறிவுரை வழங்கிய சர்வோதய இயக்கத்தின் தலைவர் டாக்டர் வின்யா ஆரியரத்ன அவர்களுக்கும், இந்த செயற் திட்டத்திற்காக எங்களுக்கு நிதி உதவியை வழங்கிய ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கொழும்பு அலுவலகத்திற்கும், அதன் தொழிநுட்ப நிபுணர் டாக்டர் பிரியான் செனவிரத்ன உள்ளிட்ட அவரது குழுவினருக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகின்றோம். சர்வோதய சாந்தி சேனா அமைப்பின் ஒரே நோக்கம் கோவிட் எனும் இப் பேரழிவை சபித்துக் கொண்டிராமல் அதற்கு ஒரு தீர்வைக் கண்டுபிடிப்பதாகும். இக் கதைத் தொகுதியின் வெளியீடு இந்த இலக்கை அடையக் காரணம் எம்மால் தொடங்கப்பட்ட தொடர் திட்டங்களின் வெற்றியாகும். இந்தத் திட்டத்திற்கு இணையாக, கோவிட் பேரழிவின் போது மத மற்றும் இன ஒற்றுமையைப் பேணுவதற்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கு எதிரான சமூகப் புறக்கணிப்பை இல்லாதொழிக்கவும் இந்த மதத் தலைவர்கள் அளித்த பங்களிப்பு மகத்தானது.

இந்தப் பேரழிவு காலத்தில் சரிந்த வணிகங்களை மீண்டும் கட்டியெழுப்ப சம்பந்தப்பட்ட 10 மாவட்டங்களில் உள்ள தொழில்முனைவோர்கள் 100 பேருக்குத் தேவையான தொழிநுட்பப் பயிற்சிகளையும் நிதி உதவிகளையும் வழங்கினோம்.

இந்த மொத்தச் செயன்முறையிலும் பங்களித்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த கதைகளின் தொகுப்பு எதிர்கால சந்ததியினருக்கு நினைவுச் சின்னமாக இருக்கும் என்பது எனது திடமான நம்பிக்கையாகும்.

**ரவீந்திர கந்தகே** | நிறைவேற்றுப் பணிப்பாளர் | சர்வோதய சாந்தி சேனா இயக்கம்

# வைத்தியர் வின்யா ஆரியரத்ன அவர்களின் செய்தி

நாட்டில் ஏதேனும் இயற்கை அனர்த்தங்கள் அல்லது பேரழிவுகள் ஏற்பட்டால், பாதிக்கப்பட்ட சமூகங்களைத் தேடிக் கண்டுபிடித்து, அவர்களுக்குத் தேவையான பௌதீக மற்றும் உளவியல் சேவைகளை வழங்கி அவர்களை ஆற்றுப்படுத்துவதற்காக பணியாற்றுவது சர்வோதய அமைப்புக்குப் புதிதல்ல. இதற்கு ஏராளமான எடுத்துக்காட்டுக்கள் உள்ளன. இருப்பினும் அது அவ்வளவு இலகுவான பணி அல்ல. அவ்வகையில் கோவிட் 19 சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்காகவும் நிவாரணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இத்தகைய தொற்று நோய் சூழ்நிலையை எதிர்கொள்வது மிகவும் சவாலான காரியமாகும். பாதிக்கப்பட்ட மக்களின் துன்பங்களிலிருந்து விலகி நின்று வெறுமனே கைகளைக் கட்டிப் பார்த்துக்கொண்டிருப்பது எங்களைப் போன்ற ஒரு சமூக சேவை அமைப்பின் செயற்பாடாக இருக்க முடியாது. எனவே எங்களால் முடிந்த நிவாரணப் பணிகளை, அரசு மற்றும் சுகாதாரத் துறையினர் வகுத்துள்ள அளவுகோல்களை அடிப்படையாகக் கொண்டு நாம் முன்னெடுத்தோம். பாதிக்கப்பட்ட மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி அவர்களுக்கு சர்வோதய சாந்தி சேனா அமைப்பு வழங்கிய சேவைகள் அற்பமானவை அல்ல.

எந்தவொரு சமூக ஆர்வலரும் நேரடியாக எதையும் செய்ய முடியாத நிலையில், இணைய உரையாடல்கள் மூலம் 10 மாவட்டங்களின் மதத் தலைவர்கள், சமூகத் தலைவர்கள் மற்றும் இளைஞர் தலைவர்களை ஒன்றிணைத்து சமூகத்தை நல்வழிப்படுத்துவதற்கு அவர்களது தலைமைத்துவத்தைப் பயன்படுத்துவது மிகவுமே முக்கியமானதோர் பணியாகும். அத்தகைய சூழ்நிலையில் உருவாக்கப்படும் பாகுபாட்டைச் சரி செய்வதற்கும், சரிந்த இளம் தொழில்முனைவோரின் வணிகங்களைப் புதுப்பிப்பதற்கும், நிதி உதவி மற்றும் தேவையான தொழில்நுட்ப அறிவு வழங்கப்பட்டது. எதிர்கால கற்றல் மற்றும் படிப்பினைகளுக்கு இதுபோன்ற எதிர்பாராத சூழ்நிலையில் சமூகத்தின் வாழ்க்கை அனுபவங்களை எடுத்துச் செல்ல கதைகளை சேகரித்து அவற்றை ஒரு புத்தகமாக அச்சிடுவது இந்த சந்தர்ப்பத்தின் முக்கியமான பணிகளில் ஒன்றாகும்.

இது எளிதான காரியம் அல்ல என்றாலும், சவாலை ஏற்றுக்கொண்டு வெற்றிகரமாக செயல்படுத்திய சர்வோதய சாந்தி சேனா இயக்கத்திற்கு நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன். இதுபோன்ற பேரழிவு சூழ்நிலைகளை எதிர்கொள்ள கோவிட் கதைகளின் தொகுப்பு சமூகத்திற்கு ஒரு பலமாக இருக்கும் என்பது எனது அசையாத நம்பிக்கையாகும்.

**வைத்தியர் வின்யா ஆரியரத்ன** | தலைவர் | சர்வோதய சங்கம்

# ஐரோப்பிய ஒன்றியத்தின் செய்தி

கொரோனா வைரஸ் மற்றும் அதன் சமூக - பொருளாதார விளைவுகள் பெண்கள், குழந்தைகள் மற்றும் வயதான நபர்கள் ஆகியோரின் உரிமைகள் மீதும் மற்றும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலைகளில் உள்ள அனைத்து நபர்கள் மீதும் ஏற்றத்தாழ்வான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. கட்டமைப்பு ரீதியான சமத்துவமின்மை மற்றும் சமூக விலக்கு ஆகியவற்றை எதிர்கொள்பவர்கள் பெரும்பாலும் இனம், பால் மற்றும் பாலியல் நோக்குநிலை ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபாட்டின் பிற குறிப்பான்களையும் முன் கொண்டு செல்கின்றனர்.

''சகிப்புத்தன்மையையும் பன்முகத்தன்மைக்கு மதிப்பளித்தலையும் ஊக்குவிப்பதன் மூலம் வன்முறைத் தீவிரவாதத்தைத் தடுத்தல்'' என்ற, ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடனான செயற்திட்டமானது, ஆசியப் பிராந்தியத்தில் வன்முறைத் தீவிரவாதத்தைத் தடுப்பதற்காக அதன் மூல காரணங்களைத் தேடி நிவர்த்தி செய்வதோடு சகிப்புத்தன்மையையும் பன்முகத்தன்மைக்கு மதிப்பளித்தலையும் ஊக்குவிக்கும் நோக்கிலான ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துக்கும் (யு.என்.டி.பி) இடையிலான ஒருங்கிணைப்பின் விளைவாக ஏற்பட்டதாகும். மற்ற இடங்களைப் போலவே, இலங்கையில், இந்த முயற்சிகள் கோவிட் - 19 தொற்று நோயை எதிர்கொள்வதற்கான உள்நாட்டு முயற்சிகளுக்கு ஆதரவு வழங்குவதில் முக்கிய பங்கு வகிக்கும் அதே வேளையில், ஆபத்தில் மாட்டிக்கொண்டுள்ள மக்கள் தொகுதியினர்களிடையே சவால்களை எதிர்கொள்ளும் ஆற்றலை உருவாக்குவதையும் அவர்களைப் பலப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன. இந்த முன்னுரிமை, தொற்றுநோய்களை எதிர்கொள்ளும் நடவடிக்கைகளுக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் அழைப்பை பிரதிபலிக்கிறது, இது ஓரங்கட்டப்படுதல் மற்றும் களங்கப்படுத்துதல் மற்றும் பிற வகை பாகுபாடுகளின் ஆபத்தில் உள்ளவர்களின் தேவைகளை கணக்கில் எடுத்துக்கொள்கிறது.

இந்த செயற்திட்டமானது, இலங்கையில் பன்மைத்துவத்தை மேம்படுத்துவதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதிப்பங்களிப்போடு முன்னெடுக்கப்படும் தலையீடுகளில் மேலும் ஒன்றாகும். இப்போது, முன்னெப்போதையும் விட, நிறுவனமயப்பட்ட பதிலளித்தல்களையும் நடத்தை மாற்றத்தையும் ஏற்படுத்தக்கூடிய அனைத்துத் தரப்புக்களையும் உள்வாங்கிய சமூகங்களை உருவாக்குவதற்கான முயற்சிகளை நாங்கள் ஆதரிக்கிறோம்.

சமூகப் பிறழ்வுகளைப் புரிந்துகொண்டு, சமூகத்தில் புரையோடிப்போயுள்ள ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறையாக கோவிட் - 19 முடக்கத்தின் அனுபவங்களை கதைகளாக முன்வைப்பதன் மூலம் யு.என்.டி.பி மற்றும் சர்வோதய நிறுவனங்கள் மேற்கொண்டுள்ள மெச்சத்தக்க பணிக்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**பிராங்க் ஹெஸ்ஸி** | இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் ஒத்துழைப்பகத் தலைவர்

# ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (யு.என்.டி.பி) முன்னுரை

கொரோனா வைரஸ் (கோவிட் - 19), ஒரு சமூகத்தின் பலமானது அதன் மிகப் பலவீனமான இணைப்பைப் போன்றது என்பதை தெளிவாக நிரூபித்துள்ளது. இது மக்களின் ஆரோக்கியத்தையும் அவர்களது பொருளாதாரத்தையும் பொருத்தவரையில் பிரத்தியட்சமான உண்மையாகும். இப்போது நாடுகள் எதிர்கொள்ளும் சமூக, அரசியல் மற்றும் பொருளாதார வீழ்ச்சிகளானவை, வரவிருக்கும் ஆண்டுகளில் நமது சமூகங்களைப் பாதிக்கும். வாழ்வாதாரங்களில் இடையூறு, நிதி நெருக்கடி, வீட்டு வன்முறை மற்றும் துஷ்பிரயோகம், அதிகரித்த சமூகத் தனிமைப்படுத்தல்கள், மோதல்களும் வன்முறைகளும் மோசமடைதல் மற்றும் தீவிர வறுமைப் பொறிகள் ஆகியவை உலகெங்கிலும் உள்ள மக்கள் எதிர்கொள்ளவிருக்கும் கற்பனைக்கு எட்டாத சோதனைகளாகும். ஒருபுறம், கொரோனா வைரஸ் ஒரு பெரிய உலகளாவிய சவாலை உருவாக்க இந்த எல்லாக் காரணிகளையும் முன்வைக்கிறது. மறுபுறம், தொற்றுநோய்கள் சவால்களை வாய்ப்புகளாக மாற்றுவதன் மூலம் மறுபரிசீலனை செய்யவும், புதுமைப்படுத்தவும், மாற்றவும், செழிக்கவும் நம்மைத் தூண்டுகின்றன.

நாங்கள் மனிதர்கள், எனவே நாங்கள் கதைகளுக்காக வாழ்கிறோம். வெவ்வேறு சவால்களை எதிர்கொள்ளும் உண்மையான நபர்களின் உண்மையான கதைகள் மீது கவனம் குவிக்கப்படும்போது, அவை நம் காலத்தின் மிக முக்கியமான சில சிக்கல்களை அதிக ஆழத்துடனும், பச்சாதாபத்துடனும் புரிந்துகொள்ள எம்மை அனுமதிக்கின்றன. உரையாடல் மற்றும் பிரதிபலிப்பின் சக்தியை நம்புகின்ற, யு.என்.டி.பி அங்கத்தவர்களான நாம், கோவிட் - 19 மூலம் அதிகரித்த சவால்களை முன்னிலைப்படுத்துகிறோம், குறிப்பாக ஆழ வேரூன்றிய சமூக ஒதுக்கல் மற்றும் பாகுபாட்டின் வடிவங்கள் மக்கள் மற்றும் சமூகங்கள் மீது சவால் விடுக்கப்படுவதன் மூலம் அகலும் என நாம் நம்புகின்றோம். கோவிட் - 19 இலங்கை முழுவதிலும் உள்ள சமூகங்களில் தொடர்ந்து அதிகரித்து வருவதால், இக்கதை சொல்லலில் இருந்து வெளிப்படும் உரையாடல் மற்றும் பிரதிபலிப்பின் சக்தி, வகுப்புவாத பதற்றங்களை உருவாக்குபவர்களோடு உரையாடி, சமூக ஒத்திசைவு மற்றும் நம்பிக்கையைக் கட்டி எழுப்ப முடியும். மேலும் சமூகங்களுக்கு இடையிலான உறவை வலுப்படுத்த முடியும்.

கதை சொல்லல் செயற்பாடானது, மூலோபாய ரீதியாகவும் “சர்வோதய சாந்திசேனா சன்சதய“ போன்ற, பெறுமானங்களை முன்னிலைப்படுத்திய வலைப்பின்னல்களுடனான ஒத்துழைப்புடனும் மேற்கொள்ளப்படும் போது அது முன்வைக்கும் சாத்தியக்கூறுகள், இயலுமைகள் குறித்து நான் பேருவகையடைகின்றேன். உண்மையில் “சர்வோதய சாந்திசேனா சன்சதய“ வுடன் இணைந்து யு.என்.டி.பி. அமைப்பானது மக்களின் துடிப்பான பங்களிப்புடன் 60 மெய்நிகர் சமூக உரையாடல்கள் மற்றும் 20க்கும் மேற்பட்ட நேருக்கு நேர் உரையாடல்களைத் தொடங்கியது. பெண்கள் மற்றும் இளைஞர்கள் உள்ளடங்கலாக, பல்வேறு மத மற்றும் இனக் குழுமங்களைச் சேர்ந்த முக்கிய பங்களிப்பாளர்கள், 10 மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி, ‘‘சகிப்புத்தன்மையையும் பன்முகத்தன்மைக்கு மதிப்பளித்தலையும் ஊக்குவிப்பதன் மூலம் வன்முறைத் தீவிரவாதத்தைத் தடுத்தல்’’ என்ற, ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடனான செயற்திட்டத்தின் கீழ் இதில்

கலந்துகொண்டனர். சமூக ஒத்திசைவு மற்றும் வகுப்புவாத நல்லிணக்கத்திற்காக சமூகங்களை வலுப்படுத்த இந்த செயற்திட்டமானது சிவில் சமூக அமைப்புகளுக்கு வலுவூட்டுகிறது.

சமூக உரையாடல்கள், கோவிட் காரணமான பாதிப்புகள் மற்றும் பின்னடைவுகள் பற்றிய கதைகளை வெளிக்கொணர்ந்தாலும், இனங்களுக்கிடையேயான நல்லிணக்கம் மற்றும் தொழில் முனைவோர் தமது வெற்றிப் பயணங்களை மகிழ்ச்சிகரமாக முன்னெடுத்தமை பற்றிய கதைகள் அத்தகைய கதைகளை முந்திச் சென்றன. ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும் என்ற வலுவான செய்தியுடனான 50 வாழ்க்கைக் கதைகள் மற்றும் அனுபவங்களை அடக்கிய இந்த தொகுப்பு ஒரு சக்திவாய்ந்த ஆதாரமாக முன்வைக்கப்படுகிறது. இவை சவாலான நேரங்களை ஒற்றுமையுடன் எதிர்கொள்ளத் தேவையான உந்துதலை மக்களுக்கு வழங்கும் என்பது திண்ணம்.

**ராபர்ட் ஜுகாமி** | யு.என்.டி.பி. நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி


ERANGA

# வெள்ளைக்காரர்களும் கூட
# கொரோனா நோய்க்கு பயப்படுகின்றனர்.

களியாட்டங்களில் டீ.ஜே நிகழ்ச்சிகளை நடாத்துவது தான் என்னுடைய பிரதான தொழில். அதற்கு மேலதிகமாக நான் ஹோட்டல் ஒன்றிலும் தொழில் புரிகிறேன்.

கோவிட்-19 நோய் தொடர்பாகத் தெரிய வரும்போது நான் நுவரெலியாவில் இருந்தேன். நான் என்னுடைய விடுமுறையைக் கழித்துவிட்டு மார்ச் மாதம் 13 ஆம் திகதி தான் மீண்டும் ஹோட்டலுக்கு வந்தேன். என்றாலும் ஹோட்டலில் தங்கியிருந்த சுற்றுலாப் பயணிகள் கோவிட் நோயை ஒரு பெரிய பிரச்சினையாக எடுத்துக் கொள்ளவில்லை என்பதனை நான் புரிந்து கொண்டேன். இச்சந்தர்ப்பத்தில் தான் இலங்கையின் முதலாவது தொற்றாளர் கண்டறியப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அதாவது அந்த சீனப் பெண். அது கேள்விப்பட்டு சுற்றுலாப் பயணிகள் சற்று அச்சமுற்றனர். அச்சந்தர்ப்பத்தில் அரசாங்கமும் சுகாதாரத் துறையினரும் இவ்விடயம் எங்கே செல்லப் போகிறது? என்பதைப் புரிந்து கொண்டார்கள். அதன் பின்னர் பொது சுகாதாரப் பரிசோதகர்களும் பொலிசாரும் வந்து எங்களுக்கு உரிய அறிவுறுத்தல்களைத் தந்தனர். உண்மையைச் சொல்வதாயின் நான் சேவை புரிந்த ஹோட்டல் நிர்வாகம் முதலில் செய்த வேலை அங்கிருந்த இரண்டு நீச்சல் தடாகங்களையும் மூடிவிட்டதாகும். அதாவது அவற்றை யாரும் பயன்படுத்த முடியாத வண்ணம் அவை மூடப்பட்டன. அப்போது சுற்றுலா பயணிகள் சிலர் எங்களோடு சண்டைக்கு வந்தனர். ‘‘நாங்கள் பல லட்சங்கள் செலவழித்து எங்களுடைய விடுமுறையைக் கழிப்பதற்காக வந்திருக்கும் சந்தர்ப்பத்தில் நீங்கள் ஏன் நீச்சல் தடாகத்தை மூடி வைத்து இருக்கிறீர்கள்?’’ என்று அவர்கள் எம்மிடம் கேள்வி கேட்கத் தொடங்கினர். அது அநியாயம் என்று அவர்கள் எங்களுக்கு ஏசவும் செய்தனர். ‘‘நீங்கள் தேவையில்லாமல் பயப்படுகிறீர்கள்.’’ என்றும் சிலர் கூறினார்கள்.

அவ்வாறு இருக்கும்போது மார்ச் மாதம் 20, 21 ஆம் திகதி ஆகும் போது அவர்களுக்கும் செய்திகள் வரத் தொடங்கின. இத்தாலியில் ஒரு நாளைக்கு இத்தனை பேர் மரணிக்கின்றனர். ஜெர்மனியில் இத்தனை பேர் மரணிக்கின்றனர் என்ற செய்திகள் வரத் தொடங்கின. அப்பொழுது தான் அவர்களுக்கு விடயத்தின் பாரதூரம் புரியத் தொடங்கியது. சில நாட்களுக்கு முன்னர் எங்களோடு சண்டை பிடித்த இந்த வெள்ளைக்காரர்கள் தற்போது மரண பயத்தில் நடுங்கத் தொடங்கினர். சுருக்கமாகச் சொன்னால் எங்களோடு கதைப்பதை நிறுத்திவிட்டனர். நாங்கள் எவ்விதமான தொழில்நுட்ப அபிவிருத்தியும் காணாத ஒரு கோத்திரத்தினர் என்றுதான் பொதுவாக அவர்கள் எங்களைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

மார்ச் 21ஆம் திகதி ஆகும் போது சுற்றுலாப் பயணிகளை முடிந்தளவு நாட்டிலிருந்து வெளியேற்றும் படி அரசு அறிவித்தது. பல வெள்ளைக்காரர்கள், ‘‘எந்த விலைக்கும் நாங்கள் இந்த நாட்டை விட்டுச் செல்லமாட்டோம்.’’ என்றும் ‘‘எங்கள் நாட்டுக்குச் சென்று மரணிப்பதற்கு நாங்கள் பயப்படுகிறோம்.’’ என்றும் கூறினர்.

இந்த கொரோனா தொற்றுநோய் எங்களைத்தான் கூடுதலாகப் பாதித்தது. 2020 ஆம் ஆண்டு பிறந்ததும், இந்த வருடம் ஒரு சிறந்த வருடமாக இருக்கும், அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருவார்கள் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். உண்மையில் முன்கூட்டிய பதிவுகள் அதிகம் வரத்

தொடங்கின. நான் பணியாற்றும் ஹோட்டலில் மாத்திரம் மே மாதம் ஆகும் போது சுமார் 4000 அறைகள் பதிவு செய்யப்பட்டிருந்தன. இந்தப் பருவகாலத்தில் எங்களால் பெரிய அளவு சேவைக் கட்டணம் ஒன்றைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று நாங்கள் மிகுந்த சந்தோஷத்தில் இருந்தோம்.

கொரோனா நோய் ஆரம்பித்த பொழுது நமது ஹோட்டலில் சுமார் 310 பணியாளர்கள் கடமை புரிந்தனர். அவர்களில் சுமார் 100 பேர் ஒப்பந்த அடிப்படையில் வேலையில் இணைந்தவர்கள். அவர்களோடு ஹோட்டல் நிர்வாகம் எவ்விதமான ஒப்பந்தத்தையும் செய்திருக்கவில்லை. நோய் ஏற்பட்டு ஹோட்டல் மூடப்பட்ட போது அவர்களுக்கு அவர்களுடைய தொழில் இல்லாமல் போனது.

ஏப்ரல் மாதம் முதலாம் திகதி எங்கள் ஹோட்டலை ஒரு தனிமைப்படுத்தல் முகாகமாக அரசுக்குக் கையளித்தனர். பின்னர் ஹோட்டலுக்கான முழுமையான பாதுகாப்பு, மருத்துவ வசதிகள் உள்ளிட்ட அனைத்து சேவைகளும் அரசாங்கத்தாலேயே வழங்கப்பட்டன. தனிமைப்படுத்தலுக்கு உட்படுவோருக்கு சேவைகள் புரிவதற்காக 14 நாட்கள் தொடர்ந்து பணியாற்ற வேண்டும் என்ற அடிப்படையில் மே மாதம் முதலாம் திகதி முதல் பணியாளர்கள் அழைக்கப்பட்டனர். உண்மையில் பெரும் பொறுப்புணர்வுடனும் ஆபத்தை எதிர் நோக்கிய வண்ணமும் தான் வேலை செய்ய வேண்டிய நிலை எங்களுக்கு ஏற்பட்டது. வெளிநாடுகளில் இருந்து வருகை தந்த, தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டவர்களுடன் 14 நாட்கள் பணியாற்றுவது என்பது சற்று அச்சத்தை ஏற்படுத்தும் ஒரு விடயம் தான். நான் 12 வருடங்கள் இந்த நிறுவனத்தில் பணியாற்றி இருக்கிறேன். இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் நிறுவனத்தைக் கைவிட்டுச் செல்லவும் முடியாது. தொழிலை இழந்து விடவும் முடியாது. என்றாலும் சில நிரந்தர ஊழியர்கள் கொரோனா ஆரம்பித்ததும் வீடு சென்று மீண்டும் பணிக்கு சமூகம் அளிக்கவே இல்லை. என்றாலும் நிறுவனம் உரிய நேரத்தில் அவர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்கியது. அவர்களுக்கு ஏசியும் பயனில்லை தான். இவ்வாறான இடங்களில் வேலை செய்து விட்டு ஊருக்குப் போய் ஊர் மக்களால் ஒதுக்கப்படுவதனை யார் தான் விரும்புவார்கள்?.

எங்களுக்கு இரண்டு மணித்தியால பயிற்சி ஒன்றை வழங்கினர். சிறிய தடி ஒன்றின் முனையில் ரப்பர் பந்தொன்று பொருத்தப்பட்டிருக்கும். அந்தப் பந்தால் தான் தனிமைப்படுத்தலில் இருப்போரின் அறைக் கதவுகள் தட்டப்படும். காலை 7 மணியாகும் போது கழிவுப்பொருள் பையை எடுக்க வேண்டும். நாம் கதவில் தட்டி 10 செக்கன்களில் உள்ளே இருப்பவர் கழிவுப்பொருள் பையை வெளியில் வைப்பார். நாம் அதனை ட்ரொலியில் ஏற்றிக்கொண்டு செல்வோம் உணவு வழங்குவதும் அப்படித்தான் வெளியில் ஒரு சிறிய மேசை இருக்கும். அந்த மேசையின் மீது தான் உணவுகளை நாங்கள் வைப்போம். அங்கு உணவுகளை வைத்ததும் உள்ளே இருப்பவர் அவற்றை எடுத்துக்கொள்வார். சாதாரணமாக நாங்கள் பொட்டம் ஒன்றும் டி-ஷேர்ட் ஒன்றும் அணிய வேண்டும். காலுறைகளையும் கையுறைகளையும் அணிந்து கொள்ள வேண்டும். நான் எல்லா சந்தர்ப்பங்களிலும் மூன்று சோடி கையுறைகளை அணிந்து கொள்வேன். குளிக்கும் பொழுது ஷவர் கப் ஒன்றையும் போட்டுக்கொள்ள வேண்டும். எல்லா சந்தர்ப்பங்களிலும் முகக்கவசம் அணிந்து இருத்தல் வேண்டும். அழுக்குப் பைகளை சேகரிக்க செல்லும் பொழுது மேலங்கி ஒன்றையும் அணிந்து கொள்ள வேண்டும். அதனை அணிந்து கொண்டால் தலையிலிருந்து பாதம் வரை மூடிக்கொள்ளும். நோயாளிகளும் அதனைத் தான் அணிவார்கள். சரியாக இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்காக எம்மைத் தயார்படுத்திக் கொள்வது போல நாம் உடைகளை அணிந்து கொள்ள வேண்டும். அதற்கு மேல் கண்ணாடிகள் இரண்டையும் போட்டுக்

கொண்டு கையுறைகளிரண்டையும் அணிந்து கொள்வோம். அவற்றை அணிந்து கொண்டதும் எங்கள் கழுத்து வரை அனைத்துப் பாகங்களும் மூடப்பட்டுவிடும். நாங்கள் அணிந்திருக்கும் கையுறைகளைக் களைந்த பின்னர் 200, 300 மில்லிலீற்றர் அளவு வியர்வை கையிலிருந்து பிரவாகிக்கும். அந்த ஆடைகளை அணிந்து கொண்டு மூச்சு எடுப்பதும் கூட சிரமமானது தான்.

மூன்று வேளையும் ஒரே வகையான உணவுகள் தான் பரிமாறப்படும். அவர்களுக்கு வழங்கப்படும் அதே உணவுதான் ஹோட்டல் ஊழியர்களுக்கும். 12வது நாளில்தான் பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படும். சாதாரணமாக பிசிஆர் பரிசோதனை காலை 10 மணிக்கு நடத்தப்படும். குறித்த நேரத்துக்கு வருவோம் என வைத்தியர்கள் அறிவிப்பார்கள். அப்பொழுது நாங்கள் நேர காலத்தோடு சென்று அந்த ஆடை அணிகலன்களை அணிந்து கொண்டு வைத்தியர்கள் வரும் வரை காத்திருப்போம். பாதுகாப்புப் பிரிவில் இருந்தும் பொது வைத்தியசாலையில் இருந்தும் சுமார் நான்கு வைத்தியர்கள் வருகை தருவர். குறிப்பிட்ட ஒரு பகுதியைச் சொல்லி, அங்கு இருப்பவர்களை அழைத்து வரும்படி அவர்கள் எம்மிடம் கூறுவர். அப்பொழுது நாங்கள் அறைகளுக்குச் சென்று கதவுகளைத் தட்டி அவர்களை வெளியில் வந்து நின்று கொள்ளச் சொல்வோம். இறுதி நபரும் அறையில் இருந்து வெளியே வந்த பின்னர் ஒரு மீட்டர் இடைவெளியை பேணிக்கொண்டு எங்கள் பின்னால் வரும் படி அவர்களுக்குக் கூறுவோம்.

அவர்களது பரிசோதனை நடவடிக்கைகள் நிறைவுற்றதும் அவர்களை மீண்டும் அழைத்துச் செல்ல வேண்டும். சற்று வயதான தம்பதியர் இருவர் இருந்தார்கள். அவர்கள் இருவரும் எனது பொறுப்பில் தான் இருந்தனர். அந்தப் பெண்ணுக்கு நடப்பது சற்று சிரமமாக இருந்தது. சக்கர நாற்காலியில் தான் அவர் செல்வார். அவரை அழைத்து வந்த பின்னர் அவருடைய சக்கர நாற்காலியையும் கட்டாயமாக தொற்று நீக்கம் செய்ய வேண்டும். அதன் பின்னர் நானும் அந்த இரசாயனத்தை அந்த இயந்திரத்தைப் பயன்படுத்தி எனது உடலில் தெளித்துக் கொள்வேன்.

முதலாவது பிசிஆர் பரிசோதனை அவர்கள் உரிய நாட்டிலிருந்து வரும் போது செய்யப்படும். அது தொடர்பில் பெரிய நம்பிக்கையை வைக்க முடியாத காரணத்தினால் விமான நிலையத்திலும் மீண்டுமொரு பிசிஆர் பரிசோதனை நடத்தப்படும். அதன் பின்னர் அவர்கள் பஸ் வண்டிகளில் ஏற்றப்பட்டு பாதுகாப்புப் பிரிவினருடன் இங்கே அழைத்து வரப்படுவர். அவர்கள் இங்கே வந்த பிறகு அவர்களுடைய பயணப் பொதிகளை நாங்கள் பஸ் வண்டியில் இருந்து இறக்கமாட்டோம். அவர்களே அவற்றை இறக்கிக் கொள்ள வேண்டும். அதன் பின்னர் எங்களில் ஒருவர் வந்து அவர்களை முழுமையாக தொற்று நீக்கத்துக்கு உட்படுத்துவார். அவர்களது பயணப் பொதிகளும் தொற்று நீக்கம் செய்யப்படும். இந்த அத்தனை நடவடிக்கைகளும் ஒழுங்கு முறைப்படி பொறுப்புணர்வோடு செய்யப்பட வேண்டிய பணிகள் ஆகும். ஏனென்றால் எங்காவது ஒரு சிறு தவறு நிகழ்ந்தாலும் அதன் விளைவு மிகவும் பயங்கரமானதாக அமைய முடியும்.

அவர்கள் 14 நாட்களில் சென்று விடுவதால் 12ம் நாளில் இறுதி பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படும். அதன் பின்னர் 13 ஆம் நாளில் மலேரியா பரிசோதனை மேற்கொள்ளப்படும். அதற்காகவும் முன்பு போலவே அறைகளில் இருந்து அவர்கள் அழைத்து வரப்படுவர். அதன் பின்னர் அவர்களுடைய இரத்தம் எடுக்கப்படும். பின்னர் தான் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும். 14 நாள் பணிகள் நிறைவுற்றதும் நாங்கள் பொது சுகாதார பரிசோதகரிடம் செல்ல வேண்டும். அதன் பின்னர், 14 நாட்கள் எவ்விதப் பிரச்சினைகளும் இல்லாமல் நாம் இந்த நிறுவனத்தில்

பணியாற்றினோம், தற்பொழுது வீடு செல்ல முடியும் என்று அவர் தனது கையொப்பத்தை இட்டு ஒரு சான்றிதழை எங்களுக்குத் தருவார். அந்த சான்றிதழைத் தான் நாங்கள் ஊரடங்குச் சட்ட அனுமதிப் பத்திரமாகப் பயன்படுத்துவோம்.

நாட்டின் போக்குவரத்து முழுமையாக ஸ்தம்பிதம் அடைந்திருந்த காரணத்தினால் நாங்கள் பெரிய பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்பட்டது. மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்துகள் இடம்பெறவில்லை. ஆதலால் பணியை நிறைவு செய்துவிட்டு வீடுகளுக்குச் செல்வது எங்களுக்கு பெரும் பிரச்சனையாக மாறிவிட்டது. அதுமாத்திரமன்றி எங்கள் ஊர் மக்கள் எங்களை சந்தேகக் கண்கொண்டு பார்க்கத் தொடங்கினர். சில ஊழியர்கள் பெரும் தொல்லைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. நாங்கள் வெளிநாட்டவர்களுடன் பணிபுரிந்த காரணத்தினால் ஊருக்கு வர வேண்டாம் என ஊரவர்கள் எங்களிடம் வேண்டிக்கொண்டார்கள். நோய் வெளிநாடுகளில் இருந்து தான் வருகின்றது என்று மக்கள் நினைத்துக் கொண்டிருந்தார்கள். உண்மையில் எங்கள் நாட்டு மக்கள் விடயங்களை சரியாக புரிந்து கொள்வதில்லை என்று நான் சொல்வேன். நாங்கள் வீடுகளுக்குப் போனால், நாங்கள் கொரோனா நோயாளர்கள் அல்ல என்ற சான்றிதழ் இருந்தாலும் கூட மக்கள் எங்களைப் பற்றி சந்தேகம் கொண்டு பொலிஸில் முறைப்பாடு செய்தார்கள். அதன் பின்னர் பொலிஸ் அதிகாரிகள் எங்கள் வீடுகளுக்கு வருவார்கள்.

இந்த வீட்டுக்கு ஏன் போலீசார் வருகிறார்கள்? என்று ஏனையவர்கள் தேடிப்பார்க்க தொடங்குவார்கள். அது என்னவென்று தேடிப் பார்க்கும் போது அயல் வீட்டுக்காரர் தான் போலீசுக்கு அறிவித்திருக்கிறார் என்று தெரிய வரும். அதன் பின்னர் மீண்டும் 14 நாட்கள் வீட்டில் அடைபட்டு இருக்க வேண்டும். இவ்வாறான பிரச்சினைகளுக்கு எங்களில் அதிகமானவர்கள் முகம் கொடுத்தனர். தற்போதும் கூட இதே பிரச்சினை இருக்கத்தான் செய்கிறது. உண்மையில் நாங்கள் வருகின்ற அனைத்து சவால்களுக்கும் வெறுப்போடேனும் முகம் கொடுக்க வேண்டும். எங்களால் சாதிக்க முடியுமா?, முடியாதா? என்று பார்க்கவேண்டும்.

சவால்களுக்கு முகம் கொடுக்காமல் எங்களால் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைத் தேட முடியாது. நானும் விருப்பமில்லாமல் பணிக்கு வந்தாலும் கூட இந்த கொரோனா அபாயத்தைப் பற்றியும் அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றியுமான உண்மை நிலையைப் புரிந்து கொண்டேன். இவ்வாறான அனுபவங்கள் எனக்கு கிடைத்த படியால் ஒரு யுத்த நிலைமை ஏற்பட்டாலும் கூட நான் எதிர்காலத்தில் பயப்படமாட்டேன்.

**கதையை சமர்ப்பித்தவர்** I தயாகா சந்தன I கம்பஹா மாவட்டம்


PRIYADARSHINI

# எங்கள் வீட்டை ஏன் உடைத்துத் தரைமட்டமாக்கினீர்கள்?

எனது பெயர் ஏ. எம். ஹர்ஷிகா பிரியதர்ஷினி. எனது கணவர் கொழும்பில் கொங்கிரீட் வேலைத்தளம் ஒன்றில் தொழில் புரிகிறார். சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை தான் அவர் வீடு வருவார். நாங்கள் எனது கணவரின் பெரியம்மாவுக்குச் சொந்தமான காணியில் 10 க்கு 10 அடி கொண்ட சிறியதோர் வீட்டை அமைத்து வாழ்ந்து வந்தோம். திடீரென கொரோனா தொற்று நோய் பரவ ஆரம்பித்து, ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது. இரண்டு மாதங்களாக எனது கணவர் வீடு வந்திருக்கவில்லை. சம்பளம் கிடைக்காத காரணத்தினால் வீடு வர வழியில்லை என்று அவர் தெரிவித்திருந்தார். அவர் கொழும்பிலே அடைபட்டு வீட்டுக்கு வர முடியாமல் ஆகிவிட்டது. வீட்டிலே உணவுப்பொருள் எதுவுமே இருக்கவில்லை. சீனி ஒரு துளி கூட இல்லை. குறைந்தது குப்பி விளக்கை பற்ற வைக்கவாவது மண்ணெண்ணெய் சிறிதும் இருக்கவில்லை. எங்களுக்கென்று கழிவறை இல்லாத காரணத்தினால் நாங்கள் எனது கணவரின் பெரியம்மா வீட்டாரின் கழிவறையைத் தான் பயன்படுத்தி வந்தோம். அவர்கள் கழிவறைக்குப் பூட்டுப் போட்டு நாம் அதனைப் பயன்படுத்த முடியாதவாறு செய்துவிட்டனர்.

நான் என்னுடைய இரண்டு குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு என்னுடைய தாய் வீட்டுக்குப் போனேன். அங்கு இரண்டு வாரங்கள் வரை இருந்துவிட்டு, பிள்ளைகளுடைய ஆடைகளை எடுத்துச் செல்வதற்காக எனது வீட்டுக்கு வந்தேன். எங்கள் வீட்டுக்கு உறுதியான கதவு இருக்கவில்லை. அப்புறப்படுத்தும் பலகைகளை இணைத்து, ஆணி அடித்து செய்துகொண்ட ஒரு கதவு தான் இருந்தது.

நான் வீட்டுக்குச் சென்ற போது கதவு திறந்து காணப்பட்டது. காற்றின் காரணமாக அவ்வாறு நடந்திருக்கலாம் என்று நான் நினைத்தேன். குழந்தைகளின் சில பொருட்களை எடுத்துக் கொண்டு கதவை மூடிவிட்டு நான் மீண்டும் எனது தாய் வீட்டுக்குச் சென்றேன். சுமார் ஒரு கிழமைக்கு பின்னர் எனது தாய் வீட்டுக்கு போலீசார் வந்து, திருட்டுத்தனமாக கசிப்பு உற்பத்தி செய்ய எனது வீட்டைக் கொடுத்திருப்பதாகக் கூறி எனக்கு ஏசினர். நான் இல்லாத சந்தர்ப்பங்களில் இரவு வேளைகளில் எனது வீட்டை கசிப்பு தயாரிப்பதற்காக பயன்படுத்தி இருப்பதாகவும் மீண்டும் அவ்வாறான சட்ட விரோத செயல்கள் ஏதும் இடம்பெற்றால் நான் அதற்கு வகை கூற வேண்டி ஏற்படும் என்று கூறி எச்சரித்து விட்டு அவர்கள் சென்றனர்.

பின்னர், இரவு வேளையில் எனது வீட்டை சோதித்த போலீஸ் அதிகாரிகள் வீட்டினுள் கசிப்பு தயாரிப்பில் ஈடுபட்டிருந்த நால்வரைக் கைது செய்து அழைத்துச் சென்றிருப்பதாக சுமார் ஒரு கிழமைக்குப் பின்னர் நான் கேள்விப்பட்டேன். அன்றிரவே சுமார் இரவு 12.05 மணி ஆகும் போது எனது கணவனின் பெரியம்மாவின் மகள்மார் எனது தாய் வீட்டுக்கு வந்து, நான் போலீசுக்கு தகவல் கொடுத்திருப்பதாகக் கூறி மிக மோசமாக எனக்கு ஏசினர்.

என்னை மீண்டும் எனது வீட்டுக்கு வர அனுமதிப்பதில்லை என்று அச்சுறுத்தினர். கசிப்பு தயாரிப்பதாக போலீசுக்கு தகவல் கொடுத்தது நான் என அவர்கள் எண்ணினர். இருப்பினும் அது பற்றி நான் எதுவும் அறிந்திருக்கவில்லை. அடுத்த நாள் காலை நான் எனது பிள்ளைகள் இருவரையும் அழைத்துக்கொண்டு எனது வீட்டுக்குப் போனேன். அச்சந்தர்ப்பத்தில் எங்களுடைய

சிறிய வீடு உடைத்து தரைமட்டமாக்கப்பட்டிருந்தது. உண்மையில் மிக மோசமானதொரு அநியாயம் எங்களுக்கு எதிராக இழைக்கப்பட்டிருந்தது.

வேறு வழியின்றி எஞ்சியிருந்த பொருட்களைப் பொதி செய்து கொண்டு எனது தாய் வீட்டுக்கு வந்தேன். நான்கு மாதங்களுக்குப் பிறகு எனது கணவர் வீடு வந்தார். என்றாலும் எனது தாய் வீட்டாரும் வரவர எங்களை மோசமாக நடத்தத் தொடங்கினர். பிள்ளைகளை மோசமான வார்த்தைகளால் ஏசத் தொடங்கினர். தலையில் குட்டினர். அச்சுறுத்தத் தொடங்கினர். இந்த அட்டுழியங்களைப் பொறுத்துக்கொள்ள முடியாத நிலையில் நானும் எனது கணவரும் அரச காணி ஒன்றில் மண்ணினால் சுவர் அமைத்து அதைச்சுற்றி பொலித்தீன் கூரை அமைத்து குழந்தைகளை உறங்க வைக்க ஒரு குடிசையை அமைத்துக் கொண்டோம்.

என்றாலும் ஐந்து தினங்களுக்குள் மகாவலி அதிகாரிகள் வந்து சட்டவிரோத கட்டிடங்கள் நிர்மாணிக்க வேண்டாமென்று எச்சரித்துவிட்டு எமது வீட்டை தரைமட்டமாக்கினர். அதன் பின்னர் நாம் அருகில் இருந்த அரச மரம் ஒன்றின் கீழ் எங்கள் பகல் நேரத்தைக் கழித்துவிட்டு இரவு வேளைகளில் தரைமட்டமாக்கப்பட்ட எமது வீட்டின் எஞ்சியிருந்த தூண் ஒன்றில் பொலித்தீனைக் கட்டி அதன்கீழ் உறங்கினோம்.

எங்களுக்கு யாரும் உதவ முன்வரவில்லை. இரண்டு தினங்களை நாங்கள் உணவு ஏதுமின்றிக் கழித்தோம். தண்ணீர் மாத்திரமே எங்களுக்குக் கிடைத்தது மூன்றாவது நாள் அருகில் இருந்த கடையொன்றில் இருந்து ஒரு சாப்பாட்டுப் பார்சல் கிடைத்தது. அதனை பிள்ளைகளுக்கு சாப்பிடக் கொடுத்து விட்டு நாங்கள் இருவரும் பசியோடு இருந்தோம்.

பல நாட்கள் கழிந்திருந்தாலும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் யாரும் எங்களுடைய சுகதுக்கங்களைப் பற்றி விசாரிக்க வரவில்லை. இறுதியாக நாம் இருவரும் பிரதேச செயற்திட்ட அதிகாரியைச் சந்தித்து எமது பிரச்சினையை முன் வைத்தோம். எமது பிரச்சினையை அவதானமாக செவியேற்ற அந்த அதிகாரி, தேர்தல் அலுவல்கள் முடிவுறும் வரை சனசமூக நிலையத்தின் பார்வையாளர் அரங்கில் தங்குவதற்கு அனுமதி தந்தார். எங்கள் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளும் நின்று போயுள்ளன. நாம் மிகவும் இக்கட்டான நிலைமையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

**கதையை சமர்ப்பித்தவர் வண.**
**சந்துன்புரா ரேவத்தலங்கர ஸ்தாவிரா | கம்பஹா மாவட்டம்**

## அழகுமிகு கொனகலகல...

கோவிட் கொள்ளை நோய் காலத்தில் எங்கள் பிரதேச மதத் தலைவர்கள் மேற்கொண்ட அரும் பணிகளை வார்த்தைகளால் எழுதி வர்ணிக்க முடியாது. பௌத்தம், இந்து, கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாம் ஆகிய இந்நாட்டின் பிரதான மதங்கள் நான்கையும் சேர்ந்த மத குருக்கள் இந்நோயிலிருந்து மக்களைப் பாதுகாக்க முன்வந்தார்கள். தத்தமது மத அனுஷ்டானங்களையும் நம்பிக்கைகளையும் ஒருபுறம் வைத்துவிட்டு அவர்கள் ஒரே நாடு, ஒரே மக்கள் என்ற உணர்வோடு சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ற வகையிலே மேற்கொண்ட தலையீடு காரணமாக அளப்பரிய சேவைகளை அவர்களால் செய்ய முடிந்தது. உண்மையில் இது அவர்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து மேற்கொண்ட முதலாவது கைங்கரியம் அல்ல. நீண்டகாலமாக சர்வோதய சாந்தி சேனா அமைப்போடு இணைந்து செயற்படுகின்ற இப் பிரதேச மதத் தலைவர்கள் சர்வோதய எண்ணக்கருவுக்கு ஏற்ப ஊர், ஊராகச் சென்று அனைவருக்கும் சேவை புரிவதற்கு எப்பொழுதும் தயாராக இருக்கின்றனர். கோவிட் கொள்ளை நோய் வருவதற்கு முன்பிருந்தே கண்டி மாவட்டத்தின் அக்குறணை பிரதேசம் பல்வேறு விடயங்கள் காரணமாக இலங்கை மக்களால் பேசப்படுகின்ற ஒரு பிரதேசமாகும். 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இரு சாராருக்கு இடையில் ஏற்பட்ட முறுகல் நிலைமைகளின் விளைவாக ஏற்பட்ட துர்ப்பாக்கிய நிலை காரணமாக அக்குரணைப் பிரதேசத்தில் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இன, மத பேதமின்றி அச்சந்தர்ப்பத்திலும் சமூக அமைதியைக் காக்க முன்வந்தவர்கள் சர்வோதய எண்ணக்கருவின் அடிப்படையில் வார்த்தெடுக்கப்பட்ட இளைஞர்கள் மற்றும் மூத்தவர்களை உள்ளடக்கிய இந்த சர்வ மதத் தலைவர்கள் தான். நிதமும் தமக்கிடையே சந்திப்புக்களை ஏற்படுத்தி தமது பிரதேச மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைத் தேடும் இந்த சர்வமதக் குழுவுக்கு மோதல் தவிர்ப்பு சம்பந்தமான பரந்த அறிவும் அனுபவமும் இருக்கிறது.

கோவிட் என்பதும் ஒருவகையில் வாழ்வுக்கும் மரணத்துக்கும் இடையிலான ஒரு போராட்டம் என்று அர்த்தப்படுத்தப்பட முடியும். திடீரென நடைமுறைப்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் காரணமாக முழு நாட்டு மக்களும் செய்வதறியாத ஒரு நிலைக்கு உட்பட்டனர். இவ்வைரஸினால் பாதிக்கப்பட்ட சில நோயாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டமையால் அக்குரணை பிரதேசம் முழுமையாக முடக்கப்பட்டது. இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து, வருகின்ற - போகின்ற அனைத்துப் பாதைகளையும் மூடிவிட்டனர். வீடுகளில் இருந்து வெளியேற முடியாமல் பிரதேசவாசிகள் தங்கள் வீடுகளுக்குள் முடக்கப்பட்டார்கள்.

**சத்தானந்த மகா பிரிவெனாவின் தலைவர் சங்கைக்குரிய கொனகலகல உதித்த தேரர் அவர்கள்.......**

உண்மையில் அரசாங்கம் திடீரெனத்தான் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தியது. எவ்வித முன்னறிவிப்பும் இருக்கவில்லை. அரசாங்கத்துக்கும் செய்வதற்கு வேறொரு வழி இருக்கவில்லை. அச்சந்தர்ப்பத்தில் எங்கள் பிரிவெனாவில் கல்வி பயிலும் இளம் மதகுருமார் சுமார் 80 பேர் வரை இருந்தனர்.

முன்பு எங்களுக்கு தான தர்மங்கள் செய்த மக்கள் காட்டு வழிகளில் எங்கள் விகாரைக்கு வந்து தங்களது பிரச்சினைகளை முன்வைத்தனர். சிறிதளவு உணவைப் பெற்றுக் கொள்ள, மருந்துகள்

இருக்கின்றனவா? என்று கேட்க, அவசரத்துக்கு சிறு தொகை பணம் பெற்றுக்கொள்ள என்று மக்கள் எங்கள் விகாரையை நோக்கி படையெடுத்தனர். அச்சந்தர்ப்பத்தில் நான் எங்களுடைய விகாரையில் அவசர தேவைக்காகப் பாதுகாத்து வைத்திருந்த பணத்தை பலருக்கு வழங்கினேன். அவ்வாறு வந்தவர்களில் அதிகமானவர்கள் அரச உத்தியோகம் புரிபவர்களும் தனியார் துறையில் உயர் தொழில்கள் செய்பவர்களுமாவர். அவர்களது பணம் வங்கியில் இருந்தாலும் எவ்வாறு அவர்களால் வங்கிக்குச் செல்ல முடியும்?

இச்சந்தர்ப்பத்தில் எமது பிரதேசத்துக்கு வெளியிலிருந்து பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் வருகை தந்தனர். அவர்கள் அனைவருக்கும் சேர்த்து விகாரையில் தங்குமிட வசதிகள் செய்து கொடுக்க வேண்டியேற்பட்டது. தண்ணீர் பிரச்சினை தான் எம்மை பெரிதும் பாதித்தது. ஊருக்குள் வரும் வழியில் மூன்று அல்லது நான்கு காவலரண்கள் இருந்ததனால் வியாபாரிகள் யாருமே கிராமத்திற்குள் வரத் தயங்கினர். ஊர்வாசிகள் சிலர் வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டிய நோய் ஒன்று ஏற்பட்டாலும் கூட விகாரைக்குத்தான் வந்தார்கள். அச்சந்தர்ப்பத்தில் எங்கள் பக்தர்கள் யாருடையவாவது வாகனத்தை ஏற்பாடு செய்ய முடியும். என்றாலும் கிராமத்தில் இருந்து வெளியே செல்வதற்கான வழிமுறை எதுவும் இருக்கவில்லை. ‘‘முடக்கம்’’ என்பதை முழுமையாக அனுபவித்தவர்கள் நாங்கள். எமது விகாரையில் தங்கியிருக்கின்ற யாருக்குமே இந்நோய் பீடிக்காது இருக்கத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் நாங்கள் செய்தோம். சமையல் எரிவாயு மற்றும் தேங்காய் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் பற்றாக்குறை ஒன்று ஏற்படப் போகிறது என்பதை அறிந்த நாங்கள் உரிய அதிகாரிகளுக்கு அதுபற்றி தெரிவித்தோம். பெரும் பிரயத்தனம் செய்து அந்தத் தேவைகளை பூரணப்படுத்திக்கொண்டோம்.

**அக்குரணை விலானகம என்ற ஊரில் வசிக்கும் யூ. எஸ். எஸ். எம் ஹுசைன் அவர்கள்........**

(இவர் கொனகலகல உதித்த தேரர் அவர்களது நெருங்கிய நண்பரும் பிரதேச மக்களால் முன்னெடுக்கப்படும் சர்வமத சமாதானச் செயற்பாட்டில் ஒரு முக்கிய அங்கத்தவரும் ஆவார்.)

நாங்கள் முதலில் செய்த வேலை தூரப் பிரதேசங்களில் இருந்த எங்கள் பிள்ளைகளை ஊருக்கு வரும்படி அழைப்பு விடுத்தோம். இவ்வாறான அனர்த்த நிலைமை ஒன்றின் போது குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் ஓரிடத்தில் இருப்பது உண்மையில் மனதுக்கு ஆறுதல் அளிக்கக் கூடியதாகும். நாங்கள் கலந்துரையாடி ஒரு கிழமைக்குப் போதுமான உலர் உணவுகளை களஞ்சியப்படுத்திக் கொண்டோம். என்றாலும் இப்பிரச்சினை ஓரிரு வாரங்களில் முடிந்து விடாது என்று நாங்கள் உணர்ந்து கொண்டோம். நாங்கள் இளைஞர்கள் சிலரை வீட்டுக்கு அழைத்து சிறு கலந்துரையாடல் ஒன்றை நடத்தினோம். இச்சந்தர்ப்பத்தில் மார்க்க வழிகாட்டல்களின் பிரகாரம் நாம் எடுக்க வேண்டிய தீர்மானங்கள் என்ன என்பது பற்றிக் கலந்துரையாடினோம். பிறகு தூரத்தில் இருக்கின்றவர்களுக்கு நாங்கள் எப்படி ஒரு சக்தியாக மாற முடியும் என்பது பற்றி தேடிப் பார்த்தோம். எங்களுக்கு இருந்த மிகப்பெரிய பிரச்சினை குடிநீருக்கான பற்றாக்குறையாகும். எங்கள் ஊரை ஊடறுத்து ஒரு சிற்றாறு ஓடுகிறது. நாங்கள் சிறியவர்களாக இருக்கும்போது அவ்விடத்தில் தான் குளித்தோம். தற்போது அது காடு மண்டிக் காணப்படுகிறது. நாங்கள் எங்கள் பிள்ளைகளை ஒன்றிணைத்து இந்த குளிக்கும் இடத்தை துப்புரவு செய்தோம். ஒன்று சேர வேண்டாம் என்று தடை செய்யப்பட்டிருந்த ஒரு சந்தர்ப்பத்திலாயினும் கிராமத்தின் அத்தியாவசியத் தேவைக்காக மக்கள் ஒன்று சேர்ந்த பொழுது அனைவரது உள்ளங்களிலும் புது சக்தி பிறந்தது.

நாங்கள் எங்களுடைய கொனகலகல தலைமைப் பிக்குவோடு கதைத்து, விகாரையும் பள்ளிவாயிலும் இணைந்து ஆதரவற்ற குடும்பங்களுக்கு உதவுகின்ற வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டும் என்று தீர்மானித்தோம். உண்மையில் நாங்கள் எந்தளவு தூரத்திற்கு இதுபற்றி சிந்தித்தோம் என்றால் வீண் விரயங்களைக் குறைத்து கிராம மக்களது காணிகளில் விளைந்த மரக்கறிகள், பழங்கள் ஆகியவற்றை கிராம மக்கள் அனைவரும் பயன்படுத்தும் வகையில் அவற்றைப் பாதுகாத்துக்கொள்வது பற்றி நாங்கள் கலந்துரையாடினோம். நாங்கள் இதுபற்றி தூர நோக்கோடு சிந்தித்து, கைவிடப்பட்டிருந்த எங்கள் பிரதேச வயல்களில் மரக்கறி பயிரிட்டோம். எங்களுடைய பௌத்தத் துறவிகளும் முஸ்லிம் மௌலவிமார்களும் இவ்வாறான நெருக்கடி நிலைமை ஒன்றின் பொழுது எளிய முறையிலே எங்களுடைய வாழ்க்கையை எவ்வாறு அமைத்துக்கொள்ள வேண்டும் என்பது பற்றிய மதப் போதனைகளை மக்களுக்கு முன்வைத்தார்கள்.

**சங்கைக்குரிய உதித்த தேரர் அவர்கள்**

எங்களிடம் ‘‘அக்குறணை பிரதேச நல்லிணக்க சபை’’ என்கின்ற ஒரு அமைப்பு இருக்கிறது இப்போது அதற்கு 20 வயது ஆகிறது. உண்மையில் இது ஒரு சர்வமத அமைப்பாகும். நெருக்கடி மிக்க அச்சந்தர்ப்பத்தில் நாம் தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொண்டு ஒவ்வொருவருடையவும் இன்ப துன்பங்கள் பற்றி தேடிப் பார்த்தோம். எங்களுக்குக் கிடைத்த உலர் உணவுகளை முடியுமான வகையில் எங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டோம். விசேடமாக முஸ்லிம் வீடொன்றில் ஒரு பிரச்சினை ஏற்பட்டால், ஒரு மரணம் நிகழ்ந்தால் அது பற்றி எங்களுடைய விகாரைக்கு தெரியப்படுத்தினார்கள். அச்சந்தர்ப்பத்தில் நாங்கள் உடல் ரீதியாக தூரமாக இருந்தாலும் ஒன்றுபட்ட ஒரே உள்ளத்தால் தீர்மானங்களை எடுத்தோம்.

உண்மையில் கோவிட் கால ஊரடங்குச் சட்ட நிலைமையின் போது தான் மத நல்லிணக்கத்தை நாங்கள் முழுமையாக அனுபவித்தோம்.

**திரு ஹுசைன் அவர்கள்**

பசிக்கு இனமத பேதம் இல்லை. நாங்கள் அனைவரும் உணரும் பசி ஒன்று தான். கொனகலகல தலைமைப்பிக்குவிடம் ஒரு சிறந்த திட்டமிடல் இருந்தது. அக்குறணையில் நல்ல பலம் வாய்ந்த முதலாளிமார், பணக்காரர்கள் இருக்கின்றனர். நாங்கள் அவர்களோடு கதைத்து அத்தியாவசிய உணவுப்பொருட்களைத் தந்துதவுமாறு கோரிக்கை விடுத்தோம். உண்மையில் நாம் கதைத்த அனைவருமே மறு பேச்சின்றி இந்தப் பணிக்கு உதவ முன் வந்தார்கள். எங்கள் இளைஞர்கள் ஒன்று கூடி உலர் உணவுப் பொருட்களைப் பொதி செய்யும் பணியை சிறந்த முறையிலே மேற்கொண்டு அவற்றை பங்கீடு செய்தார்கள். உண்மையில் பாகம் பிரித்துக் கொள்கின்ற ஒரு விடயம் அங்கே நடக்கவில்லை. யாருக்குத் தேவையோ அவர்களுக்கு பொருள்கள் வழங்கப்பட்டன.

எங்கள் ஊர் பெண் ஒருவர் ஒரு குழந்தையைப் பிரசவித்தார். ஓரிரு நாட்களில் குழந்தை இறந்துவிட்டது. நாம் உடனடியாக உரிய அதிகாரிகளுக்கு அது பற்றி தெரியப்படுத்தினோம். தலைமைப் பிக்கு அவர்கள் தலையிட்டு அந்தக் குழந்தையின் இறுதிச் சடங்குகளைச் செய்ய வேண்டிய முறை குறித்து கலந்துரையாடினார்.

அன்று நாட்டில் நடைமுறையில் இருந்த சட்டதிட்டங்களுக்கு ஏற்ப இறுதிச் சடங்குகளைச் செய்ய வேண்டும் என்று நாம் அனைவரும் கருத்தொருமித்து எந்தளவு கவனமாக நாங்கள் நடந்து கொண்டோம் என்றால், மரணித்த அந்தப் பிள்ளையின் உடலைக் கழுவிய ஒரு சொட்டு நீராவது அடுத்தவர்களின் மேலில் படாத வண்ணம் நாங்கள் வகை பார்த்துக் கொண்டோம்.

உண்மையில் அந்தக் காலத்தில் நாங்கள் செயற்பட்ட விதம் குறித்து ஒரு புத்தகம் வேண்டுமென்றாலும் எழுத முடியும். உண்மையில் இன மத நல்லிணக்கம் என்றால் என்ன என்று முழு நாட்டுக்கும் சொல்லும் தரமான முன்மாதிரி மிக்க ஒரு கதை எங்களிடம் இருக்கிறது.

**சங்கைக்குரிய கொனகலகல உதித்த தேரர் அவர்கள்**

அக்குரணை சம்பந்தமாகப் பரவிய நிறைய செய்திகள் உண்மையானவை அல்ல. அவற்றில் அதிகமானவை கட்டுக்கதைகள், பச்சைப் பொய்கள். நாங்கள் ஒரு நாட்டின் ஒரு இன மக்கள் போல சமாதானமாக எங்களுடைய நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது பிரதான தளத்தில் செயற்படுகின்ற ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்கள் ஊடாக வதந்திகள் மின்னல் வேகத்தில் பரவின.

உண்மையில் அது மிகவும் மோசமான ஒரு விடயம். நாங்கள் முடக்க நிலைக்கு உட்பட்டு, இன, மத, குல, பேதங்கள் அனைத்தையும் மறந்து ஒரு தாய் பிள்ளை போல நடந்து கொண்ட சந்தர்ப்பத்தில் அது தொடர்பாக நாட்டிலே வேறு விதமான செய்திகள் தான் பரவின. அதிர்ஷ்டம் என்னவென்றால் நாம் அந்தக் கட்டுக்கதைகளை எல்லாம் மீறி எங்கள் குடும்பத்தின் சமாதானத்தையும் ஐக்கியத்தையும் பாதுகாத்துக் கொண்டோம்.

நாங்கள் தெளிவான சிந்தனையோடு இவ்வாறு செயற்படாது இருந்தால் நிலைமை வேறு விதமாக மாறுவதற்கு இடம் இருந்தது. இப்பொழுது கொள்ளை நோய் கட்டுப்பாட்டுக்குள் வந்திருக்கிறது. என்றாலும் எங்களுக்கு மத்தியில் ஊற்றெடுத்த அன்பு கரை கடந்து ஓடுகிறது. உண்மையில் அது எவ்வளவு மகிழ்ச்சிக்குரிய விடயம்!....

**கதையை முன்வைத்தவர்:**
**ஜி.எஸ்.டி தில்ஷானி மற்றும் யசிந்தா அபேசிங்க I கண்டி மாவட்டம்**


ROSHINI

# இத்தாலியில் இருந்து நரகத்துக்கு...

எனது பெயர் ரோஷினி பெரேரா. எனக்கு இப்பொழுது 49 வயதாகிறது. எனது மூத்த மகனின் வயது 16. இரண்டாவது மகனின் வயது 10. நான் இத்தாலியில் இருந்தேன். 2010ஆம் ஆண்டு நான் நிரோஷ் என்பவரை திருமணம் செய்து கொண்டேன். அவர் அங்கிருக்கும் போது நான் என்னுடைய இரண்டு மகன்மாருடனும் இலங்கை வந்தேன். 2017 ஆம் ஆண்டு அவரது வற்புறுத்தலின் பேரில் மீண்டும் இத்தாலி சென்றேன். கோவிட் தொற்றுநோய் இத்தாலியைப் பெரிதும் பாதித்தது.

அத்தொற்று நோய் மிக வேகமாகப் பரவும் போது பெப்ரவரி மாதம் முழு இத்தாலியும் மூடப்பட்டது. மக்கள் தங்கள் தொழில்களை இழந்தனர். பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டன. நாங்கள் வீட்டுக்குள் முடக்கப்பட்டோம். நாளுக்கு நாள் இந்த நெருக்கடி தீவிரமடையும் போது எங்களால் எதுவும் செய்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. என்னுடைய மூத்த பிள்ளைக்கு சுவாசிப்பது சற்று சிரமமான ஒரு நிலைமை ஏற்கனவே இருந்தது. அவருக்கு ஆஸ்மா நோய் ஓரளவுக்கு இருந்தது. அது குறித்து நாங்கள் அதிகம் பயந்தோம்.

இதற்கிடையில் இலங்கையிலிருந்து வரும் விமானங்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டன. துபாய் நாட்டின் விமான சேவை நிறுவனம் ஒன்று மார்ச் மாதம் 12ஆம் திகதி தங்களது இறுதி விமானப் பயணத்தை ஏற்பாடு செய்வதாக எங்களுக்குத் தகவல் கிடைத்தது. குழந்தைகள் இருவரையும் அழைத்துக்கொண்டு இலங்கைக்குச் செல்லுமாறு என்னுடைய கணவர் என்னை வற்புறுத்தினார். அவர் அங்கு தொழில் செய்து கொண்டிருந்தபடியால் அவர் அங்கு தங்குவதற்கு முடிவு செய்தார். நான் எந்தவித முன் ஆயத்தமும் இன்றி பிள்ளைகள் இருவரையும் அழைத்துக்கொண்டு 12ஆம் திகதி இரவு மிலானோவிலிருந்து புறப்பட்டேன்.

துபாய் விமான நிலையத்தில் அடுத்த விமானம் வரும் வரை பத்து மணித்தியாலங்கள் நாங்கள் அடைபட்டு இருந்தோம். எங்களோடு இருந்த அனைவருமே தங்களது பிள்ளைகளை பாதுகாத்துக் கொள்வதற்காக வேண்டி எமது தாய் நாட்டுக்கு வருவதற்காக புறப்பட்டவர்கள். நாங்கள் துபாயில் இருந்து மாலைத்தீவு வழியாக இலங்கையில் தரையிறங்கினோம். விமானம் தரை இறங்கிய உடனேயே, இத்தாலியில் இருந்து வந்தவர்கள் தங்களது ஆசனங்களில் தரித்து இருக்கும்படியும் ஏனைய நாடுகளில் இருந்து வந்தவர்கள் விமானத்தில் இருந்து இறங்கும் படியும் கூறப்பட்டது. இராணுவ அதிகாரிகள் வந்து எங்களை வேறு வாயில் ஒன்றின் ஊடாக வெளியே எடுத்தனர். எங்களுடைய பயணப் பொதிகள் அனைத்தும் தொற்று நீக்கம் செய்யப்பட்டு ஓரிடத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தன.

அதன் பின்னர் எங்கள் அனைவரையும் பஸ்வண்டிகளில் ஏற்றிக் கொண்டு பூனானி தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். 14 நாட்கள் தனிமைப்படுத்தல் நிலைமையில் இருந்துவிட்டு அங்கிருந்து மீண்டும் நாங்கள் எங்கள் வீடுகளை நோக்கிப் புறப்பட்டோம். நாங்கள் தனிமைப்படுத்தல் செயன்முறைக்கு உட்படுத்தப்பட்டமை பற்றிய சான்றிதழ் அரசாங்கத்தால் எமக்கு வழங்கப்பட்டது. நாங்கள் யக்கல பொலிஸ் நிலையத்துக்கு வந்தோம். எங்கள் உறவினர்கள் வந்து எங்கள் மூவரையும் வீட்டுக்கு அழைத்துச் சென்றனர்.

நாம் எமது வீட்டுக்குச் சென்று பத்து நிமிடங்களின் பின் கிராம அலுவலர் எமது வீட்டுக்கு வந்தார். எங்களுக்கு நோய்த்தடுப்புச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்த போதும் ஊரடங்குச்சட்டம் அமுலாக்கப் பட்டிருந்த அக்காலத்தில் மேலும் 14 நாட்கள் வீட்டுக்குள்ளேயே தரித்து இருக்குமாறு அறிவுறுத்தல் வழங்கினார். எனது மூத்த மகனுக்கு ஆஸ்மா நோய்ப் பிரச்சினை இருந்த காரணத்தால் சுகாதார அதிகாரிகள் நிதமும் எங்கள் வீட்டுக்கு வந்து அவரைப் பரிசோதித்தனர். எங்கள் வீட்டைச் சுற்றி ஒரு மதில் இருக்கிறது. என்றாலும் எனது பிள்ளைகள் இருவரும் வீட்டின் முற்றத்துக்கு வந்த அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் எங்கள் அயல் வீட்டார் பொலிசுக்குத் தகவல் கொடுப்பவர்களாக இருந்தனர். பொலிஸ் அதிகாரிகள் ஐந்து முறை எங்கள் வீட்டுக்கு வந்தனர். அயலவர்கள் எம்மை கொரோனா நோயாளர்கள் போல் சித்தரித்து நிதமும் குறை கதைக்கத் தொடங்கினர். யாருமே எங்களுக்காக முன் வந்து எங்கள் சார்பில் ஒரு வார்த்தையாலேனும் எங்களுக்கு ஒரு உதவி செய்யவில்லை.

ஒரு நாள் எங்கள் வீட்டுக்கு முன்னால் பெரியதோர் குப்பைக் குவியல் குவிக்கப்பட்டிருந்தது. அயல் வீட்டார் எங்களோடு சண்டைக்கு வந்தனர். அது பற்றி முறையிட நான் பொலிஸ் நிலையத்திற்கு சென்ற போதும் பொலிஸ் அதிகாரிகளும் எங்களை கொரோனா தொற்றாளர்கள் என்று கணித்து எங்களோடு மிகவும் மோசமான முறையில் நடந்துகொண்டனர்.

எனக்கு மினுவாங்கொடையில் ஒரு தோழி இருக்கிறாள். அவர் நிதமும் என்னோடு கதைப்பவராக இருந்தார். அவருடைய சகோதரர் ஓர் பொலிஸ் உயரதிகாரி. உணவு, பானங்கள் மற்றும் உலர் உணவுப் பொருட்கள் ஆகியவற்றை அவர் ஊடாகவே வரவழைத்துக் கொண்டேன். அவர்களுடைய கருணை கிடைக்கவில்லை என்றால் நானும் எனது இரண்டு பிள்ளைகளும் பெரிதும் சிரமப்பட்டு இருப்போம். உண்மையில் எனது பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளைத் தொடரும் எதிர்பார்ப்பிலேயே நான் இலங்கை வந்தேன். என்றாலும் அந்த வாய்ப்பு எங்களுக்கு கிடைக்கவில்லை. இப்பொழுது எனது கணவரும் தொழிலை இழந்துள்ளார். நானும் எனது பிள்ளைகளும் பெரும் மன உளைச்சலுக்கு ஆளாகி இருக்கிறோம். இப்பொழுது நாங்கள் நாம் வாழும் வீட்டை விட்டு வேறொரு பிரதேசத்திற்கு செல்லத் தீர்மானித்து இருக்கிறோம். மனிதர்கள் இந்தளவு தூரம் இரக்கமின்றி நடந்து கொள்வார்கள் என்று நாம் கனவிலும் நினைத்திருக்கவில்லை.

கதை சொன்னவர்: எம். டபிள்யு. ஏ. எச். விஜேசூரிய | கம்பஹா மாவட்டம்

# ஐயோ இப்படியும் ஆண்கள்.....

எனது பெயர் நிலூகா சந்தமாலி. எனது கணவர் தச்சு வேலை செய்பவர். எங்களுக்கு இரண்டு குழந்தைகள் இருக்கின்றனர். மூத்தவர் பாடசாலை செல்கிறார். இளையவர் முன்பள்ளி போகிறார். நாங்கள் எங்கள் வாழ்க்கையை சிரமங்களோடு தான் நகர்த்திக் கொண்டிருந்தோம். எனது கணவரது நாளாந்த வருமானம் ரூபா 2,500 ஆகும். அதுவும் வேலை கிடைத்தால் மாத்திரம் தான். அப்படி இருந்தாலும் அவர் வீட்டுச் செலவுக்கு ரூபா 500 தான் தருவார். அவர் அதிகமாக சிகரெட், மதுபானம் அருந்துவார். கோவிட் நோய் வருவதற்கு முன்பிருந்தே அவர் எனக்கு அடிப்பதும் திட்டுவதும் வழமையாக இருந்தது. பிள்ளைகளுக்கும் அதிகம் ஏசுவார். தந்தை என்றாலும் பிள்ளைகள் அவரைக் கண்டு மிகவும் பயப்படுவார்கள். கொரோனா காலத்தில் அவருக்கு தொழில் இல்லாமல் போனது அதனால் நாளுக்கு நாள் எமது வாழ்க்கை கஷ்டம் நிறைந்ததாக மாறியது.

ஏப்ரல் 18 ஆம் திகதி எனது மூத்த பிள்ளைக்கு காய்ச்சல் ஏற்பட்டது. பெனடோல் மாத்திரையைக் கொடுத்தாலும் கூட காய்ச்சல் குறையவில்லை. குழந்தைக்கு பாரதூரமான நோய் பீடித்து விட்டதோ என்று நான் அதிகம் பயந்தேன். எனது தவறின் காரணமாகத் தான் குழந்தைக்கு நோய் ஏற்பட்டிருக்கிறது என்பது போல ஊரில் இருந்தவர்கள் எனக்கு அதிகம் அதிகம் ஏசினார்கள். கையில் சிறிதளவு கூட பணம் இருக்கவில்லை. என்னுடைய கணவர் சமந்தவுக்கு இதுபற்றி எவ்வித கரிசனையும் இருக்கவில்லை. அவர் காலையிலேயே மீன் பிடிப்பதற்கு என்று வயலுக்குச் சென்று விடுவார்.

எவ்வளவுதான் கெஞ்சிக் கேட்டபோதும் ஊரிலே யாரும் ஒரு சதம் கூட கடன் தர முன்வரவில்லை. மிகவும் சிரமப்பட்டு ஆயிரம் ரூபா கடனுக்கு பெற்றுக்கொண்டேன். தெரிந்த ஒருவரின் முச்சக்கர வண்டியில் குழந்தையை அழைத்துக்கொண்டு கம்பஹா வைத்தியசாலைக்குச் சென்றேன். மாலை 05 மணியாகும் வரை குழந்தையை வைத்தியசாலையில் வைத்துக் கொண்டிருந்தேன். பெரிய வைத்தியர் வந்து பார்த்துவிட்டு இது கோவிட் நோய் அல்ல என்று கூறி வீடு செல்ல அனுமதித்தார்.

அக்காலப்பகுதியில் நாடு முழுவதிலும் தொடர் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தது. பாதைகளெல்லாம் வெறிச்சோடிப் போய் இருந்தன. வீடு செல்ல எந்த ஒரு வாகனமும் கிடைக்கவில்லை. வைத்தியசாலையிலிருந்து எனது ஊருக்கு சுமார் 07 கிலோ மீட்டர் வரை செல்ல வேண்டும். நான் தன்னந்தனியே குழந்தையையும் சுமந்துகொண்டு அந்தளவு தூரத்தையும் நடந்து வீட்டுக்கு வந்தேன். வரும்பொழுது பாதை நெடுகிலும் சத்தமிட்டு அழுத வண்ணமே வீடு வந்தேன். வீடு வந்ததும், ‘‘இவ்வளவு நேரம் என்ன செய்தாய்?’’ என்று கேட்டு கணவர் சமந்த எனக்கு ஏசினார். ‘‘குழந்தையை ஏன் வீட்டுக்கு அழைத்து வந்தாய்?’’ என்று கூறி ஊரவர்களும் எனக்கு ஏசினர். அப்பொழுது குழந்தைக்கு கோவிட் நோய் இல்லை. சாதாரண காய்ச்சல் தான் என்று கூறி எங்களை வீடு செல்ல அனுமதித்ததாக அவர்களுக்கு நான் தெளிவுபடுத்தினேன். என்றாலும் அவர்கள் என்னுடைய பேச்சை ஏற்றுக் கொள்ளவில்லை. வீட்டை விட்டு வெளியே இறங்காமல் இரண்டு கிழமைகள் வீட்டுக்குள்ளேயே இருக்க வேண்டும் என்று அவர்கள் எம்மை அச்சுறுத்தினர். உண்மையில் தனிமைப்படுத்தலுக்கு உட்பட்டவர்கள் போல நாம் வீட்டுக்குள் முடக்கப்பட்டோம். அதிர்ஷ்டவசமாக எனது மகனின் வகுப்பாசிரியர் எங்களுக்கு இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை உணவுப்பொருள் பொதிகளை அனுப்பினார். கிராம அலுவலரும் உலர் உணவுப்பொருட்கள்

தந்தார். சமுர்த்திக் கொடுப்பனவும் கிடைத்ததால் ஒருவாறாக வாழ்க்கையை ஓட்டிச் செல்ல முடிந்தது. என்றாலும் இவ்வளவு நடந்தும் எனது கணவன் ஏறெடுத்தும் எங்களைப் பார்க்கவில்லை. ஆண் இனத்தையே வெறுக்கும் நிலைக்கு நான் தள்ளப்பட்டுள்ளேன்.

கதையை சமர்ப்பிப்பவர்: ஷியாமலி குருப்பு I கம்பஹா மாவட்டம்



## சுப மங்களம் - இனிய திருமண நல் வாழ்த்துக்கள்!...

இது சிறியதொரு திரைப்படக் கதையாகும். ஆனால் சிறிபால மற்றும் ரண்மனிக்கா ஆகியோரது உண்மைச் சம்பவத்தை அடிப்படையாக கொண்ட திரைப்படமாகும். பெண் இராஜாங்கனையைச் சேர்ந்தவர். ஆண் கெக்கிராவையைச் சேர்ந்தவர்.

பெண்ணின் பெயர் மாலினி. ஆணிண் பெயர் காமினி. அவர்கள் இணைந்தது அனுராதபுரம் தொழிநுட்ப கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் போது. சில காலம் சென்ற பின்பு நன்றாக பழகினார்கள். இவ் இருவருடைய காதல் கதை அநுராதபுரத்திலிருந்து மிகிந்தலைக்கு, அங்கிருந்து சீகிரிய பக்கத்திற்கு, சீகிரியாவிலிருந்து தலாவைக்கு, பின் தம்புத்தேகமவுக்கும், விலேச்சியவிற்கும், மதவாச்சிக்கும் தீ போன்று பரவி விட்டது. இரண்டு பக்கமும் விருப்பம். இறுதியாக கல்யாணம் முடிவாகிவிட்டது. கற்கைநெறி முடியும் வரைக்கும் அவசரப்பட வேண்டாம் என அறிவுறை வழங்கப்பட்டது. பெண்ணின் தந்தை கொடுத்த காணியில் இரண்டு பேரும் வீடு ஒன்றை அமைக்க ஆரம்பித்தார்கள். பெண்ணின் தோட்டத்தை சுற்றி இருந்த தேக்கு மரத்தை வெட்டி கதவு, ஜன்னல் செய்வதற்கு கெக்கிராவைக்கு அனுப்பி வைத்தார்கள். கற்கைநெறி முடிந்ததும் மாலினி எச்.என்.டி செய்ய ஆரம்பித்துவிட்டார். ஆண் வேலை செய்வதற்கு கொழும்பிற்கு வந்துவிட்டார். சில மாதங்கள் கடந்தது. ஐயோ காமினி மாலினியை விட்டு விட்டு கீதாவை கல்யாணம் கட்டி விட்டார். இப்படியும் மோசமான ஜாதி.

இறுதியில் மாலினிக்கு அரசாங்க வேலை கிடைத்துவிட்டது. வேலை செய்யுமிடத்தில் இருக்கிறார் விஜய். இருவரும் மூலை முடுக்கில் ரகசியம் பேசிக்கொள்வார்கள். சிறிய சிறிய பரிசுகளையும் பரிமாறிக்கொள்வார்கள். இப்படியாகப் போய் ஜூலை 23 என திருமண நாளும் குறிக்கப்பட்டது. அடக் கடவுளே! கோவிட் வந்து இராஜாங்கனையை லொக் டவுன் செய்து விட்டார்கள். ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்கு செல்வது தடைசெய்யப்பட்டிருந்தது. மாலினிக்கு தலை சுற்ற ஆரம்பித்துவிட்டது. விஜய் குருணாகலையைச் சேர்ந்தவர். எப்படி அங்கே போவது? விஜயின் குடும்பத்தினர் என்ன லொக் டவுன் இருந்தாலும் கல்யாணம் நடந்தே ஆக வேண்டும் என கூறினார்கள். மாலினியும் விடுவதாக இல்லை.

மாலினி பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் கண்களுக்கு மண்ணைத் தூவிவிட்டு இராஜாங்கனையிலிருந்து தப்பி ஓடி மாவட்டத்தின் எல்லையை கடந்துவிட்டார். இருவரும் முகூர்த்த நேரத்திற்கு மணவறையில் ஏறுகிறார்கள். சிங்கள மங்கல பாடல் பாடி கைகள் இணைக்கப்பட்டன. புதிய தம்பதிகள் பல்லாண்டு வாழட்டும்.

**கதையை முன்வைத்தர் :**
**ஷலினி நிஷாதி கோடகொட | அநூராதபுரம் மாவட்டம்.**

# கடற்படையைச் சேர்ந்த எனது மகனுக்கு நேர்ந்த துன்பம்.

எனது குடும்பத்தில் மூன்று ஆண் பிள்ளைகள் இருக்கின்றனர். மூத்த பிள்ளை கடற்படையில் பணி புரிகிறார். இக்கொள்ளை நோய் ஆரம்பித்த சந்தர்ப்பத்தில் எனது மகன் வெலிசறை கடற்படை முகாமில் பணியாற்றிக் கொண்டிருந்தார். அதிக பணிகள் இருந்த காரணத்தினால் ஊரடங்குச் சட்ட காலத்தில் எனது மகனுக்கு விடுமுறை எடுக்க முடியவில்லை.

என்றாலும் அவர் புது வருடம் கழித்து ஏப்ரல் 19ஆம் திகதி வீடு வந்தார். எனது மகன் பொதுவாகவே எமது அயலவர்களுடன் சிறந்த நட்பைப் பேணி வந்த, சமூக மயப்பட்ட ஒரு இளைஞன். ஏனைய நாட்களைப் போலவே அயலவர்களுடன் சிறந்த முறையில் கதைத்துப் பேசிய வண்ணம் நமது வீட்டின் நிர்மாணப் பணிகளில் தனது விடுமுறையை கழிக்கத் தொடங்கினார். அதாவது வீட்டை மேம்படுத்தும் பணிகளை செய்யத் தொடங்கினார்.

நாங்கள் நாள் தவறாமல் தொலைக்காட்சி செய்திகளை பார்ப்பவர்களாக இருந்தோம். அப்போதுதான், வெலிசறை கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படை வீரர்கள் மூவருக்கு கொரோனா நோய் ஏற்பட்டு இருப்பதாக எங்களுக்குத் தெரிய வந்தது. நாளுக்கு நாள் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது.

அச்சமயம் விடுமுறையில் இருந்த கடற்படை அதிகாரிகளுக்கு எங்கும் ஒளிந்து கொள்ள வேண்டாம் எனவும் தங்கள் தொடர்பான தகவல்களை உடன் அறியத்தரும் படியும் அரசாங்கம் கட்டளையிட்டது. அப்பொழுது பொது சுகாதார அதிகாரி வந்து வீட்டின் உள்ளேயே இருந்து சுய தனிமைப்படுத்தலில் ஈடுபடுமாறு எனது மகனுக்கு அறிவுறுத்தினார். எங்கள் வீட்டு முன்புறத்தில் அது தொடர்பான அறிவித்தலையும் அவர்கள் ஒட்டினர். தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தியபோதும் எவ்விதமான நிவாரணங்களையும் எங்களுக்குப் பெற்றுத் தரவில்லை. அதனால் நாங்கள் மிகவும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டோம். பொது சுகாதார அதிகாரிகள் மூலம் எங்களுக்கு ஏதும் நிவாரணங்களைப் பெற்றுத் தருமாறு நாங்கள் மிகவும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டோம். என்றாலும் எங்களுக்கு எவ்வித உதவியும் கிடைக்கவில்லை. அரை மணித்தியாலத்துக்கு ஒரு தடவை கைகளை கழுவிக் கொள்ளுங்கள் என்று அறிவுறுத்தல் கிடைத்தாலும் தண்ணீர் பிரச்சினை நிலவிய காரணத்தினால் அவ்வாறு எங்களால் செய்ய முடியாமல் போனது. அச்சந்தர்ப்பத்தில் பிரதேச சபைத் தலைவருக்கும் எங்களுக்கும் இடையில் ஒரு பிரச்சினையும் ஏற்பட்டது.

உண்மையில் அது மிகவும் துர்ப்பாக்கியமான ஒரு நிகழ்வு. கடற்படை வாகனம் ஒன்று வந்து மகனை தனிமைப்படுத்தல் முகாமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பாடசாலை ஒன்றுக்கு அழைத்துச் சென்றனர். இக்காலப்பகுதியில் அதிகமானவர்கள் எங்களோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டனர். நாங்கள் அறியாதவர்கள் கூட தொலைபேசி மூலம் கதைத்து எங்களிடம் விவரங்களைக் கேட்டார்கள்.

மகன் தனிமைப்படுத்தல் முகாமுக்கு சென்று ஒரு நாள் கழித்து எங்களுக்கு ஒரு தொலைபேசி அழைப்பை எடுத்து, உங்களையும் தனிமைப்படுத்தலுக்காக திருகோணமலைக்கு அழைத்துச் செல்ல வருகிறார்கள், நீங்கள் எதற்கும் பயப்படத் தேவையில்லை, அங்கே போவதற்கு நீங்கள் தயாராக இருங்கள் என்று கூறினார்.

உண்மையில் நாங்கள் மிகவும் குழம்பிப் போனோம். யாது செய்வதென்று அறியாமல் திகைத்துப் போனோம். என்றாலும் அந்தப் பயணத்திற்குத் தேவையான மிக முக்கியமான பொருட்களை மாத்திரம் ஏற்பாடு செய்து கொண்டு அங்கு செல்ல நாங்கள் தயாரானோம். என்றாலும் எங்களுடைய சுக துக்கங்களைப் பற்றி தேடிப்பார்க்க எங்கள் அயலவர்கள் யாருமே முன்வரவில்லை.

ஒரே ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மாத்திரம் வந்து எங்களோடு கதைத்துவிட்டு, பாதுகாப்பாக போய் வாருங்கள் என்று சொன்னார்கள். அது மாத்திரம் தான். பல வருடங்களாக எம்மோடு பழகிய எமது கிராம மக்கள் அனைவருமே எங்களை ஓரம் கட்டினார்கள். வாழ்க்கையில் முதல் முறையாக, எங்களுக்கு இருப்பது நாங்கள் மாத்திரம் தான் என்று நாங்கள் புரிந்து கொண்டோம். கடற்படையினர் வந்து எங்களை முதலில் மாத்தளை நகருக்கு அழைத்துச் சென்றனர். இன்னும் சில குடும்பங்களும் மாத்தளையில் எங்களோடு பயணத்தில் இணைந்து கொண்டனர். எனது மகன் கடற்படை அதிகாரிகளுக்கு தொலைபேசியில் கதைத்து, எங்கள் குடும்பத்தில் யாருக்குமே தொற்று நோய் ஏற்படாத காரணத்தினால் எங்களை தனியான ஒரு வாகனத்தில் அழைத்துச் செல்லும்படி கேட்டிருந்தார்.

அந்த வேண்டுகோளை செவிமடுத்து எங்களை தனியான வாகனத்தில் அழைத்துச் சென்றனர். தனிமைப்படுத்தலுக்கு எங்களுக்காக அழகான இரண்டு அறைகள் கொண்ட வீடு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கடற்கரையில் அமைந்திருந்த அந்த வீட்டில் நாங்கள் கழித்த காலம் உண்மையில் மிகவும் இன்பமான முறையிலே எங்களுடைய வாழ்க்கையை கழித்த காலம் என்று எங்களால் சொல்ல முடியும்.

தனிமைப்படுத்தல் நடவடிக்கைகள் முடிவடைந்து நாம் மீண்டும் வீடு வரும்போது எங்களுக்கு உலர் உணவுப் பொதி ஒன்றும் கிடைத்தது. உண்மையில் அது மிகவும் முழுமையான ஒரு பொதி. குறைவில்லாமல் பொருட்கள் அதிலே இடப்பட்டிருந்தன. எனது மகனுக்கும் எங்களில் யாருக்கும் கோவிட் நோய் இருக்கவில்லை என்ற சான்றிதழ் கிடைத்தது. நோய் ஏற்படாமலேயே எங்களை ஓரம் கட்டிய, எங்களுக்குத் தொந்தரவு தந்த நபர்கள் உண்மையில் எங்களுக்கு கோவிட் தொற்று ஏற்பட்டிருந்தால் எங்களை எப்படி கவனித்திருப்பார்கள்? உண்மையில் மனிதர்களைப் பற்றிய சிறந்த பாடம் ஒன்றை கற்பதற்கு எங்களுக்கு கிடைத்த சந்தர்ப்பம் தான் இது.

**கதையை முன்வைத்தவர்:**
**கே தம்ம ரதன தேரர் I மாத்தளை மாவட்டம்**



# கரை வலை மூலம் கரை சேர்ந்த சஞ்சீவ

நான் சுரேஷ் சஞ்சீவ. கல்பிட்டியில் பிறந்தேன். நான் என்னுடைய இளமைக் காலம் முதலே நீர்கொழும்பில் தான் இருந்தேன். கரை வலை மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகிறேன். முன்பு நாங்கள் காலையிலேயே வீடுகளுக்குச் சென்று மனிதர்களை அழைத்து வந்து வருமானத்தில் அரைவாசியை வழங்கும் அடிப்படையில் தான் கரை வலை மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டோம். காலம் செல்லச் செல்ல அந்த முறைமையில் இந்தத் தொழிலைச் செய்ய முடியாமல் போனது. மனிதர்கள் யாரும் வேலைக்கு வருவதில்லை. அதனால் நான் ஊழியர்களுக்கு என்னுடைய வாடியில் தங்குமிட வசதிகள் செய்து கொடுத்தேன். என்னுடைய வாடியில் ஊழியர்கள் பத்துப் பதினைந்து பேர் மட்டில் வேலை செய்தனர். நான் டிரக்டர் ஒன்றையும் பயன்படுத்தி வலை இழுப்பதால் தான் அவ்வாறு சிறிய தொகையினரை வைத்து கரை வலைத் தொழிலை என்னால் செய்ய முடிந்தது. இன்றேல் கரை வலை இழுக்கக் குறைந்தது இருபத்தைந்து பேராவது தேவை.

என்றாலும் இறுதியில் அத்தொழிலைக் கூடச் செய்து கொள்ள முடியாத நிலை உருவானது. கொரோனா தொற்று நோய் ஆரம்பித்த மார்ச் மாதத்தில், மனிதர்களை ஒன்று சேர்க்க வேண்டாம் என்று அரசாங்கம் எங்களுக்கு எச்சரிக்கை விடுத்தது. கரை வலை இழுக்க மனிதர்கள் பலர் ஒன்று சேர்வதால் அந்நடவடிக்கையை நிறுத்துமாறு அரசாங்கம் எங்களுக்கு எச்சரிக்கை விடுத்தது. அதன் பின்னர் எனது ஊழியர்களை அவர்களது வீடுகளுக்கு அனுப்பி வைத்தேன். அதையும் மிகுந்த சிரமத்திற்குப் பின்னர் தான் என்னால் செய்ய முடிந்தது. கையிலிருந்த பணத்தை செலவழித்துத் தான் அவர்களுடைய சம்பள நிலுவைகளைக் கொடுக்க முடிந்தது.

இந்த ஊரடங்குச் சட்ட நிலைமை கூடுதலாகப் பாதித்தது கரை வலைத் தொழிலில் ஈடுபட்டவர்களைத் தான். பலநாள் மற்றும் டிங்கி வள்ளங்களைப் பயன்படுத்தி ஆழ்கடல் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுத்துவோருக்குப் பிரச்சினைகள் ஏதும் ஏற்படவில்லை. கரை வலை மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவது வேறொரு பிரிவினராவர். கரை வலைக் கைத்தொழிலில் ஈடுபடுபவர்களில் 10 வீதமானோர் மாத்திரம் தான் சிறிய வள்ளங்களில் செல்கின்றனர். அன்றேல் அவர்கள் கரையில் தான் நிற்பர். சிறிய வள்ளங்களில் சென்று தொழில் செய்ய முடியாது. அவர்கள் ஹெரோயின் மற்றும் வேறு போதைப் பொருட்கள், போதை வில்லைகள் போன்றவற்றுக்கு அடிமையானவர்கள். பலநாள் மற்றும் டிங்கி வள்ளங்கள் போன்றவற்றில் பயணிப்பதற்கு அவர்கள் பயப்படுகிறார்கள். இது உண்மையில் மிகவும் கவலைக்குரிய ஒரு விடயம். ஏனெனில் இவ்வாறு பாதிக்கப்பட்டு இருப்பது எங்கள் நாட்டின் சிறந்த இளைஞர் படையணி என்பது மிகவும் கவலைக்குரிய விடயம்.

கடல் என்பது நாங்கள் நினைத்ததை எல்லாம் அள்ளித்தரும் ஓர் இடம் அல்ல. சில சந்தர்ப்பங்களில் நாங்கள் எதிர்பார்த்ததைவிட அதிகமாகக் கிடைக்கும். வேறு சில சந்தர்ப்பங்களில் நாம் நினைத்தது எதுவுமே கிடைக்காமல் போகும். மீனவத் தொழிலில் ஈடுபடுவது என்றால் பின்வாங்க முடியாது. முன்னோக்கிச் செல்ல வேண்டும். எதிர்கொள்கின்ற எந்த நிலைமைக்கும் முகம் கொடுக்கத் தயாராக இருந்து கொண்டு தான் இத்தொழிலில் ஈடுபடுகிறோம். டிங்கி வள்ளங்களில் மீன்பிடித் தொழில் செய்பவர்களுக்கும் பிரச்சினைகள் ஏற்பட்டன.

கொரோனா நோய் நிலைமை காரணமாக கம்பெனிகள் மற்றும் நாடுகள் மீன் உற்பத்திகளைக் கொள்வனவு செய்யவில்லை. சாதாரண காலங்களில் நாங்கள் 4000 ரூபாய்க்கு விற்ற மீன்களை

1500 ரூபாவுக்குக் கூட விற்க முடியாத நிலை ஏற்பட்டது. இப்பொழுது ஓரளவு மீன் பற்றாக்குறையாகக் காணப்படுகிறது. இலங்கை பொதுவாகவே மீன் அதிகமாகக் கிடைக்கும் ஒரு நாடாகும். எமது கடலிலே இருக்கும் மீனைக் கூட நாங்கள் அதிக விலை கொடுத்துத் தான் வாங்க வேண்டி இருக்கிறது.

இது முழு உலகையுமே பாதித்த ஒரு விடயம் என்பதால், நாங்கள் அரசாங்கத்துக்கு எந்த ஒரு அழுத்தத்தையும் பிரயோகிக்க முடியாது. எங்களுக்கு நிவாரணங்கள் தாருங்கள், அதைத் தாருங்கள், இதை தாருங்கள் என்று கேட்க முடியாது. இவ்வாறான அனர்த்த நிலைமை ஒன்றின் போது அவ்வாறு கோரிக்கை விடுப்பது தவறாகும். சாதாரணமாக நாள் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் செலவழித்து ஒரு குடும்பத்தை நடத்தி வந்தோம் என்றால் இப்பொழுது அவ்விதம் செய்ய முடியாது. இப்பொழுது செலவைக் குறைத்து சுமார் 600 ரூபாவால் எங்கள் குடும்பத்தை நிர்வகிக்க நாங்கள் பழகிக் கொள்ள வேண்டியிருக்கிறது.

மீனவர்கள் என்பவர்கள் நன்கு சாப்பிடும், அருந்தும் மனிதர்கள். அன்றைய தினத்தை மட்டுமே அவர்கள் பார்ப்பார்கள். மீனவர்களுக்கு ஏராளமான பிரச்சினைகள் காணப்படுகின்றன. உண்மையில் இது நாங்கள் எதிர்பார்க்காத ஒரு பிரச்சினை. நாங்கள் பல்வேறு பாடங்களைக் கற்றுக் கொள்ளவும் இது ஒரு சிறந்த சந்தர்ப்பம்.

உண்மையில் ஒரு சுனாமி வந்தது போன்ற நிலைமை தான் இது. இப்பொழுது மீனவர்களும் எதிர்காலம் குறித்து சிந்தித்து செயற்பட பழகிக் கொள்ள வேண்டி இருக்கிறது. இது சிறியதாக நினைத்துக் கொள்ள முடியுமான ஒரு பிரச்சினை அல்ல. ஒரு வகையில் நாங்கள் சந்தோஷப்பட வேண்டும், இப்படியாவது நாங்கள் தப்பித்துக் கொண்டிருக்கிறோமே என்று.

இந்த பிரச்சினை ஏற்பட்டது என்பதற்காக நான் கரை வலை மீன்பிடித் தொழிலை விட்டுவிட மாட்டேன். ஆரம்பித்த தொழிலை என்ன தான் பிரச்சினைகள், தடைகள் வந்தாலும் முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டும். கடலோடு போராடும் எங்களுக்கு இது உண்மையில் இது ஒரு சிறிய பிரச்சினை தான். எப்படி இருப்பினும் நான் இப்பொழுது என்னிடம் வேலை செய்த நபர்களோடு கதைத்து இருக்கிறேன். கடன்பட்டாவது நான் அவர்களை வரவழைத்துக் கொள்வேன். எனக்கு ஒரு வாடி இருப்பது ஓரளவுக்கு ஆறுதலாக இருக்கிறது.

நான் என்னுடைய உள்ளத்தை திடப்படுத்திக் கொண்டு தொழிலை ஆரம்பித்தால் தான் சுமார் 15 குடும்பங்கள் வாழ முடியும்.

எப்போது தொழிலை ஆரம்பிப்பது என அவர்கள் இப்போதும் என்னிடம் தொலைபேசி மூலம் கேட்கின்றனர். நான் அவர்களுக்குச் சொல்லி இருக்கிறேன் இறை அருளால் அக்டோபர் மாதம் ஆகும் போது மீண்டும் எங்களால் கரை வலை மீன்பிடித் தொழிலை ஆரம்பிக்க முடியும் என்று. உள்ளம் உறுதியாக இருந்தால் எதனைத் தான் செய்ய முடியாது. கோவிட் நோய் வரும், போகும். ஆனால் நாம் தொடர்ந்தும் வாழ்வோம்.

**கதையை முன்வைத்தவர் :**

**தியாகா சந்தன ‌।  கம்பஹா மாவட்டம்**

## பொலிசார் சொல்வது சரியா? அல்லது PHI சொல்வது சரியா?

நான் இராணுவத்தில் கடமையாற்றி தற்போது ஓய்வு பெற்று இருக்கிறேன். எனது வீட்டின் ஒரு பகுதியை (இணைப்பை) ஒரு தம்பதியினருக்கு வாடகைக்கு விட்டு இருக்கிறேன். அவர்களில் ஆண் வெலிசறை கடற்படை முகாமுக்கு அருகில் இருக்கும் லங்கா முகாமில் பணியாற்றுகிறார். கொரோனா தொற்று நோய் பரவிய சந்தர்ப்பத்தில் வெலிசறை கடற்படை முகாமுக்கும் அந்நோய் பரவியது. விடுமுறைக்காக வீடு சென்ற கடற்படை வீரர்களால் இந்நோய் முழு நாட்டுக்கும் பரவும் என்ற அச்சத்தில் தத்தமது ஊர்களுக்குச் சென்ற கடற்படை வீரர்கள் குறித்து மக்கள் சந்தேகக் கண் கொண்டு பார்க்கத் தொடங்கினர். நானும் 22 வருடங்கள் இராணுவத்தில் சேவையாற்றி விட்டு ஓய்வு பெற்றுள்ள ஒரு அதிகாரி என்ற வகையில் இவ்வாறு வேறுபாடு காட்டுவது குறித்து நான் பெரிதும் கவலைப்பட்டேன். எங்கள் வீட்டின் இணைப்பில் தங்கியிருந்த தம்பதியினருக்கு ஒன்பது மாதம் வயது கொண்ட ஒரு ஆண் பிள்ளையும் இருக்கிறது.

உண்மையில் அந்த வீட்டு இணைப்பை பணம் உழைக்கும் நோக்கத்தில் நான் அவர்களுக்குக் கொடுக்கவில்லை. மனிதாபிமான அடிப்படையில்தான் கொடுத்து இருக்கிறேன். நானும் சீருடை அணிந்த ஒருவன். அந்த இருவரும் இதே ஊரைச் சேர்ந்தவர்கள். உண்மையில் இது அவ்விருவரும் பிறந்த ஊர். எனது ஊர் காலி. இங்கு வந்து  சுமார் 18 வருடங்கள் ஆகின்றன. ஊர் மக்களோடு ஒற்றுமையாக இருப்பதற்கு நான் எப்பொழுதும் முயற்சி செய்பவன்.

அந்த நாட்களில் தொலைக்காட்சி அலைவரிசைகளிலும் பத்திரிகைகளிலும், பேஸ்புக், வாட்ஸ்அப் போன்ற சமூக வலைத்தளங்களிலும் கடற்படையினர் பற்றிய கதையைத் தவிர வேறு ஒன்றும் இருக்கவில்லை. இவற்றில் வெளியிடப்பட்ட அனேகமான செய்திகள் ஒவ்வொருத்தருடைய மன எண்ணங்கள் மாத்திரமே. அரசாங்கமும் அவற்றைக் கட்டுப்படுத்த சரியான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. அக்காலத்தில் அவர்களுடைய தலை தீப்பற்றி எரிந்த காரணத்தினால் அரசாங்கத்துக்கு குறை கூறியும் பயனில்லை.

இப்பிரச்சினை வந்த பிறகு ஒரு நாள் இரவுச் செய்திகளில் வெலிசறை முகாமில் இருந்தவர்களுக்கு கொரோனா நோய் தொற்றி இருக்கிறபடியால் விடுமுறையில் சென்றவர்கள் உடனடியாக அறிவிக்க வேண்டும் என்று ஒரு செய்தி வாசிக்கப்பட்டது. நான் அந்த பிள்ளையிடம் அது பற்றிக் கேட்ட பொழுது, ''ஐயோ நான் அந்த முகாமில் இருக்கவில்லை. அதனால் எங்களுக்கு ஒரு பிரச்சினையும் இல்லை.'' என்று அவர் சொன்னார். ''நீங்கள் சந்தேகமின்றி இது பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் நான் ஒரு தொலைபேசி அழைப்பை எடுத்து விசாரித்துக் கொள்கிறேன்.'' என்றும் அவர் சொன்னார்.

நான் எதற்கும் எங்கள் சர்வோதய கொழும்பு மாவட்ட இணைப்பாளர் திரு இந்துனில் ஹித்தெடிய என்பவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு இதுபற்றிக் கேட்டேன். அவர் கடற்படை உயர் அதிகாரி ஒருவருடன் கதைத்துவிட்டு அவ்வாறான பிரச்சினை ஏதுமில்லை என்று உறுதிப்படுத்தினார். அந்தப் பிள்ளைக்கு கொரோனா தொற்று ஏற்பட்டு இருந்தாலும் எங்களுக்கு ஒரு பிரச்சினையும் இல்லை. என்னுடைய மனைவியும் அதிகம் கவலைப்பட்டார். ''நாட்டுக்காக தங்கள் உயிரை அர்ப்பணித்த போர் வீரர்களை இவ்வாறு குப்பைக் கூடையில் எறிவது கூடாத

செயல்'' என்று அவர் கூறினார். உண்மையில் அந்த சந்தர்ப்பத்தில் செய்திருக்க வேண்டிய வேலை கடற்படை வீரர்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருக்கிறது என்று பறையடிப்பது அல்ல.

கொரோனா நோய்த் தொற்று ஏற்பட்டவர்களை அனுதாபத்தோடு பார்த்து, அவர்கள் மீது கருணை காட்டும்படி தான் பிரச்சாரம் செய்திருக்க வேண்டும். இந்த இராணுவ வீரர்கள் காரணமாகத்தான் இந்த நாட்டு மக்கள் இன்று நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை மக்களுக்கு நினைவுபடுத்தி இருக்க வேண்டும்.

ஒருவாறாக நானாக முன்வந்து எங்கள் கிராம உத்தியோகத்தர் மற்றும் பொலிஸ் நிலையம் சர்வோதய அமைப்பைச் சேர்ந்த திரு இந்துனில் ஹித்தெடிய, பிரதேசத்துக்குப் பொறுப்பான பொது சுகாதார பரிசோதகர் ஆகியோருக்கு இதுபற்றி தெளிவூட்டினேன்.

நான் கொரோனா நோயாளி ஒருவரை மறைத்து வைத்துக் கொண்டிருப்பதாக ஊர்மக்கள் எனக்கு எதிராக குற்றம் சாட்டினர். நானோ எனது மனைவியோ அல்லது கடற்படையைச் சேர்ந்த அந்த வீரரோ அல்லது அவரது மனைவியோ கடைக்கு சென்றாலும் எங்களை மக்கள் சந்தேகத்தோடு பார்க்க ஆரம்பித்தார்கள். உண்மையில் மக்கள் அந்த நாட்களில் எய்ட்ஸ் நோயாளிகளை பார்ப்பது போலத்தான் எங்களைப் பார்த்தார்கள். உண்மையில் அதை விடவும் மோசமாக அவர்கள் எங்களைக் கணித்தார்கள் என்பதுதான் சரியான கணிப்பீடு.

மக்கள் எங்களை அருவருக்கத் தொடங்கினார்கள். அருகாமையில் வருவதற்கும் எங்களுடன் பேசுவதற்கும் பயந்தார்கள். நான் ஒரு முன்னாள் படைவீரர். எனது உள்ளம் திடமானது. நான் ஓய்வு பெற்றிருந்தாலும் இன்றும் தைரியமாக, ஆரோக்கியமாக இருக்கிறேன்.

எந்த ஒரு நிலைமை வந்தாலும் நாங்கள் இந்தப் பிள்ளையை கைவிட்டு விடுவதில்லை என்றும் ஊர்மக்களின் பழிச்சொற்களுக்கு இடம் வைப்பதில்லை என்றும் நான் எனது மனைவியிடம் கூறினேன்.

இச்சந்தர்ப்பத்தில் ஒரு நாள் பொது சுகாதார பரிசோதகர் வருவதாகச் சொன்னார். அவர் வருவதற்கு முன்னர், மீகொட பொலிஸ் நிலையத்திலிருந்து சாஜன் ஒருவர் வந்தார். அவர் பிரதான பாதையால் வராமல் வடிகான் ஒன்றின் வழியாக காட்டுப்பாதையில் தான் எங்கள் வீட்டுக்கு வந்தார். 25 மீட்டர் தூரத்தில் இருந்து கதைத்து விட்டு ஒரு பத்திரத்தை வைத்து விட்டுச் சென்றார். அந்தப் பத்திரத்தை வீட்டின் முன்னால் ஒட்டிக் கொள்ளும் படி கூறினார். நீங்கள் யாரும் வெளியே வரவேண்டாம் என்றும் சொன்னார். அப்பொழுது நான் அவரைப் பார்த்து, அறிவித்தல்களை ஒட்டுவது எனது பணி அல்ல. நீங்களே அதனை இங்கே ஒட்டுங்கள் என்று சொன்னேன். இந்த விபரங்களை நான் பொது சுகாதார பரிசோதகர்களுக்கு அறிவிக்கிறேன் என்றும் நான் அவரைப் பார்த்துச் சொன்னேன். இச்சந்தர்ப்பத்தில்தான் எரிகின்ற நெருப்பில் எண்ணெய் வார்த்தது போல ஒரு நிலை உருவானது. அந்தப் பொலிஸ் அதிகாரி, எங்கள் அயல்வீட்டார்களிடம், எங்கள் வீட்டாருக்கும் எங்களுடைய வீட்டின் இணைப்பில் குடியிருப்போருக்கும் கொரோனா தொற்று ஏற்பட்டிருக்கிறது என்றும், நாங்கள் எங்கள் வீடுகளை விட்டும் வெளியே வந்தால் தங்களுக்கு அறிவிக்கும்படியும் கூறி, தன்னுடைய தொலைபேசி இலக்கத்தையும் கொடுத்துவிட்டுச் சென்றுள்ளார்.

உண்மையில் இது மிகவும் பாரதூரமான ஒரு நிலைமை என்பதால் நான் அவருக்குக் குறை சொல்ல மாட்டேன். என்றாலும் எனக்கு இருக்கும் பிரச்சினை தனிமைப்படுத்தலை மேற்கொள்வது பொதுச் சுகாதார பரிசோதகரா? அல்லது பொலிசாரா? என்பதுதான். பொதுச்சுகாதார பரிசோதகர் அறிவித்துத் தான் பொலிசார் இந்த வேலையை செய்திருக்க வேண்டும். இறுதியில் நான் பொதுச் சுகாதார பரிசோதகரிடம் பொலிசார் இப்படியான ஒரு பத்திரத்தை தந்து விட்டுச் சென்றார்கள் என்பதாகக் கூறினேன். அச்சந்தர்ப்பத்தில் அவர் பொலிஸ் அதிகாரி தந்த அந்த அறிவித்தலை தன்னால் ஒட்ட முடியாது என்று சொன்னார்.

நான் என்னுடைய வீட்டின் இணைப்பை மாத்திரந்தான் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தினேன். அதுவும் கொரோனா நோய் காரணமாக அல்ல. அது குறித்த சந்தேகத்தின் காரணமாக. அவர் தன்னுடைய கடமையைச் செய்தார். அந்த பொலிஸ் அதிகாரி தந்து விட்டுச் சென்ற பத்திரத்தை ஒட்டுவதற்கு யாரும் இருக்கவில்லை. பின்னர் நான் அதனை ஓட்டினேன்.

பின்னர் மூங்கில் காட்டில் தீ பரவியது போல, எங்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டு இருக்கிறது என்பதாக ஊர் முழுக்க செய்தி பரவியது. வம்பு கதைப்பவர்களின் கதைகள் ரொய்ட்டர் செய்திச் சேவையை விடவும் பலம் மிக்கவை. நாங்கள் 14 நாட்கள் தனிமைப்படுத்தலில் இருந்தோம். ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட ஒரு தினத்தில் கொண்டுவந்த அரிசி மற்றும் மசாலா தூள்கள் போன்றவற்றை வைத்து நான்கு நாட்களைக் கடத்தினோம். அதன் பின்னர் தேங்காய்ச் சம்பலும் சோறும் சாப்பிட்டோம். என்றாலும் எங்கள் வீட்டின் இணைப்பில் இருந்த தம்பதியினருக்கு உலர் உணவுகள் இல்லை என்று தெரிய வந்தபோது நான் முன்னைநாள் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவருக்கு அது பற்றி அறிவித்தேன். அவர் உதவினார். பின்னர் எங்கள் சர்வோதய அமைப்பின் கொழும்பு மாவட்ட இணைப்பாளர் இந்துனில் தம்பி இடமும் நான் அது பற்றித் தெரிவித்தேன். அவர் சுமார் மூன்று நாட்கள் எங்கள் வீட்டுக்கு வந்தார். அவர் எவ்விதமான பயமும் சந்தேகமும் இல்லாமல் எங்கள் வீட்டுக்கு வந்து தேவையான உலர் உணவுகளை எங்கள் இரு குடும்பங்களுக்கும் பெற்றுத் தந்தார். உண்மையில் அதனை நான் பெரிதும் மதிக்கிறேன். அத்தோடு பிரதேச செயலகத்திலிருந்து அங்கு கடமை புரியும் திருமதி சாந்தி அவர்களிடமும் இது பற்றி தெரிவித்தேன். அவரும் இரண்டு நாட்களில் பொருட்களை எடுத்துக் கொண்டு வந்தார். என்றாலும் அவருக்கு நான் குறை சொன்னேன். ஏனெனில் இவ்வாறு தனிமைப்படுத்தல் மேற்கொள்ள வேண்டி இருந்தால், எங்களுக்கு சாப்பிட, குடிக்க ஏதும் இருக்கிறதா? என்பது பற்றி தேடிப் பார்க்க வேண்டும் என்று கூறினேன். குறிப்பாக பெண்களுக்கு விசேட தேவைகள் இருக்கின்றன. அவற்றையும் பார்க்க வேண்டும். அது பற்றி யாருமே எதையுமே கேட்கவில்லை. கேட்பதும் இல்லை. நான் அரசாங்கத்தைச் சாடுகிறேன் என்பதல்ல. என்றாலும் கிராம மட்டங்களில் இருக்கின்ற அலுவலர்கள் அங்கு என்ன குறைபாடுகள் இருக்கின்றன என்பதைத் தேடிப்பார்த்து விளங்கிக்கொள்ள வேண்டும்.

எங்கள் வீட்டின் இணைப்பில் வாழ்ந்த கடற்படை வீரர் கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்ட தனிமைப்படுத்தல் செயற்பாட்டை நிறைவு செய்துவிட்டு வீட்டுக்கு வந்தார். பொதுச் சுகாதார பரிசோதகர் கூறியபடி இங்கும் அவர் 14 நாட்கள் தனிமைப்படுத்தலில் இருந்தார். திரு குமார அவர்களே இந்த அறிவித்தலை ஒட்டிக் கொள்ளுங்கள். ஏனென்றால் இதனை ஒட்டா விட்டால் எனக்கு சான்றிதழைத் தர முடியாது என பொதுச் சுகாதார பரிசோதகர் என்னிடம் கூறினார். ‘‘பிரச்சினையில்லை உங்களுடைய கடமையை சரியாகச் செய்யுங்கள்’’ என்று நான் அவரைப் பார்த்துச் சொன்னேன். அதன்பின்னர் தான் அவர் சான்றிதழைத் தந்தார். பொலிசார் இந்தப்

பக்கத்துக்கும் வரவில்லை. அறிவித்தலை அகற்றுவதற்குக் கூட அவர்கள் வரவில்லை. பொதுச் சுகாதார பரிசோதகர் 14 நாட்களில் அந்த அறிவித்தலை அகற்றினாலும் அதனை இன்னும் சில காலம் வைத்துக்கொள்ள வேண்டும் என்று போலீசார் கூறினர். பொதுச் சுகாதார பரிசோதகர் அந்த அறிவித்தலை ஆறாம் திகதி தான் அகற்றினார். ஒன்பதாம் திகதி வரை அதனை வைத்திருக்க வேண்டும் என்று பொலிசார் சொன்னார்கள். நான் தீவிரமாக சிந்திக்கின்ற விடயம் என்னவென்றால் பொலிசார் சொல்வது சரியா? அல்லது பொதுச் சுகாதார பரிசோதகர் சொல்வது சரியா? என்பதாகும்.


NADEESHANI

# செல்வமே, உனக்காக சிந்திய கண்ணீர் பெரும் கடலை விடவும் அதிகம்.

எனது பெயர் நதிஷா காஞ்சனா. எனக்கு முப்பது வயது. எனது இரண்டாவது குழந்தைக்கான குழந்தைப் பேற்றுத் திகதி  மார்ச் 31 ஆம் திகதி என குறித்து வழங்கப்பட்டிருந்தது. மார்ச் 29ஆம் திகதி வைத்தியசாலையில் அனுமதி பெறுவது எனத் தீர்மானித்திருந்தோம். அவ்வாறு இருக்கும் போது தான் மார்ச் 28ம் திகதி அக்குரணை நகரிலிருந்து கொரோனா நோயாளி ஒருவர் கண்டுபிடிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து முழு அக்குரணை பிரதேசமும் முடக்கத்துக்கு உட்படுத்தப்படுகிறது. பிரதான நகரின் போதனா வைத்தியசாலைக்குச் செல்வதாகத் தான் நாங்கள் தீர்மானித்திருந்தோம். அன்று காலை பத்தரை மணி அளவில் நானும் எனது கணவனும் வைத்தியசாலைக்குச் செல்ல வெளிக்கிட்டோம். என்றாலும் அக்குரணை நகரின் ஊடாக செல்ல வேண்டியிருப்பதால் இராணுவத்தினர் எம்மை கொனகலகல கிராமத்தில் இருந்து வெளியே செல்ல அனுமதிக்கவில்லை.  எனவே நாங்கள் திரும்பிச் சென்று பங்கொள்ளாமட, ஜம்புகஹபிட்டிய ஊடாக வைத்திய சாலைக்குச் சென்றோம்.

இப்போது எனக்கு அந்த நிகழ்வை நினைத்துப் பார்க்கவும் விருப்பமில்லை. என்றாலும் இந்த விடயத்தை, எப்பொழுதாவது அனைவரும் தெரிந்து கொள்வதற்காக நாங்கள் பதிந்து வைக்க வேண்டும். நான் அந்த வைத்தியசாலையை எவ்வளவு வெறுக்கிறேன் என்றால் எந்த ஒரு காரணத்துக்காகவும் மீண்டும் ஒரு தடவை அந்த வைத்தியசாலைக்கு செல்லப் போவதில்லை என்று நான் உறுதி பூண்டு இருக்கிறேன். என்னை வைத்தியசாலையில் அனுமதித்த பின்னர் என் கணவரை வீடு செல்லும்படி பணித்தனர்.

பகல் ஒன்றரை மணி அளவில் வைத்தியசாலையில் அனுமதி பெற்ற நான், என்னை எனக்குரிய வார்டில் அனுமதிக்கும் வரை மூன்றரை மணி வரை ஒரு கதிரையில் உட்கார்ந்து காத்துக் கொண்டிருந்தேன். அந்த வார்டில் இருந்த அனைவரும் போல் முஸ்லிம் தாய்மார். அன்றைய நாட்களில் நிலவிய பீதி காரணமாக நான் முஸ்லிம் தாய்மாருடன் சேர்ந்திருக்கப் பயந்தேன். நான் அளவதுகொட பிரதேசத்தைச் சேர்ந்தவள் என்றாலும் என்னையும் அக்குறணை என்று கருதி, எங்கள் அனைவரையும் ஒரு வார்டில் அடைத்தனர். அக்குரணையிலிருந்து வரும் தாய்மாரை அனுமதிப்பதற்காக அந்த வார்டில் தனியான ஒரு பகுதி ஒதுக்கப்பட்டிருந்தது. அவர்களைப் பார்த்து "நீங்கள் உங்கள் பகுதியில் இருக்கும் கழிவறைகளைப் பயன்படுத்துங்கள். இந்தப் பக்கத்துக்கு வராதீர்கள்." என்று தாதியர் கூக்குரல் எழுப்பினர். அப்பொழுது எனக்கு ஒரு பெரும் பயம் ஏற்பட்டது. அக்குரணையில் இருந்து வந்திருந்தவர்களோடு சேர்ந்து இருப்பதனால் எனக்கும் கொரோனா நோய் வந்துவிடுமோ என்று எனக்கு பெரும் பயமாக இருந்தது. அதனால் நான் சற்றுத் தள்ளி இருந்த ஒரு கட்டிலில் போய் அமர்ந்து கொண்டேன். நான் ஒரு சிங்களத் தாயாக இருந்தாலும் என்னை ஏன் இவர்கள் இப்படி நடத்துகிறார்கள் என்று எண்ணி நான் கடுமையாக அழுதேன்.  அக்குரணையிலிருந்து வந்திருப்பவர்களுக்கு கொரோனா நோய் தொற்றி இருக்கலாம். அவர்களோடு ஒன்றாக இருந்து எனக்கு இந்நோய் ஏற்பட்டால் எனது குழந்தையையும் அது பாதிக்கும் என்று நான் கடுமையாக அச்சமுற்றேன்.

தாதியர் எங்களை பிடித்துப் பார்ப்பது எப்படிப் போனாலும் எங்கள் அருகில் வருவதற்கே தயங்கினார்கள். எனது உள்ளம் வெகுவாகப் பாதிக்கப்பட்டது ஒரு குழந்தையைப் பெற்றெடுக்கத் தயாராகும் போது உள்ளம் அமைதியாக இருக்க வேண்டும். என்றாலும் இங்குள்ள தாதியர் தாய்மாரை நடத்தும் விதத்தைப் பார்க்கும் பொழுது உள்ளத்தில் பெரும் கலக்கமே ஏற்படும். எனக்கு குழந்தைப் பேறுக்கான திகதி 30 ஆம் திகதி என குறிக்கப்பட்டிருந்தது. 30 ஆம் திகதி பரிசோதனைகளை நடத்தி முடித்தனர். 31 ஆம் திகதி காலை ஏழு மணி ஆகும் பொழுது தயாராக இருக்கும்படி கூறினர். என்னை சத்திர சிகிச்சை அறைக்குக் கொண்டு செல்லும் போது 8 மணி போல் இருக்கும். அச்சந்தர்ப்பத்தில் அக்குரணையில் இருந்து வந்த ஒரு முஸ்லிம் தாய்க்குக் குழந்தை கிடைத்து அவரை வார்டுக்கு அழைத்து வந்தனர். அந்த தாய்க்கு கோவிட் தொற்று இருக்கிறது என்று சந்தேகம் கொண்ட தாதியர் அந்தத் தாயையும் பிள்ளையையும் கையால் கூடப் பிடிக்கவில்லை. நான் வைத்தியசாலையில் அனுமதி பெற்ற தினத்திலிருந்து புதிதாய்ப் பிறந்த குழந்தைகளை தாதியர் பிடித்துக் கூடப் பார்க்கவில்லை.

சில தாய்மாரை வார்டுக்கு அழைத்து வரும்போது அவர்களது ஆவணங்களை அவர்களது உடம்பின் மீது தான் வைத்திருப்பார்கள். அப்போது ஆவணங்களை உடலிலே ஏன் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று தாதியர் ஏசத் தொடங்குவர். அந்தத் தாய்மாரை கணக்கெடுக்காத வகையில் மிகவும் மோசமாக அத்தாதியர் நடந்து கொண்டனர்.

என்னை சத்திரசிகிச்சை அறைக்கு அழைத்துச் சென்றனர். அங்கும் அக்குரணையில் இருந்து வருபவர்களுக்கு வேறான இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகக் கூறினர். அன்று காலை முதன் முதலில் சத்திரசிகிச்சை கூடத்திற்கு என்னைத் தான் உள்ளே எடுத்தார்கள். அங்கும் எங்களை வித்தியாசமாகத் தான் பார்க்கிறார்கள் என்று நான் உணர்ந்து கொண்டேன். நான் சத்தமிட்டு அழுதேன். எங்களுக்கு ஏன் இவ்வாறு பாகுபாடு காட்டுகிறீர்கள்? என்று நான் கேட்டேன். குழந்தைப் பேற்றுக்காகச் சென்ற எனக்கு அதிகம் வேதனை ஏற்பட்டது. மூச்சு எடுக்க முடியாத நிலைமையை உணர்ந்தேன். பின்னர் குழந்தை கிடைத்த பின்னர் என்னுடைய நோய் நிலைமை முற்றி ஆபத்தான நிலையில் தான் நான் இருந்திருக்கிறேன்.

சத்திரசிகிச்சை செய்கின்ற சந்தர்ப்பத்தில் கூடுதலாக இரத்தம் வெளியேறியதால் சத்திரசிகிச்சை கூடத்துக்குள் வைத்தே எனக்கு இரத்தம் ஏற்றியுள்ளனர். இத்தகைய பிரச்சினைகள் காரணமாக நான் உளரீதியாகவும் பலவீனமுற்றேன். அவ்வாறான மிக ஆபத்தான சந்தர்ப்பத்திலும் கூட தாதியர் வேண்டா வெறுப்போடு தான் என்னைத் தொட்டனர். குழந்தை பெற்ற ஒரு தாய் என்று பார்த்தாவது இந்த அலுவலர்களிடம் சிறிதளவு ஈவிரக்கம் இருக்கவில்லை.

குழந்தை பிறந்த பின்னர் ஒரு தாதி அடுத்தவர்களிடம், ‘‘இவர் அக்குரணையில் இருந்து வந்த ஒரு நோயாளி. இவரை இங்கிருந்து அழைத்துச் சென்ற பின்னர் இவர் பாவித்த அனைத்துப் பொருட்களையும் தொற்று நீக்கத்துக்கு உட்படுத்த வேண்டும்.’’ என்று சொல்வது என் காதில் விழுந்தது. ஒரு குழந்தையைப் பெற்றெடுத்த வேதனையில் இவ்வாறான ஒரு வார்த்தையை செவிமடுக்க வேண்டியேற்பட்டால் ஏற்படுகின்ற வேதனையை வார்த்தைகளால் வர்ணிக்க முடியுமா?. வைத்தியசாலையில் அனுமதித்த தினம் தவிர பின்னர் என்னைப் பார்க்க வர எனது கணவருக்கு முடியவில்லை.

நான் அந்த நாட்களில் வைத்தியசாலையில் வழங்கிய உணவை தான் சாப்பிட்டேன். நான் எனது வாழ்நாளில் முதல் தடவையாக வைத்தியசாலை உணவை உண்டு இருக்கிறேன். சில தினங்களில் எல்லா வார்டுகளுக்கும் பங்கிட்டு விட்டு எங்களுடைய வார்டுக்கு வரும்பொழுது உணவு முடிந்து இருக்கும்.

உணவு கேட்டு அங்கிருந்த பணியாளர்களிடம் ஏச்சுப் பேச்சு கேட்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

நாங்கள் அக்குரணையில் இருந்து வந்தவர்கள் என்பதால் உணவு விநியோக நேரத்தில் எங்களை கொச்சைப்படுத்தினர், துன்புறுத்தினர். எங்களை கொரோனா தொற்றார்கள் என்ற அடிப்படையிலேயே அவர்கள் நடாத்தினர். இது எனது இரண்டாவது குழந்தை. சாதாரணமாக ஒரு குழந்தையை பெற்றெடுத்த தாய்க்கு பெரும் மகிழ்ச்சி ஏற்படும். ஆனால் இந்த வைத்தியசாலை பணியாளர்களின் நடத்தை காரணமாக அந்த மகிழ்ச்சியை அனுபவிக்க என்னால் முடியவில்லை.

ஒரு குழந்தை பிறந்திருக்கிறது என்கின்ற சந்தோஷத்தை அனுபவிக்க நாங்கள் கொடுத்து வைக்கவில்லை. குழந்தை கிடைத்து முதல் நாள் தாதியர் என்னை சிறிதும் பொருட்படுத்தவில்லை.

எவ்வளவு தான் அவர்களிடம் மன்றாடிய போதும் அவர்கள் எங்களை கணக்கில் எடுக்கவில்லை. எவ்வளவு தான் கெஞ்சி, பணிவாக அவர்களிடம் வேண்டிக் கொண்ட போதும் அவர்கள் எங்களை கணக்கில் எடுக்கவில்லை. இரண்டாவது நாள், எனக்கு சற்று வேதனையாக இருக்கிறது, கஷ்டமாக இருக்கிறது என்னைப் பாருங்கள் என்று அடிக்கடி சத்தமிட வேண்டியேற்பட்டது. பசி தாங்க முடியாமல் ஒரு தாதியிடம், என்னுடைய பையிலே நெஸ்டமோல்ட் இருக்கிறது. அதனை எனக்கு ஊற்றித் தாருங்கள். தாகமாக இருக்கிறது என்று கூறினேன். ஆனால் அந்த தாதியர் இந்த எந்த வேண்டுகோளுக்கும் செவி சாய்க்கவில்லை. மார்ச் மாதம் 30ஆம் திகதி இரவு பத்து மணிக்கு சாப்பிட்ட பின்னர் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி பகல் வேளை வரும் வரை தண்ணீர் ஒரு மிடறு கூட எனக்குக் கிடைக்கவில்லை. என்னுடைய கணவர் வந்து சிறிதளவு சூப் புகட்டும் வரை நான் பசியில் தான் இருந்தேன்.

வைத்தியசாலையில் இருக்கும் போது நான் நிதமும் சமய சுலோகங்களை உச்சரித்த வண்ணம் இருந்தேன். நான் செய்த நற்பணிகளை, நன்மைகளை நினைவு கூர்ந்தேன். காலை, மாலை தவறாமல் புத்தரை வணங்கும் நாம் இருவரும் தெரிந்து யாருக்கும் எந்த தொந்தரவையும் விளைவித்தவர்கள் அல்ல. ரத்தின சூத்திரத்தின் பொருட்டால் என் பிள்ளை சிறந்த முறையில் பிறக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. அதனை வைத்து என்னுடைய உள்ளத்தை திடப்படுத்திக் கொண்டேன். அங்கு அதிகம் இருந்தவர்கள் முஸ்லிம் தாய்மார். அவ்வாறான சந்தர்ப்பத்தில் இனம், மதம் முக்கியமல்ல. நாங்கள் எல்லோரும் குழந்தைகளைப் பிரசவிக்க வந்த தாய்மார்கள். எங்கள் அனைவரையும் பாதுகாக்கும் படி நான் கடவுளிடம் வேண்டிக்கொண்டேன். நான் மார்ச் மாதம் 29 ஆம் திகதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அடுத்த மாதம் இரண்டாம் திகதி தான் அங்கிருந்து வெளியேறினேன். என்னுடைய டிக்கட் வெட்டுவதற்காக வந்த பெரிய வைத்தியர் அங்கிருந்தவர்களிடம் ஏன் இந்தத் தாயை இங்கே ஒதுக்கி வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டார். சிறிய வைத்தியர் பதில் கொடுத்தாரா? என்பது எனக்குத் தெரியாது. தாதியரிடம் கேட்க வேண்டும் என்று சொல்லியிருப்பார் போல. அப்பொழுது, ''இந்தத் தாதிமாருக்கு பைத்தியம் பிடித்திருக்கிறது.'' என்று பெரிய வைத்தியர் சொன்னார்.

நான் அக்குரணையைச் சேர்ந்தவள் அல்ல. நான் அளவத்துகொடை பிரதேசத்தைச் சேர்ந்தவள் என்றாலும் இந்த தாதியர் அது பற்றி விளக்கிச் சொல்வதற்குக் கூட சந்தர்ப்பம் தரவில்லை. தெளிவின்மை காரணமாகத் தான் இந்த பிரச்சினை ஏற்பட்டது. பொதுவாகவே தெளிவின்மை காரணமாகத் தான் அதிகம் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

இரத்தம் மிகவுமே குறைந்து இருப்பதாகக் கூறி வைத்தியர் என்னை விடுவிக்க முடியாது என்று சொன்னார். என்றாலும், ‘‘நான் எதையாவது செய்து இரத்தத்தை அதிகரித்து கொள்கின்றேன். என்னை வீடு செல்ல அனுமதியுங்கள்.’’ என்று வைத்தியரிடம் கெஞ்சி, மன்றாடி, வணங்கிக் கேட்டுக் கொண்டேன். உண்மையில் வைத்தியசாலையில் எங்களைக் கவனிக்கும் விதம் மிகவுமே மோசமானது. நான் உளரீதியாக முழுமையாகப் பாதிக்கப்பட்டு இருந்தேன். எனது கணவர் என்னைப் பார்க்க வர அனுமதிக்கப்படுவதில்லை. குழந்தைக்குக் கொடுப்பதற்கு என்னிடம் பாலும் இல்லை. தயவு செய்து என்னை வீடு செல்ல அனுமதியுங்கள் எனக் கோரி, ‘‘பலாத்காரமாக டிக்கட் வெட்டிக்கொண்டு போனதாக வேண்டுமென்றால் கையொப்பமிடுகிறேன். என்னை வீடு செல்ல அனுமதியுங்கள் என்று அழுத வண்ணம் வைத்தியரிடம் நான் மன்றாடினேன். உண்மையில் பலவந்தமாக டிக்கட் வெட்டிக் கொண்டு தான் நான் வீடு வந்தேன். டிக்கட் வெட்டப்பட்ட பொழுது நேரம் 5 மணி அளவில் இருக்கும். வீட்டுக்கு வரும் போது இரவு 8 ஆகிவிட்டது. அவ்வாறு வந்த பிறகு சில நாட்கள் கழித்து என் உடம்பில் இரத்தம் குறைந்து உடம்பு மஞ்சள் நிறத்துப் போய் பெரும் பிரச்சனைகளுக்கு உள்ளானேன்.

அப்பொழுது நான் மாத்தளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டேன். புனித தந்தங்களை வணங்கி, தான தர்மங்கள் செய்து ஊர் விகாரையின் மதகுருவிடம் குழந்தையைக் காட்டி ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டேன். இந்த நிகழ்வு நினைவுக்கு வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எனது உள்ளம் வேதனையால் நிரம்புகிறது. எனது 37 வருட வாழ்க்கையில் இவ்வாறு நான் கவலைப்பட்ட ஒரு நிகழ்வு என் நினைவில் இல்லை.

**கதையை முன்வைத்தவர்:**

**வெஹிகல சாரத தேரர் | கண்டி மாவட்டம்**



# வித்தியாசமான ஓர் இளைஞரின் கதை

நான் எனது குடும்பத்தின் ஒரே பிள்ளை. எனக்கு இப்பொழுது வயது 29. நான் பெண்ணுமல்ல, ஆணும் அல்ல. நான் இருபக்கமும் இல்லை. அது எனக்கு ஒரு பிரச்சனையும் இல்லை. நான் யார் என்பது எனக்குத் தெரியும். அது போதும். நான் எங்கள் குடும்பத்தின் ஒரே பிள்ளை என்றாலும் என்னுடைய தந்தைக்கு என்னைப் பிடிப்பதில்லை. என்னுடைய வாழ்க்கை பற்றி அவர் நிறைய பிரச்சினைப்பட்டுக் கொள்கிறார். அவருக்கு கோபம் ஏற்படும் சந்தர்ப்பங்களில் நான் அமைதியாக இருந்து விடுவேன். நான் சண்டைக்குப் போக மாட்டேன். அவ்வாறு குடும்பத்தவர்களோடு சண்டை பிடித்துக் கொண்டு தங்களது வீடுகளிலிருந்து வெளியே இறங்கியவர்கள் பல நூறு பேர் இந்த கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் இருக்கின்றனர். அவர்கள் கடந்த கோவிட் தொற்று நோய் காலத்தில் பெரும் துன்பங்களுக்கு முகம் கொடுத்தனர். நான் தான் இடையில் இருந்து கொண்டு அவர்களின் அத்தனை பிரச்சினைகளுக்கும் தீர்வு தேடிக் கொடுத்தேன். அதனால் எனக்கு கோவிட் காலத்தில் எம்மவர்கள் எதிர்நோக்கிய நூற்றுக்கும் அதிகமான பிரச்சினைகளைப் பற்றி சொல்ல முடியும். எங்களுக்கு சாதாரணமாகவே ஒரு தங்குமிடத்தை தேடிக் கொள்வது மிகவும் சிரமமானது. உண்மையில் மனிதர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் நாங்கள் வித்தியாசமான ஒரு மிருக இனம் என்று. பாதையில் செல்லும் பொழுது கூட மனிதர்கள் எங்களை தரக் குறைவாகத் தான் பார்ப்பார்கள். எங்களைப் பார்த்துச் சிரிப்பார்கள். எங்களை பார்த்து பழிச்சொற்கள் கூறுவார்கள். மிகவும் மோசமான வார்த்தைகளைப் பயன்படுத்தித் தான் எங்களைப் பற்றி அவர்கள் கதைப்பார்கள். உண்மையில் அவைகளை எல்லாம் கேட்டுக் கேட்டு இப்பொழுது எங்களுக்குப் பழகிவிட்டன. எங்களில் சிலர் அவ்வாறு அவமானப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்டவர்களுக்கு விளங்கும் மொழியில் நன்கு ஏசிய சந்தர்ப்பங்களும் உண்டு. ஆனால் என்னைப் பொறுத்தவரையில் நான் யாரோடும் எவ்விதமான சண்டைக்கும் செல்வதில்லை. இது இந்த நாட்டில் உள்ள பிரச்சினை மாத்திரமல்ல.

கொழும்பில் தங்குமிடங்களில் தங்கி இருப்பவர்களில் அதிகமானவர்கள் வேலை செய்வது முடிதிருத்தும் இடங்கள் மற்றும் அழகுக்கலை நிலையங்கள் ஆகியவற்றிலாகும். வேறு சிலர் புடவைக் கடைகளிலும் சிலர் பாலியல் தொழிலாளர்களாகவும் வேலை செய்கிறார்கள். இந்த எந்த ஒரு தொழிலும் நிரந்தரமானதல்ல. அதனால் உரிய சம்பளம் அவர்களுக்குக் கிடைப்பதில்லை.

கோவிட் காலத்தில் இந்த அனைவருமே தமது தொழில்களை இழந்தனர். எம்மவர்களில் நூற்றுக்கு சுமார் 80 வீதமானவர்கள் வறிய குடும்பப் பின்னணியை கொண்ட, தூர பிரதேசங்களில் இருந்து நகரத்துக்கு இடம்பெயர்ந்தவர்கள். அவர்களில் சிலருக்கு வாடகையை செலுத்திக் கொள்ள முடியாமல் போன சந்தர்ப்பங்களில் அவர்கள் தங்களது தங்குமிடங்களில் இருந்து விரட்டப்பட்டனர். அவர்கள் போக்கிடம் இல்லாமல் பஸ் நிலையங்களில், கடற்கரையில் விகாரமகாதேவி பூங்காவில் என்று ஒவ்வொரு இடத்தில் அடைபட்டுக் கொண்டார்கள்.

ஆனால் எனக்கு முடியுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் அவர்களை நான் பாதுகாத்தேன். எனது தாய்க்கும் தந்தைக்கும் தெரியாமல் சிலரை எனது வீட்டிலும் நிறுத்திக்கொண்டேன். எங்களது பாலியல் அடையாளம் எதுவாயிருந்தாலும் நாமும் இந்த நாட்டின் குடிமக்கள். ஏனைய மனிதர்களுக்கு இருக்கின்ற அனைத்து உரிமைகளையும் நாமும் அனுபவிக்க முடியுமாக இருத்தல் வேண்டும்.

அரசாங்கம் வழங்கிய 5,000 ரூபாய் கொடுப்பனவு பெறுவதற்காக நாங்கள் சென்ற வேளை கிராம அலுவலர்கள் மிகவும் கீழ்த்தரமான வார்த்தைகளைப் பாவித்து எங்களை ஏசித் துரத்தினர். எங்களுக்கு நன்னடத்தை சான்றிதழ் ஒன்றையாவது தராத அவர்கள் எங்கே எங்களுக்கு 5000 ரூபாய் தரப் போகிறார்கள்? அவ்வாறு எதிர்பார்ப்பதும் உண்மையில் மடமைத்தனமானது?

பஸ் நிலையங்களில் இருந்தவர்களை பொலிசார் பிடித்துக் கொண்டு சென்று மோசமான விதத்தில் துன்புறுத்தல்களைச் செய்திருக்கின்றனர். எங்களில் சிலர் ஆடை அணிந்திருக்கும் விதத்தை பார்த்தால் நாங்கள் யார் என்று கண்டுகொள்ள சிரமமானதுதான். அடையாள அட்டையைப் பரிசோதித்து நாங்கள் ஆண்கள் என்று தெரியவந்த பின்னர் மோசமான தூற்றும் வார்த்தைகளால் அவர்கள் எங்களுக்கு ஏசுவர். பலரை அவ்வாறு பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து சென்று சிறைகளிலும் அடைத்துள்ளனர். அவ்வாறு சிறையில் அடைக்கப்பட்ட பலர் துஷ்பிரயோகங்களுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளனர். சிலரை பல நாட்கள் பொலிஸ் சிறைகளில் வைத்துக்கொண்டு துன்புறுத்தி இருக்கின்றனர். இந்த நாட்டின் சட்டம் எங்களுக்கு சார்பாக செயற்படுவதில்லை. எங்களைப் பாதுகாப்பதில்லை.

எங்களுக்காக முன்வந்து எங்களது உரிமைகளுக்காகப் பேசுவதற்கு யாருமே இல்லை என்ற காரணத்தினால் சமூகத்தின் அனைத்து மட்டங்களில் இருப்பவர்களும் எங்களைத் துன்புறுத்துகிறார்கள். இது உண்மையில் மிகவும் மோசமான ஒரு நிலைமை. நாங்கள் இப்படித்தான் பிறந்திருக்கிறோம். இது ஒரு உளவியல் ரீதியான நோய் அல்ல. இது உண்மையில் ஹோமோன்கள் குறித்த ஒரு பிரச்சினை. ஐயோ இந்த நாட்டு மக்கள் எங்களை எப்போது புரிந்து கொள்ளப் போகிறார்களோ? எங்களுக்கு எப்போது சுதந்திரம் கிடைக்கப் போகிறதோ?

**கதையை முன்வைத்தவர்:**

**அனுஹாஸ் சண்ரு | கொழும்பு மாவட்டம்**

# அரச ஊழியர்களின் வீரதீரப் பணிகள்.

நான் துஷாந்தி பெர்னாண்டோ, ஹோமாகம பிரதேச செயலகத்தில் பணியாற்றுகிறேன். நான் அங்கே சிறு தொழில்கள் (வியாபாரங்கள்) தொடர்பான உத்தியோகத்தராக பணி புரிகிறேன். கொரோனா ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு இரண்டு தினங்களில் நாங்கள் பணிக்கு அழைக்கப்பட்டோம். அதாவது சாதாரண வழமையான எங்களுடைய பணிகளுக்காக அல்ல. பொருள்களைக் கொண்டு வரவும் பொதியிடவும் பங்கிடவுமான பணிகளுக்காக நாங்கள் அழைக்கப்பட்டோம். சுருக்கமாகச் சொல்வதாக இருந்தால் மக்களின் உணவு, பானத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக நாங்கள் பணியாற்றினோம். அதற்கு மேலதிகமாக நான் சிறு தொழில்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் என்ற வகையில் என்னுடைய பிரிவில் இருக்கும் முயற்சியாண்மையாளர்கள் குறித்தும் தேடிப் பார்த்தேன். நான் அத்தகைய முயற்சியாண்மையாளர்கள் சுமார் ஐம்பது, அறுபது பேருக்கு அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக் கொடுத்திருக்கிறேன். அந்தக்காலத்தில் எங்களுடைய தொலைபேசிகளுக்கு ஓய்வே இருக்கவில்லை. அனைத்து வினாடிகளிலும் தொலைபேசி அழைப்புகள் வந்த வண்ணம் இருந்தன.

ஒரு நாள் ஒரு கர்ப்பிணிப் பெண் எனக்கு தொலைபேசி அழைப்பை எடுத்தார். அவருக்கு குழந்தைப் பேற்றுக்கு இன்னும் இரண்டு வாரங்களே இருந்தன. தேவையான உடு துணிகளைக் கூட ஏற்பாடு செய்து கொள்ளவில்லை என்று கூறினார். அவருக்கு உணவு உட்கொள்ள முடியாது எனவும் தோடம் பழங்களை மாத்திரமே சாப்பிட முடியும் எனவும் கூறினார். இறுதியில் நாம் எங்களுடைய வேலைகள் அனைத்தையும் நிறுத்திவிட்டு இந்தத் தாய்க்குக் கொடுப்பதற்காக தோடம்பழங்கள் தேடத் தொடங்கினோம். உண்மையில் அது மாதிரியான ஒரு விடயத்துக்கு நேரத்தை செலவழிக்க முடியுமான ஒரு தருணம் அல்ல இது என்றாலும், குழந்தைப் பேற்றுக்கு தயாராக நின்ற ஒரு தாயின் வேண்டுகோளை எப்படி எங்களால் புறக்கணிக்க முடியும்? நாங்கள் எங்களுக்குத் தெரிந்தவர்களோடு கதைத்து, தோடம்பழம் இருக்கின்றதா? என்று தேடிப் பார்த்தோம். இறுதியில் பொலிஸாரையும் தொடர்புபடுத்திக்கொண்டு பிலியந்தலையில் ஓர் இடத்திலிருந்து பெற்றுக்கொண்டோம். உண்மையில் நாங்கள் செய்தது ஒரு பாரிய மனிதாபிமானப் பணியாகும். எங்களுடைய முயற்சியால் அவருடைய பிள்ளைக்குத் தேவையான துணிகளையும் பெற்றுக் கொடுத்தோம்.

எங்கள் பிரதேச செயலாளரின் தலைமையில் எங்கள் பிரதேசத்தின் அனைத்து வீடுகளின் வாசல்களுக்கும் சென்று உணவுப் பொருட்களைப் பங்கிட்டோம். எங்களோடு பணியாற்றுகின்ற முயற்சியாண்மையாளர்களையும் இப்பணியில் நேரடியாக தொடர்பு படுத்திக் கொண்டோம். மளிகைச் சாமான்கள், அரிசி போன்றவற்றை அவர்களிடமிருந்து தான் நாங்கள் கொள்வனவு செய்தோம். நாங்கள் எதிர்கொண்ட மிகப்பெரிய பிரச்சினை 5,000 ரூபாய் கொடுப்பனவைப் பங்கிடுவதாகும். ஆரம்பக் கட்டமாக நாங்கள் 5,000 ரூபாய் கொடுப்பனவை சமுர்த்தி உதவி பெறாத வலது குறைந்தவர்கள் போன்றவர்களுக்குத் தான் வழங்கினோம். உண்மையில் அக்காலத்தில் பிரச்சினைகளை எதிர்கொண்டமை வெளிப்படையாகத் தெரிகின்ற ஏழைகள் மாத்திரமல்ல தினக் கூலி வேலை செய்கின்றவர்கள்,சிறு மற்றும் மத்திய அளவிலான முயற்சியாண்மையாளர்கள், பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குபவர்கள் என்று பெருந்தொகையான மனிதர்கள் பிரச்சினைகளை எதிர் நோக்கினார்கள். எனது பிரிவில் மாத்திரம்

வாகனங்களுக்கான லீசிங் கொடுப்பனவுகளை செலுத்த முடியாமல் அவதிப்பட்டவர்கள் நூற்றுக்கும் அதிகமானவர்கள் இருக்கிறார்கள்.

5,000 ரூபாய் கொடுப்பனவு வழங்கும் போது சில சந்தர்ப்பங்களில் 5,000 ரூபாய் கொடுக்க முடியாவிட்டாலும் 1,000 ரூபாயாவது கொடுக்க வேண்டிய பல குடும்பங்கள் காணப்பட்டன. மகனுக்கு அல்லது மகளுக்கு 5,000 ரூபாய் கொடுப்பனவு கொடுத்த காரணத்தினால் சில வயோதிபர்களுக்கு அவ்வாறு கொடுக்க முடியவில்லை. அவ்வாறான சந்தர்ப்பங்களில் நான் தலையிட்டு இப்பிரதேசத்தின் பத்து, பதினைந்து பேருக்கு சில நிவாரணங்களைப் பெற்றுக் கொடுத்தேன். அந்த நன்மையின் காரணமாக மனிதர்கள் இன்றும் கூட எங்களுக்கு புண்ணியம் தந்து கொண்டிருக்கிறார்கள்.

ஹோமாகம பிரதேசத்தில் யாருமே பட்டினியோடு இருக்கவில்லை என்று என்னால் பொறுப்புடன் கூறமுடியும். எனது கடமையை நான் முழுமையாகச் செய்தேன். நாங்கள் மரக்கறிகள், பழ வர்க்கங்களைக் கொண்டு வந்து நாங்களாகவே இறக்கினோம். வெட்டினோம், நிறுத்தோம், வீடுகளுக்குக் கொண்டு போய்க் கொடுத்தோம். இவ்வாறு வேலை செய்யும் பொழுது எங்களுக்கு மத்தியில் ஆண், பெண் என்ற பாகுபாடு இருக்கவில்லை. அனைவரும் ஒன்று போல் வேலை செய்தோம். கிராம அலுவலர்கள், அபிவிருத்தி அலுவலர்கள், சமூர்தி அலுவலர்கள் மற்றும் வேறு பிரிவுகளில் இணைக்கப்பட்டு இருந்தவர்களும் இச்சந்தர்ப்பத்தில் ஒன்றாக இணைந்து வேலைகளில் ஈடுபட்டனர். சில தினங்களில் இரவு பத்து, பதினொரு மணிக்குத் தான் நாங்கள் வீடுகளுக்குச் சென்றோம்.

கொரோனாவுக்குப் பின்னர் நான் எங்களுடைய முயற்சியாண்மையாளர்களைச் சந்திப்பதற்காக சென்றேன். உண்மையில் அவர்கள், நாங்கள் கற்பனை பண்ண முடியாத அளவுக்கு பாதிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் மீண்டு வர அதிக காலம் எடுக்கும். மரக்கறி வகைகள், உரம் போன்றவற்றை விற்பனை செய்பவர்களுக்கும், உற்பத்தி செய்பவர்களுக்கும் பெரிய பிரச்சினைகள் இல்லை. துணி விற்பனை செய்பவர்கள் புது வருடத்துக்கு என அதிகம் பொருட்களைக் கொண்டு வந்திருந்தனர். 5 அல்லது 6 லட்சம் ரூபாய்கள் பெறுமதியான பொருட்கள் அப்படியே அவர்களுடைய வீடுகளில் முடங்கிக் காணப்படுகின்றன. பூச்செடிகளை விற்பவர்கள் இன்னும் 6 அல்லது 7 மாதங்கள் செல்லும் வரை எழுந்து நிற்க முடியாது.

இத்தினங்களில் நாங்கள் சுயசக்தி திட்டத்தின் கீழ் கடன் உதவிகள் வழங்குகின்றோம். கடந்த வாரம் நாம் முயற்சியாண்மையாளர்கள் 20 பேரைப் பார்வையிடுவதற்காகச் சென்றோம். அவர்களுக்கு எங்களுடைய முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்குவதாக வாக்களித்தோம். அவர்களது எஞ்சியிருந்த ஒரு தொகை பொருட்களை விற்பனை செய்வதற்காக நாங்கள் கடந்த மாதம் ஒரு கண்காட்சியை ஏற்பாடு செய்தோம்.

அலங்காரப் பொருட்களை விற்பனை செய்வோருக்கு இன்று வரை வருமானம் ஏதும் இல்லை. அழகு சாதன நிலையங்களை நடத்துபவர்களில் 80 வீதமானவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தொலைத்தொடர்பு நிலையங்கள், புத்தகக் கடைகள் என்பனவும் பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது அவர்களுக்குக் கடன் கொடுத்தாலும் தமது வியாபாரங்களை அவர்களால் விரைவாகக் கட்டியெழுப்ப முடியும் என்று எதிர்பார்க்க முடியாது.

அதற்கு சற்றுக் காலம் எடுக்கும். பொருட்களை உற்பத்தி செய்தாலும் அவற்றை விற்பனை செய்வதற்கு வழி இல்லாமல் இருக்கிறார்கள். ஏனென்றால் பொதுமக்களின் கையிலே பணம் இல்லை.

பகல் நேர சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. அரச அலுவலர்களுக்கும் தொழிலுக்கு செல்வது பெரும் பிரச்சினையாக மாறி இருக்கிறது. ஏனென்றால் குழந்தைகளை விட்டுச் செல்ல அவர்களுக்கு இடம் இல்லாமல் இருக்கிறது. நான் கூட எனது வீட்டுக்கு அருகில் இருக்கிற ஒரு நண்பரிடம் தான் எனது பிள்ளைகளை விட்டு விட்டு வருகிறேன். எதிர்காலத்தில் தேர்தல் கடமைகள் வருகின்றன. அப்பொழுதும் இந்தப் பிரச்சினை எங்களை பெரிய அளவில் பாதிக்கும். அத்தோடு கொரோனா மீண்டும் தலை தூக்குவது போன்ற ஒரு நிலைமையும் இருக்கிறது. அப்படியானால் முயற்சியாண்மையாளர்கள் மேலும் பாதிக்கப்படுவார்கள்.

அவர்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் உதவிகள் செய்வதை விட ஒரு தொலைபேசி அழைப்பை எடுத்து கதைப்பதும் கூட பெரிய நிவாரணம் தான். என்ன செய்கிறீர்கள்? எங்கே இருக்கிறீர்கள்? என்று கேட்பது கூட அவர்களுக்கு பெரிய நிம்மதியைப் பெற்றுத் தரக்கூடிய ஒரு விடயமாகும். சிலர் தாம் செய்து கொண்டிருந்த தொழில்களை அப்படியே நிறுத்திவிட்டு இக் காலத்துக்குரிய வேறு ஏதாவது ஒரு தொழிலை செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். உடு துணிகள் தைத்தவர்கள் முகக்கவசம் தைக்கிறார்கள். உணவுப் பொருட்களை விற்பனை செய்தவர்கள் கேக் தயாரிக்கிறார்கள்.

எங்களுடைய அரச அலுவலர்கள் பலரும் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதை நாங்கள் உணர்ந்து கொண்டோம். ஆரம்பத்தில் குறைந்தது எங்களுக்கு ஒரு முகக் கவசமாவது இருக்கவில்லை. பிறகு நாங்கள் இளம் வயதுக் காரர்கள் நான்கைந்து பேர் இணைந்து, பணம் சேர்த்து முழு ஹோமாகம பிரதேசத்திலும் உள்ள அரச நிறுவனங்களுக்கு முகக் கவசங்களை இலவசமாக வழங்கினோம். சுமார் மூவாயிரம் முகக் கவசங்கள் வரை தைத்து இலவசமாக விநியோகித்தோம்.

எங்களுக்கும் பிள்ளைகள் இருக்கிறார்கள். நாங்கள் செவிமடுத்த கதைகள், பார்த்த நிகழ்வுகள் என்பவைகளை வைத்து எங்கள் பிள்ளைகள் பற்றி நாங்கள் அதிகம் பயந்தோம். வீட்டுக்கு வந்து சமையலறைப் பக்கமாகச் சென்று குளித்து, ஆடைகளை வெளியே வைத்துவிட்டுத் தான் நாங்கள் எங்கள் பிள்ளைகளின் பணிகளை கவனித்தோம். நான் அதிகமான நேரங்களில் அவர்களை விட்டும் விலகி இருக்கவே முயற்சி செய்தேன்.

இந்த நிவாரணப் பணிகளில் கிராமங்களில் செயற்படும் தன்னார்வ அமைப்புக்கள் எங்களுக்கு சிறந்த ஒத்துழைப்புக்களை வழங்கின. சமூகத் தலைவர்கள் எந்த ஒரு பொதுப் பணிக்கும் ஒத்துழைப்பு வழங்குபவர்கள். ஒரு சந்தர்ப்பத்தில் உலர் உணவு விநியோகத்திற்கு எங்களிடம் வாகனம் இருக்கவில்லை. அப்போது ஒரு முயற்சியாண்மையாளர் தான் எங்களுக்கு ஒரு வாகனத்தைத் தந்தார். அவர் காலை 9 மணியிலிருந்து மாலை 5, 6 மணி வரை ஹோமாகம பிரதேசத்தினுள் சுமார் 25 குடும்பங்களுக்கு உலர் உணவுகளை விநியோகித்தார். அவை ஒன்றுக்கொன்று அண்மையில் இருக்கும் வீடுகள் அல்ல. மிகவும் தூரத்தில் இருந்த வீடுகள்.

எங்கள் அலுவலகத்தின் பாதுகாப்பு அதிகாரி முதல் பிரதேச செயலாளர் வரை அனைவரும் மிகுந்த ஒத்துழைப்போடு வேலைகளை செய்த காரணத்தால் கடமைகள், பொறுப்புக்கள் என்பன மகிழ்ச்சி தரக் கூடியவையாக மாறின. சில சந்தர்ப்பங்களில் பிரதேச செயலாளரும் எங்களோடு இணைந்து

மரக்கறிகளை பொதி செய்யும் பணியில் ஈடுபட்டார். எளிய பாஷையில் சொல்வதானால் தொழிலாளியின் வேலையையும் முதலாளியின் வேலையையும் நாங்களே செய்தோம்.

நாங்கள் இப்போது எங்கள் சிறு தொழில்கள் அபிவிருத்திப் பிரிவால் ஒன்லைன் சந்தைப்படுத்தல் முறைமை ஒன்றை ஆரம்பித்து இருக்கிறோம். அத்தோடு முயற்சியாண்மையாளர்களின் உற்பத்திகளுக்கு ஊக்குவிப்பு வழங்குவதற்கான நிகழ்ச்சித் திட்டம் ஒன்றையும் ஆரம்பித்திருக்கிறோம். சிலர் தங்களுடைய தொழிலைக் கைவிட்டு விட்டார்கள். அவர்களையும் எப்படியாவது நாங்கள் உற்சாகப்படுத்துவோம். இந்நாட்களில் உள்நாட்டு கிழங்கு வகைகளுக்கு நல்ல கேள்வி இருக்கிறது. ஒரு கிலோ 100 ரூபாய் வரை விற்பனையாகிறது. அதனால் கிழங்கு பயிர்ச்செய்கைக்கு விருப்பமுள்ள, காணிகள் உள்ள 25 பேரை நாங்கள் தெரிவு செய்து இருக்கிறோம். தேவையான விதைகளைக் கொண்டு வருவதற்காக எதிர்வரும் வாரம் நாங்கள் மொனராகலைக்கு செல்வதற்கு இருக்கிறோம். பிறகு நாங்களே கொள்வனவு செய்து நாங்களே விற்பனை செய்யவும் தீர்மானித்திருக்கிறோம்.

பின்னர் காளான் செயற்றிட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவும் நாங்கள் திட்டமிட்டுள்ளோம். அவற்றை கிராமங்களில் உள்ள கடைகளில்ல, பூட் சிட்டி போன்ற நிறுவனங்களுக்கு வழங்குவது தான் எங்களுடைய திட்டம். கொழும்பு இணைய வழி சந்தை தான் எங்களுடைய இலக்கு. அங்கே இத்தகைய பொருட்களுக்கு அதிகம் கேள்வி நிலவுகிறது.

**கதையை சமர்ப்பித்தவர்: சுபுன் சந்தநுவன் | கொழும்பு மாவட்டம்**


KANCHANA

# நாங்கள் பிழைத்துக்கொண்டோம் தம்பி !

நான் காஞ்சன லக்மால். எனது ஊர் சேதவத்த. ஒரு பேக்கரியில் வேலை செய்தேன். கோவிட் காலத்தில் பேக்கரியில் இருந்து பாண் வாங்குவதற்காக முச்சக்கர வண்டிகளில் வரும் சிறிய முதலாளிமார் வரிசையாக நின்றனர். நான் என்னோடு வேலை செய்த இன்னொரு நண்பனோடு இணைந்து,‘‘நாங்களும் இத்தொழிலைச் செய்தால் நன்கு சம்பாதித்துக் கொள்ளலாம்’’ என்று தீர்மானித்தோம். ஏனையவர்களுக்கு 50 ரூபாய்க்கு விற்கும் பாணை எங்களுடைய முதலாளி எங்களுக்கு 45 ரூபாய்க்குத் தந்தார். ஏனையவர்கள் ஒரு றாத்தல் பாண் 70 ரூபாய்க்கு விற்றார்கள். நாங்கள் 65 ரூபாய்க்கு விற்றோம்.

நாங்கள் இருவரும் ஒரு நாளைக்கு எப்படியும் 200 - 300 ராத்தல் பாண் விற்றோம். சில நாட்கள் சென்ற பின்னர் எங்கள் இருவரின் கையிலும் இரண்டு லட்சம் ரூபாய் வரை இலாபமாக எஞ்சியது. நாங்கள் வட்டிக்குக் கடன் எடுத்து ஒரு பேக்கரியை பணம் கொடுத்து வாங்கினோம். இப்பொழுது நாங்கள் தயாரிக்கும் பாண், பணிஸ், கேக் ஆகியவற்றை நாங்களாகவே வீடு வீடாகச் சென்று விற்பனை செய்கிறோம். கித்தன்பஹுவ, சேதவத்த, வேலேவத்த, வடுகொடவத்த, ஒருகொடவத்த போன்ற எல்லாப் பகுதிகளிலும் எங்களுடைய பேக்கரி உற்பத்திகள் தான் நன்கு விற்பனையாகின்றன. இன்னும் சில நாட்களில் ஒரு டிமோ பட்டா வாகனத்தைக் கொள்வனவு செய்வது தான் எங்களுடைய திட்டம். அவ்வாறு செய்தால் முழுக் கொழும்பைச் சூழவும் எங்களால் பாண் விற்பனை செய்ய முடியும். எங்களைப் பொறுத்தவரை கோவிட் நல்ல விளைவுகளைத் தான் தந்தது.

கதை சொன்னவர்: யு.ஏ.எல் யோஹான் I கொழும்பு மாவட்டம்

# தொற்று நோய்களின் போது தவறான தகவல்கள் பரவினால் என்ன நடக்கும்?

யூ ஆர் ஐ எனப்படும் ஐக்கிய மதங்கள் வேலைத்திட்டத்தின் காலி மாவட்ட இணைப்பாளரான திருமதி அனுலா தீகல என்பவர், வக்வெல்லையில் வசிக்கும் கோரலகே விஜித ஆரியதாச மற்றும் நாமலி ஆரியதாச தம்பதியினரோடு மேற்கொண்ட சம்பாஷணையில் இருந்து பிரித்து எடுக்கப்பட்ட சில பகுதிகள் கீழே தரப்படுகின்றன. இச்சந்தர்ப்பத்துக்கு ஆரியதாச தம்பதியினர் வசிக்கும் கிராமத்தில் வசிக்கும் வேறொரு பிரிவுக்குப் பொறுப்பான கிராம அலுவலர் ஒருவரும் அருகில் இருந்தார்.

திரு ஆரியதாச: ஐயோ! என்ன கதை சொல்ல. எங்களுக்கு கொரோனா நோய் பீடிக்கவில்லை என்றாலும் ஏற்பட வேண்டிய பிரச்சினைகள் எல்லாம் ஏற்பட்டன. என்றாலும் அவற்றின் விளைவாக, “மனிதர்கள் என்பவர்கள் யார்?” என்பதை நாங்கள் புரிந்து கொண்டோம். இவற்றை எழுதினோம் என்பதற்காக மனிதர்கள் திருந்த மாட்டார்கள். என்றாலும் இவற்றை எழுதி வைப்பது நல்லது. யார் யாராவது இதனைப் புரிந்து பயனடையக் கூடும்.

திருமதி நாமலி: எனது தந்தை களுத்தறை தொடங்கொடையில் இருந்தார். அங்கு வைத்து தான் அவர் நோய்வாய்ப்பட்டார். இந்த கொரோனா நோய் பற்றிய தகவல் மெதுவாக பரவ ஆரம்பித்த நாட்களில் தான் அவர் நோய்வாய்ப்பட்டார். அவருடைய காலில் ஒரு காயம் இருந்தது. அதற்கு மருத்துவம் செய்வதற்காக எங்கள் வீட்டுக்கு வந்தார் எனது தந்தையின் வயது 86. நாங்கள் மார்ச் மாதம் 16ஆம் திகதி தந்தையை ருஹுனு வைத்தியசாலையில் அனுமதித்தோம். அதன் பின்னர் நான்கு நாட்கள் கழித்து அங்கிருந்து கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதித்தோம். ஏப்ரல் 4 ஆம் திகதி எனது தந்தை மரணித்தார். மரணச் சான்றிதழில், “காலில் காணப்பட்ட காயம் காரணமாக இரத்தம் விஷமடைந்து சுவாசப்பைகளில் ஏற்பட்ட நோய்த் தொற்று காரணமாக சுவாசத்தொகுதி பலவீனமானதால் நிகழ்ந்த மரணம்” என்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. என்றாலும் தந்தையின் மரணச் செய்தியைக் கேள்விப்பட்டதும் இந்த ஊர் முழுவதிலும் தீப்பற்றிக்கொண்டது.

திரு ஆரியதாச: இதனை கொரோனாவோடு சம்பந்தப்படுத்த முடியாது.

திருமதி நாமலி: இந்தப் பகுதியில் எங்கள் உறவினர் ஒருவர் இருக்கிறார். அவர் வைத்தியரிடம் சென்று மரணத்துக்கான காரணம் என்ன? என்று கேட்டிருக்கிறார். காரணத்தை சரியாகத் தெரிந்து கொண்டு ஊருக்கு வந்து அதனை வேறு ஒன்றாக அவர் தான் மாற்றியிருக்கிறார்.

கிராம அலுவலர்: இங்கு மருத்துவரின் தரப்பிலும் தவறு நடந்திருக்கிறது. வைத்தியர் என்பவர் நேராக நின்று தீர்மானம் எடுக்க வேண்டியவர்.

திருமதி நாமலி: எந்த வைத்தியர்?

கிராம அலுவலர்: மரணச் சான்றிதழை எழுதிய வைத்தியர். மரணத்துக்கான காரணம் கொரோனா அல்ல என்று எழுதயிருக்க வேண்டும்.

திரு ஆரியதாச: மரணத்துக்கான காரணத்தை எழுதிய பிற்பாடு அதற்கு மேலால் கொரோனா என்ற ஒரு காரணத்தை பிடித்துக்கொள்ளத் தேவையில்லை தானே. அவ்வாறென்றால் கொரோனாவால் நிகழ்ந்த மரணமா? என்று தேடிப்பார்க்க பரிசோதனை ஒன்றை மேற்கொண்டு இருக்கலாமே.

கிராம அலுவலர்: இல்லை அப்படி எழுதுவது அவசியம்.

திருமதி நாமலி: அந்தச் சந்தர்ப்பத்தில் அப்படி ஒன்றும் இருக்கவில்லை தானே. இவர் வைத்தியர்கள் எத்தனையோ பேரிடம் சிகிச்சை பெற்ற ஒரு நோயாளி. 1990 ஆம் ஆண்டுகளிலிருந்து இவர் மருந்து எடுத்து இருக்கிறார். பிரதேசத்திற்குப் பொறுப்பான கிராம உத்தியோகத்தர் சரியாக தன்னுடைய கடமையைச் செய்யவில்லை. பிரதேச செயலாளர், கிராம அலுவலருக்கு பல தடவைகள் தொலைபேசி அழைப்பை எடுத்து இருக்கிறார். என்றாலும் அவர் தன்னுடைய தொலைபேசியை ஓ·ப் பண்ணி வைத்திருந்திருக்கிறார். தேவையான பணிகளை நிறைவேற்றிக் கொள்ள அவர் நேராக நின்று இருக்க வேண்டும். பிரதேச செயலாளருக்கு பிரிவுக்குப் பொறுப்பான கிராம அலுவலர் தான் இந்த நோயாளியைப் பற்றி சொல்லியிருக்கிறார். இவ்வாறு ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த சந்தர்ப்பத்தில் நீங்கள் எவ்வாறு நோயாளியை இங்கே அழைத்து வந்தீர்கள்? என்று அவர் என்னிடம் கேட்கிறார். நோயாளியை அழைத்து வந்தது நாங்கள் செய்த தவறா? எங்களை அவ்வாறு வருவதற்கு ஏன் அனுமதித்தீர்கள்? அது தான் தவறு. நோயாளியை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வரை யாருமே எம்மை பரிசோதனைக்கு உட்படுத்தவில்லை. அப்படி என்றால் நாங்களா குற்றவாளிகள்? மற்றது நான் கிராம அலுவலரிடம், எப்பொழுது நாடு முழுவதுமாக மூடப்பட்டது? என்று கேட்டேன். அவர் பொலிசாரின் முகத்தைப் பார்த்தார். அப்படி என்றால் அவருக்குத் தெரியாது என்பது தானே அர்த்தம். பொலிசாருக்கும் நினைவில்லை. அனைவரும் மேலும் கீழும் பார்க்க ஆரம்பித்தார்கள். அப்போது நான் சொன்னேன்: நோயாளி இங்கே வந்தது மார்ச் 16ஆம் திகதி.முழு நாடும் முடக்கத்துக்கு உட்பட்டது மார்ச் 20ஆம் திகதி என்று. அரச அலுவலர் என்ற வகையில் அவர் அந்தப் பதவிக்குத் தகுதியானவர் அல்ல. அவரிடம் எவ்விதமான பொறுப்புணர்வும் இல்லை. மேலதிகாரிகளுக்கு பிழையான தகவல்களை கொடுக்க வேண்டாம் என்றும் நான் அவரிடம் சொன்னேன். இந்தப் பிரச்சினையின் காரணமாக அரச அதிகாரிகள் சுமார் 100 பேர் எம்மைச் சூழ்ந்து கொண்டு எம்மிடம் கேள்விகள் கேட்டனர். அப்பொழுது நான், “அந்த சந்தர்ப்பத்தில் மாவட்டத்திலிருந்து மாவட்டத்திற்கு நோயாளிகளை அழைத்து வர முடியுமாக இருந்தது.” என்று சொன்னேன். அது கூட அவர்களுக்குத் தெரியாது. முழுமையாகவே நடந்த நிகழ்வை விகாரப்படுத்தி இந்த விபரம் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டது. கிராம அலுவலரது முகப் புத்தகத்திலும் இந்த மரண வீட்டு விபரங்கள் பகிரப்பட்டு இருந்தன.

திருமதி நாமலி: ஐயோ! எனக்கு அந்த முகப்புத்தகத்தைப் பற்றிச் சொல்லாதீர்கள் நான் அந்த ஒரு புத்தகத்திலும் இல்லை. எங்களுக்குத் தெரியாதா? அதிலே பரவும் தேவையில்லாத செய்திகளைப் பற்றி. எங்களுக்கு தெரிந்த வைத்தியர் ஒருவர் இந்த மரணம் பற்றிய விடயங்களை மறைத்து விட்டதாக ஒரு செய்தி பிரசுரமானது. அதனால்தான் கிராம வாசிகளும் நூற்றுக்கும் மேற்பட்ட இந்த அரச அதிகாரிகளும் சேர்ந்து ஆட்டம் போட்டனர். நீங்கள் சும்மா சிந்தித்துப் பாருங்கள், அந்த வைத்தியர் ஏன் அப்படிச் செய்ய வேண்டும்? அவர் எங்களது நண்பரோ உறவினரோ இல்லையே. அவர் ஏன் அவ்வாறு விடயங்களை மறைத்து வைக்க வேண்டும்? அவர் அவ்வாறு விடயங்களை மறைத்திருந்தால் அவர் எங்களுடைய எதிரியாகத் தானே இருப்பார். அது மாத்திரமல்லாமல்

நாங்கள் என்ன பொறுப்புணர்வு இல்லாத மனிதர்களா? நாங்கள் தந்தையைப் பார்க்க மருத்துவமனை செல்ல ஒரு அனுமதிப்பத்திரத்தைத் தான் பெற்றுக் கொண்டோம். நானும் என்னுடைய சகோதரரும் ஒருத்தர் மாறி ஒருத்தர் தான் தந்தையைப் பார்ப்பதற்காகச் சென்றோம். அந்த வைத்தியர் அந்தளவு தூரம் எங்களோடு நெருக்கமானவர் என்றால் எங்களுக்கு எவ்வளவு சலுகைகளைப் பெற்றிருக்க முடியும்? உண்மையில் இந்த மனிதர்கள் மிருகங்களை விடவும் மோசமானவர்கள். மரண வீட்டுக்கு 15 பேரை மாத்திரமே சம்பந்தப்படுத்திக்கொள்ளும் படி கூறப்பட்டது. மனிதர்கள் வருவதை நாங்களும் விரும்பவில்லை. கொரோனா தொற்றாளர் என சும்மாவேணும் சந்தேகிக்கப்பட்ட ஒருவர் வருவதனை நாங்கள் விரும்பவில்லை. குடும்பத்தவர்களை எண்ணிப் பார்த்த பொழுது 14 பேர் இருந்தனர். விகரையலிருந்து பிக்கு ஒருவருக்கு மாத்திரம் பங்கு கொள்ளுமாறு அழைப்பு விடுத்தோம். அப்போது சரியாக 15 பேர். அப்பொழுது மதகுருமார் இருவர் வருவதாகச் சொன்னாகள். அதற்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்க முடியாது. எங்களுக்கு பூதவுடலை களுத்துறைக்கு எடுத்துச் செல்லவும் முடியாது. நாங்களும் பயப்படுகிறோம். அங்குள்ள எமது வீடுகள் மார்ச் மாதம் 16ஆம் திகதி முதல் மூடப்பட்டிருந்தன. நாங்கள் தந்தையின் நோயோடு பட்டு மாய்ந்தோம். அதனால் களுத்துறை தொடர்பான எந்த ஒரு செய்தியையும் தேடிப் பார்ப்பதற்கு எங்களுக்கு நேரம் இருக்கவில்லை. அந்நாட்களில் இந்நோய் காற்றின் மூலமும் பரவுகிறது என்று ஒரு கதை இருந்தது. நாங்கள் எங்கள் வீட்டுக்கு முன்னால் ஒரு கதிரையை வைத்து, எதையாவது கொண்டு வந்தால் அதில் வைத்து விட்டுச் செல்லும் வகையில் ஒரு அறிவித்தல் பலகை வைத்தோம். இது கொரோனா நோய் காரணமாக நிகழ்ந்த ஒரு மரணம் என இந்த ஊரைச் சேர்ந்த ஒரு நபர் மத குருவிடம் பொய் சொல்லி இருக்கிறார். இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்ள வேண்டாம் என அவர் சொல்லியிருக்கிறார். மனிதர்களின் தராதரத்தைப் பாருங்கள். அடுத்தவர்களுக்கு பிரச்சினைகளைக் கொடுத்து தாம் மகிழ்ச்சியடைவது எப்படி? என்றுதான் அவர்கள் சிந்திக்கிறார்கள். எங்களால் இதனைக் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாது. “இந்த மனிதர்களோடு நீங்கள் எப்படி இந்த கிராமத்திலே ஒன்றாக இருக்கிறீர்கள்?” என்று எங்களுக்கு நெருக்கமானவர்கள் எங்களிடம் கேட்கிறார்கள்.

இந்த ஊர் படித்த மனிதர்கள், புத்திசாலிகள் இருக்கும் ஒரு ஊராகத் தான் பிரசித்தம் பெற்று இருக்கிறது. உண்மையில் இவர்கள் முழு ரிச்மன்ட் கல்லூரியையும் நாசம் செய்து விட்டார்கள். ஊரும் சீரழிந்து விட்டது. அவர்களும் சீரழிந்து விட்டார்கள். உண்மையில் மிக மோசமான ஒரு ஊழ்வினை தான் எங்களுக்கு நேர்ந்தது. பூதவுடலை மலர்ச்சாலையில் வைப்பதற்கும் அவர்கள் இடம் தரவில்லை. போபே பொத்தல பிரதேசத்திலிருந்து அதற்கு ஒரு தடை வந்தது. இந்த ஊரிலே எங்களுடைய ஒரு சங்கம் இருக்கிறது. அதன் தலைவர் சிலரை ஒன்று சேர்த்துகொண்டு ஊரைப் பாதுகாக்க வேண்டும் என்று ஒரு ஆர்ப்பாட்டத்திற்கு ஏற்பாடு செய்திருக்கிறார். நள்ளிரவில் தான் இவற்றையெல்லாம் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். 119 தொலைபேசி இலக்கத்திற்கு நூறு தடவைகளுக்கு மேல் அழைப்பை எடுத்து இருக்கிறார்கள். எங்கள் வீட்டுக்கு பொலிசார் வந்திருந்த சந்தர்ப்பத்திலும் 119லிருந்து தொலைபேசி அழைப்புகள் வந்தன. உண்மையில் இது ஒரு பழிவாங்கல். என்றாலும் நாங்கள் யார் மீதும் கோபம் கொள்ளவில்லை. மோசமான விடயங்களை விதைத்தவர்கள் கண்டிப்பாக அதன் விளைவை அறுவடை செய்வார்கள்.

காலி பொலிஸ் தலைமையக பொலிஸ் பரிசோதகர் சேனாபதி டி சில்வா

இது சம்பந்தமாக எங்களுக்குப் பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. வைத்தியர்கள் பூதவுடலை விடுவித்த முறை பற்றியும் சிலர் கேள்வி எழுப்பினர். என்றாலும் அது சம்பந்தமாக எதுவும் சொல்ல எங்களால் முடியாது. அவ்விடத்தில் தற்போது களுத்துறையில் இருந்து வந்த ஒரு குழுவினர் இருக்கிறார்கள் என்றும் தகவல் வந்தது. மரண வீட்டுக்குச் செல்ல வேண்டாம் என நாம் அவர்களுக்கு அறிவித்தோம். அவ்வாறே வெளியிலிருந்து யாரும் மரண வீட்டுக்குச் செல்வதற்கு நாங்கள் இடமளிக்கவில்லை. பூதவுடலுக்கு இறுதி மரியாதை செலுத்த களுத்துறையிலிருந்து சிலர் வருகை தர இருக்கிறார்கள் என்ற ஒரு செய்தி வந்ததனால் கொழும்பில் இருந்தும் களுத்துறையில் இருந்தும் இவ்விடத்துக்கு யாரும் வருவதைத் தடுப்பதற்கான வீதித் தடைகளை நாங்கள் ஏற்படுத்தினோம். பூதவுடல் சம்பந்தமான தீர்மானங்களை எடுப்பது சுகாதாரத் துறையினரின் பணி. அவர்கள் மேற்கொள்ளும் செயற்பாடுகளுக்கு நாம் ஆதரவு வழங்கத் தீர்மானித்தோம்.

ருஹுணு பல்கலைக்கழக விஷேட சட்ட வைத்தியர் யூ.சீ.பீ. பெரேரா அவர்கள்.

சுகாதார அமைச்சினால் கொள்ளை நோய் காலத்தில் மரணிக்கும் நபர்களது பூதவுடல் தொடர்பாக கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகள் குறித்து வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபத்தின் பிரகாரம் இந்தப் பூதவுடல் கோவிட் நோயினால் பீடிக்கப்பட்டு மரணித்த ஒருவரது பூதவுடல் அல்ல, என்றாலும் கொரோனா நோய் அறிகுறிகளில் ஒன்றான சுவாசிப்பது சிரமமான நிலைமை காணப்பட்ட ஒருவரது பூதவுடல் என்ற வகையைச் சேர்ந்ததாகும். சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள சுற்று நிருபத்தின் பிரகாரம் இந்த மூன்றாவது வகைக்குரிய பூதவுடல் தொடர்பில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு யாதெனில் கொரோனா நோய்த் தொற்றுக்கு ஆளான ஒருவரது பூதவுடல் தொடர்பில் கடைபிடிக்கும் நடைமுறையேயாகும்.

காலி, கடவத் சதர பிரதேச செயலாளர் திருமதி ஹிமாலி ரத்னவீர அவர்கள்.

இந்த மரணம் குறித்து முறைப்பாடு கிடைத்தவுடன் நான் அதிகாரிகளை அனுப்பி, தேடிப் பார்த்து சுகாதார துறையினருக்கும் பொலிசாருக்கும் அறிவித்தேன். சுற்றியிருந்த அனைவருக்கும் மரண வீட்டுக்குச் செல்ல வேண்டாமென்றும், பாதுகாப்பாக தங்கள் வீடுகளுக்குள் இருந்து கொள்ளும் படியும் அறிவுறுத்தினேன். உண்மையில் இந்த மனிதருக்கு கொரோனா நோய் இருக்கவில்லை என்பது எங்களுக்குத் தெரியும். என்றாலும் தேவையற்ற வகையில் ஆபத்தை வரவழைத்துக்கொள்ள நாங்கள் முயலக்கூடாது. அவ்வாறே நான் தொடங்கொட பிரதேச செயலாளருடன் கதைத்து மரண வீட்டுக்கு வருவதற்காக யாருக்கும் ஊரடங்குச் சட்ட அனுமதிப் பத்திரங்களை வழங்க வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டேன். இவ்வாறு வெளியிலிருந்து வரமுடியுமான அனைவரையும் நிறுத்தினோம். அவ்வாறே சுகாதாரத்துறையினர் இது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டோம்.

# அதிர்ஷ்டம் வரும் போது இப்படித்தான், பாணும் கொடிகட்டிப் பறக்கும்.

கோவிட் வசந்த காலத்தில் எங்கள் வீட்டில் நாங்கள் விளையாட்டாகப் பாண் தயாரிக்க ஆரம்பித்தோம். ஆரம்பத்தில் நாங்கள் தயாரித்த பால் ஈரப்பலாக்காய் போலிருந்தது. இரண்டாம் நாள் நாங்கள் தயாரித்த பாண் பலாக்காய் போல் இருந்தது. என்றாலும் சிறந்த வாசனை இருந்தது. ஊர் மக்கள் அனைவரும் இந்த வாசனையை முகர்ந்து கொண்டே எங்கள் வீட்டுக்கு வந்தனர். நாங்களும் கைவிடவில்லை. தெரிந்த தெரிந்தவர்களிடம் கேட்டு, யூடியூப் போன்ற வலைத்தளங்களையும் பயன்படுத்தி பாண் தயாரிக்கும் மந்திரத்தை கற்றுக் கொண்டோம். ஓர் இரண்டு தினங்கள் செல்லும் போது அதிகமான ஓடர்கள் எங்களுக்குக் கிடைத்தன. இப்பொழுது பாண் மாத்திரமல்ல ரோஸ் பாண், பணிஸ் போன்ற பேக்கரி உற்பத்திகள் அனைத்தையும் நாங்கள் தயாரிக்கிறோம். அதிர்ஷ்டம் வரும் பொழுது இப்படித்தான். பாண் விற்பனை மூலமும் முன்னேற முடியும்.

கதையை முன்வைத்தவர்: பண்டுலா ஜினேந்திரசிங்க I களுத்துறை மாவட்டம்

# மிலானோ - டுபாய்- கந்தகாடு - பொலன்னறுவை - ஐ.டி.எச் - லுனாவ

மொரட்டுவ, லுனாவ பிரதேசத்தில் இத்தாலியில் இருந்து இலங்கைக்கு வந்த, கொரோனா தொற்றுக்கு உள்ளாகி, அந்நோய்க்கு நேரடியாக முகம் கொடுத்த குடும்பம் ஒன்றோடு மேற்கொண்ட உரையாடலில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட சில பகுதிகளை கீழே தருகிறோம். நேர்காணலை நடத்தியவர் சர்வோதய கொழும்பு மாவட்ட இணைப்பாளர் இந்துனில் ஹித்தெடிய அவர்கள்.

செநெஹெலதா - நோய் குணமடைந்த நபரின் மனைவி: வுஹானில் ஆரம்பித்து இரண்டு மூன்று கிழமைகளின் பின்னர் தான் இத்தாலிக்கு இந்த நோய் வந்ததாகச் சொன்னார்கள். அப்போது நான் அங்கிருந்த என்னுடைய கணவருக்கு ஒவ்வொரு நாளும் தொலைபேசியில் அழைப்புக்களை மேற் கொண்டேன். அந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நான் அவரிடம், எங்கே போனீர்கள்? என்ன சாப்பிட்டீர்கள்? உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து கொண்டீர்களா? சுடுநீர் குடித்தீர்களா? போன்ற கேள்விகளைத் தான் நான் கேட்டேன். நானும் என்னுடைய பெண் பிள்ளைகள் இருவரும் நான்கு வருடங்களாக என்னுடைய கணவர் கித்சிரியைக் காணவில்லை. பிரச்சனை வரும்போது அவர் மிலான் நகரில் இருந்தார். நகரத்துக்குள் இன்னமும் கொரோனா நோயின் தாக்கம் இல்லை என்பதால் அவர் சாவகாசமாகத் தான் அங்கே இருந்தார். நான் இப்பிரச்சினை பற்றி அறிந்து கொண்ட நாளிலிருந்து விரைவாக இங்கே வந்து விடும்படி அவரிடம் கேட்டேன். எப்படியும் நான் அதிக காலத்துக்கு முன்பிருந்தே அவரை இங்கே வரும்படி அழைத்துக் கொண்டு தான் இருந்தேன். ஏனென்றால் என்னுடைய தொழில் பணிகளையும் மகள்மார் இருவரின் வேலைகளையும் தனியே செய்து கொள்ள என்னால் முடியாமல் இருந்தது.

இவரது சகோதரர் ஒருவர் மிலான் நகரில் இருந்தார். அவர் தான் இவருக்கும் வேலைகள் தேடிக் கொடுத்தார். தன்னுடைய சகோதரர் இருந்தது இவருக்குப் பெரும் பலமாக அமைந்தது. நான் தினமும் அவரிடம் விவரங்களை கேட்டுக் கொண்டிருப்பேன். அவரது சகோதரரின் மனைவி என்னிடம் உண்மை சொல்வார். “நாங்கள் வசிக்கும் குடியிருப்புக்குப் பக்கத்திலே இருக்கின்ற குடியிருப்பில் இருந்து ஒரு கொரோனா நோயாளர் கண்டுபிடிக்கப்பட்டார் என்று அப்பொழுது அவர் ஒருநாள் கூறினார். மேலும் அங்குள்ள நிலைமை பற்றியும் அவர் எனக்கு விவரித்தார். பின்னர் ஒரு நாள், “இப்பொழுதென்றால் அங்குள்ள நிலைமை மிகவும் மோசமானதாக மாறிவிட்டது.” என்று அவர் சொன்னார். அதை செவிமடுத்தது முதல் நான் என்னுடைய கணவருக்கு இங்கே வரும்படி தொல்லை கொடுக்கத் தொடங்கினேன். என்னுடைய கணவருக்கு இந்த நோய் ஏற்பட்டால் என்ன செய்வது என்பதாக நான் சிந்திக்கத் தொடங்கி விட்டேன். அங்கு சில சந்தர்ப்பங்களில் விசா இல்லை என்றால் வைத்தியசாலைகளிலும் அனுமதி பெற முடியாமல் போகும் என்று அவரும் சில சந்தர்ப்பங்களில் சொல்லியிருந்தார்.

மார்ச் 7, 8ஆம் திகதி ஆகும் பொழுது எனது கணவரின் சகோதரரின் மனைவி அவ்விருவருடனும் சண்டைபிடித்து ஒருவாறாக இங்கே வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். ஏனென்றால் என்னுடைய கணவரின் சகோதரருக்கும் அவரது மகனுக்கும் சுவாச நோய் இருக்கிறது. அவ்விருவருக்கும் விரைவாக ஆசிய நாடுகளுக்குச் சென்று விடும் படி வைத்தியர்கள் கூறி இருக்கின்றனர். சுவாச நோய்கள் இருக்கின்றவர்களுக்கு கொரோனா நோய் ஏற்பட்டால்

குணப்படுத்த முடியாது என்பதால் வைத்தியர்கள் அவ்வாறு கூறியிருக்கின்றனர். அச்சந்தர்ப்பத்தில் இந்த நோயின் பாரதூரத்தைப் புரிந்து கொண்ட எனது கணவரின் சகோதரர் அவரை அங்கே நிறுத்துவதற்கு பயந்து இருக்கிறார். பின்னர் என்னுடைய கணவருக்கு அவரது சகோதரர் தொலைபேசியில் அழைத்து, "6 ஆம் திகதி காலை நாங்கள் இலங்கை செல்கிறோம். உங்களுக்காகவும் நாங்கள் விமான பயணச்சீட்டை ஏற்பாடு செய்து இருக்கிறோம்." என்று கூறியிருக்கிறார்.

நோய் குணமடைந்த கித்சிரி: எப்படியோ நாங்கள் எவ்வித பிரச்சினையும் இல்லாமல் மார்ச் 11ஆம் திகதி இரவு டுபாய் ஊடாக இலங்கை வந்தோம். அங்கு இலங்கையர்கள் அதிகமானவர்கள் இருந்தார்கள். இங்கே வந்து விமானத்திலிருந்து இறங்கும்போது தீர்வையற்ற கடைத் தொகுதிக்காவது எம்மை அழைத்துச் செல்லவில்லை. அதற்கு கீழே உள்ள ஒரு இடத்தில் எங்களை இறக்கினர். பின்னர் விமான நிலைய அதிகாரிகள் எங்களுக்கு உணவு, பானம் தந்தனர். பின்னர் எங்களை கட்டுநாயக்க விமானப்படை முகாமுக்கு அழைத்துச் சென்றனர். குடிவரவு, குடியகல்வு அதிகாரிகளது பணிகளும் விமானப்படை முகாமுக்குள் வைத்தே மேற்கொள்ளப்பட்டன. எங்களை விமான நிலையத்துக்கு உள்ளே அனுப்பவில்லை. வெளியில் இருந்துதான் எங்களை கட்டுநாயக்க முகாமுக்கு அழைத்து வந்தனர். அங்கிருந்து தான் எங்களை பரிசோதித்து, உணவு மற்றும் பானங்கள் தந்து கையுறைகள் தந்து எங்களுடைய பொதிகள் அனைத்தையும் எங்களையும் சேர்த்து தொற்று நீக்கம் செய்தனர்.

செநேஹலதா: சரியாக நுழைவாயிலில் இருந்து வெளிவரும் போது நேரம் 11.45. நானும் என்னுடைய மகள்மார் இருவரும் என்னுடைய சின்னம்மாவும் தான் விமான நிலையத்துக்குச் சென்றிருந்தோம். பிள்ளைகளும் 8 மாதங்களாக தந்தையை கண்டிருக்கவில்லை.

கித்சிரி: விமானத்தில் வந்த அனைவரையும் ஒரு பஸ்ஸில் ஏற்றி தனிமைப்படுத்தல் முகாமுக்கு அழைத்துச் சென்றனர். எங்களோடு சுமார் 23 பேர் அங்கே வந்தனர். அந்த 23 பேரும் தனியான பஸ் வண்டியில் தான் முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். எங்களை அந்த ஷரீஆ பல்கலைக்கழகத்துக்குத் தான் அழைத்துச் செல்வதாக ஆரம்பத்தில் எங்களுக்கு சொல்லி இருந்தனர். எம்மோடு வந்தவர்களில் இத்தாலியில் பல் வைத்தியர் ஒருவரிடம் வேலை புரிந்த ஒருவர் இருந்தார். அவர் பஸ்ஸில் வரும்போது கூட முகக் கவசம் அணிந்து இருக்கவில்லை. அவருக்கு கொரோனா நோய் இருக்கலாம் என்று நாங்கள் சந்தேகித்தோம். எங்களை முகாமுக்கு அழைத்து வந்து ஒரு நாள் கழியும் போது அவருக்கு காய்ச்சல் ஏற்பட்டது. முகாமில் வசதிகள் ஓரளவு குறைவாகத்தான் இருந்தன. அதன் காரணமாக சில வாய்த்தர்க்கங்களும் கூட ஏற்பட்டன. அப்பொழுது ராணுவத்தினர் எங்களிடம், "உண்மை நிலைமை எங்களுக்கும் தெரியும். எங்களுக்கு ஓரிரண்டு நாட்கள் தாருங்கள். உங்களுக்கான அத்தனை வசதிகளையும் நாங்கள் ஏற்பாடு செய்து தருகிறோம். ஏனென்றால் எங்களுக்கும் இது முதலாவது அனுபவம்தான். அதனால் சற்று பொறுத்துக் கொள்ளுங்கள்." என்று இராணுவத்தினர் எங்களிடம் கூறினர்.

செநேஹலதா: இவர்களோடு வந்த யாரும் அப்படி சண்டை பிடிக்கவில்லை.

கித்சிரி: எங்களுக்கு முன்பு வந்தவர்கள் சற்று சண்டை பிடித்திருக்கிறார்கள். அவர்கள் கொரியாவில் இருந்து வந்தவர்கள். நாங்கள் ஏதும் அசௌகரியங்கள் இருந்தால் அவை பற்றி எடுத்துரைத்தோமே தவிர சண்டை பிடிப்பதற்கு நாங்கள் முற்படவில்லை. உண்மையில்

எங்களுக்குப் போதுமான அளவு உணவு, பானங்களை அவர்கள் இலவசமாகவே தந்தனர். ஒரு நாளைக்கு 4, 5 தடவைகள் தேநீர் மாத்திரம் தந்தனர். கொத்தமல்லி, சூப் போன்றவையும் எங்களுக்கு வழங்கப்பட்டன.

செநேஹலதா: எப்படியோ ரோம் நகரில் இருந்து வந்து முகாமில் வைத்து இவருடன் அறிமுகமாகியா ஒருவருக்கு 12ம் திகதி அதிகாலையில் பரீட்சித்துப் பார்த்தபோது காய்ச்சல் ஏற்பட்டிருந்தது.

கித்சிரி: காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை நுளம்பு வலையையும் விரித்துக் கொண்டு நாங்கள் கட்டிலில் தான் இருப்போம். தினமும் காலையிலும் மாலையிலும் காய்ச்சலைப் பரிசோதிப்பதற்காக வைத்தியர்கள் இருவர் வருவார்கள். அவ்வாறு பார்த்த பொழுது தான் அவருக்குக் காய்ச்சல் இருப்பது தெரியவந்தது. அவர் சற்று தடுமாற்றத்தோடு தனக்கு அடிக்கடி காய்ச்சல் வருவதாகச் சொன்னார். காலநிலை மாற்றம் காரணமாக இலங்கைக்கு வந்தால் சாதாரணமாகவே அவ்வாறு காய்ச்சல் வருவதாக அவர் கூறினார். அவர் நோய் ஏற்பட்ட பின்னர் தான் இங்கே வந்திருக்கிறார் என்று நான் நினைக்கிறேன். அதற்கு சரியாக இரண்டு தினங்களுக்கு பிறகு அதாவது 14 ஆம் திகதி மூன்று, மூன்றரை மணி ஆகும் போது எனது உடம்பு வலிப்பதாக எனக்குத் தோன்றியது. பயண சிரமங்கள் காரணமாக அப்படி இருக்கலாம் என நான் நினைத்தேன். உடம்பு வலி தொடங்கிய பின்னர் அன்றைய தினம் நாலைந்து மணித்தியாலங்கள் மேலதிகமாகத் தூங்கினேன். நானும் என்னுடைய சகோதரரும் அவ்வாறு தூங்கினோம். தூங்கி எழுந்த போதும் உடம்பு வலித்தது எனக்கு நன்கு புரிந்தது. தூங்கிக் கொண்டிருந்தால் இன்னமும் சிரமமாக மாறும் என்று கருதி நான் வெளியே வந்தேன். வெளியே வந்த பின்னர் தான் எனக்கு புரிகிறது: சூரிய வெளிச்சத்தைப் பார்க்க முடியவில்லை, கண்கள் இரண்டும் சிறுத்துப் போய் இருக்கின்றன. கண்ணீர் வருகின்றது. பின்னர் வெளியே ஒரு கதிரையை வைத்து வெயில் இல்லாத பக்கத்தைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்தேன். சிறிது நேரம் செல்லும்போது வெய்யில் பரவ ஆரம்பித்ததும் என்னுடைய வருத்தம் அதிகரிக்கத் தொடங்கியது. ஏதோ ஒரு காரணத்தினால் தான் இவ்வாறு ஏற்படுகிறது என்று நான் உணர்ந்தேன். அதன் பின்னர் சுமார் 8 மணி அளவில் வைத்தியர்கள் இருவரும் வந்து பார்த்தபோது எனக்கு 100.2 அளவுக்குக் காய்ச்சல் ஏற்பட்டிருந்தது. அத்தோடு மேலும் நால்வருக்கும் அவ்வாறு காய்ச்சல் ஏற்பட்டிருந்தது. அதன் பின்னர் சுமார் அரை மணித்தியாலம் கழித்து மீண்டும் எம்மை பரிசோதித்தனர். அதன் பின்னர் எங்கள் ஐவரையும் வைத்தியரிடம் அழைத்துச் சென்றனர். அங்கு எம்மை பரிசோதித்துவிட்டு எங்களுடைய கடவுச்சீட்டுகள், உடு துணிகள் அத்தனையையும் தயார்படுத்திக் கொள்ளும் படி கூறிவிட்டு எங்களை பொலன்நறுவை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு சென்ற பின்னர் எங்களுக்கான பிசிஆர் பரிசோதனைகள் நடத்தப்பட்டன. எனது மூக்கில் இருந்தும் நாக்கிலிருந்தும் சளி எடுக்கப்பட்டது. அடுத்த நாள்தான் அது தொடர்பான அறிக்கை வந்தது. அறிக்கை வருவதற்கு 24 மணித்தியாலங்கள் சென்றன. அதன் பின்னர் எங்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டு இருப்பதாகல் கூறி கொழும்பு ஐ.டீ.எச் வைத்தியசாலைக்குச் செல்ல தயாராகும்படி அறிவுறுத்தினர்.

ஐ.டீ.எச் வைத்திய சாலைக்கு வந்து ஐந்து நாட்களின் பின்னர் மீண்டும் ஒரு தடவை பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதிலும் எங்களுக்கு கொரோனா நோய் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. அதன் பின்னர் 15 நாட்கள் கழித்து மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில்

தான் எங்களுக்கு கொரோனா தொற்று இல்லை என்பது உறுதியானது. அருகருகே இரண்டு பரிசோதனைகளை மேற்கொள்வார்கள். அதன் பின்னர் அடுத்த நாள் காலையில் மீண்டும் ஒரு பரிசோதனை செய்வார்கள். அவர்கள் அதிகாலை ஐந்தரை மணி அளவில் வருவார்கள். முதல் நாள் செய்த சோதனையில் படி கொரோனா இல்லை என்று தெரிய வந்தது. ஆனால் அதற்கடுத்த தினம் மேற்கொண்ட சோதனையில் தொற்று இருப்பதாக கண்டறியப்பட்டது. அவர்கள் சாதாரணமாக இரவு 6 மணி ஆகும் போது, "அறிக்கை சரி இல்லை, இன்னும் சில நாட்கள் இருக்க வேண்டி வரும்." என்று சொல்வார்கள்.

வைத்தியசாலையில் எங்களுக்கு சிறந்த வகையில் உணவு பானங்கள் தந்தனர். 3 வேளையும் சோறு தான் அதிகமாகத் தந்தார்கள். இறைச்சி வகைகளில் கோழி இறைச்சி மாத்திரமே பரிமாறப்பட்டன. மீன், முட்டை போன்றவற்றையும் தந்தார்கள். தினமும் போல் முட்டை தந்தார்கள். நன்றாக சாப்பிடச் சொன்னார்கள். "நன்கு சக்தியை வளர்த்துக் கொள்ளுங்கள்" என்று சொன்னார்கள். பயத்தின் காரணமாக நாங்கள் ஒன்றரை நாள் சாப்பிடாமலும் இருந்திருக்கிறோம். ஆயுர்வேத நிலையமொன்றிலிருந்து கஞ்சி போன்றவற்றையும் கொண்டுவந்து தந்தார்கள். சுமார் 85 வகை மூலிகைகளைப் பயன்படுத்தி அந்த கஞ்சியை தயாரிப்பதாக அவர்கள் என்னிடம் கூறினார்கள். அது எங்களுடைய நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதற்கான ஒரு முயற்சி. நோயாளிகள் அதிகம் பேர் இருக்கும் தினத்தில் அந்த கஞ்சி ஒரு பெரிய பாத்திரத்தில் கொண்டுவரப்படும். பயத்தின் காரணமாக நான் அவற்றில் இரண்டு கிளாஸ் அருந்துவேன். ஏனென்றால் அதனை அருந்தும்படி அவர்கள் எங்களுக்கு சொல்கிறார்கள் என்பதால். "வைத்தியசாலையில் எந்தளவு நாட்களில் இருந்தாலும் பயனில்லை, உங்களுடைய உடம்பிலிருந்து தான் இந்த நோயை போக்குவதற்கான சக்தியை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்றும் "இந்த நோய்க்கு மருந்தில்லை, நல்ல முறையில் உண்டு, குடித்து ஆரோக்கியமாக இருப்பதன் மூலம் தான் இந்நோயைக் குணப்படுத்திக் கொள்ள முடியும் என்றும் அவர்கள் கூறினர். ஒரு நாளைக்கு மூன்று விடுத்தம் விட்டமின் சி அருந்தத் தந்தார்கள்.

செநெஹலதா: இவருக்கு மூச்செடுக்க சிரமப்படும் ஒரு நிலைமை தொடர்ந்து இருந்தது தான். என்றாலும் இவர்களை சாதாரண நோயாளர்கள் போல் தான் கணித்தார்கள். ஏனென்றால் இவர்களது ஏனைய அறிக்கைகளில் பிரச்சினைகள் இருக்கவில்லை. சுவாசப் பைகள் சீராக இயங்குகின்றன, இரத்த அழுத்தம் சாதாரணமான அளவில் இருக்கிறது, இரத்தம் தொடர்பான அறிக்கைகளும் சாதாரணமானவை, எனவே இவர்களுக்கு வேறு வியாதிகள் இல்லாத காரணத்தினால் வேறு பிரச்சினைகள் ஏதும் ஏற்படவில்லை.

கித்சிரி: நாங்கள் ஐ.டீ.எச் வைத்திய சாலையில் சுமார் 23 நாட்கள் இருந்தோம்.

செநெஹலதா: இவரை 14 ஆம் திகதி மாலை பொலன்னறுவை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றார்கள். 16 ஆம் திகதி அதிகாலையில் தான் ஐ.டீ.எச் வைத்தியசாலைக்கு அழைத்து வந்தார்கள். ஏப்ரல் மாதம் ஒன்பதாம் திகதி தான் வைத்தியசாலையிலிருந்து இவரை விடுவித்தார்கள்.

கித்சிரி: வீடு வந்து 14 நாட்கள் தனிமைப்படுத்தலில் இருந்தேன். எனது வீட்டின் மேல் மாடியில் ஒரு அறை இருக்கிறது. உணவு, பானங்களை தயார் செய்து மேலே எடுத்து வந்து அங்கு இருக்கும்

கதிரையில் வைத்துவிட்டுச் செல்வார்கள். நான் அதனை எடுத்து அருந்துவேன். எனது உடைகளை நானே கழுவிக் கொண்டேன்.

செநெஹலதா: எனது தாயும் தந்தையும் என்னோடு தான் இருந்தனர். இவர் இங்கே வந்த அன்று இந்த நுழைவாயிலால் இவர் வரும்பொழுது இவரைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் அவர்களுக்கு இருந்தது. எங்களுடைய வாகனத் தரிப்பிடத்திற்கு அருகில் அவர்கள் நின்று கொண்டார்கள். இவர் வீட்டிற்குள் வந்த பிறகு இவர் கைகளையும் கால்களையும் கழுவிக் கொள்ளவென மஞ்சள் நீர் ஒரு பாத்திரத்தில் தயாரித்து வைத்திருந்தனர். அம்பியூலன்ஸ் வண்டி வரும்போது மகள் மாடியிலிருந்து பார்த்துக்கொண்டிருந்தார். ஏனென்றால் இவர் நோய்வாய்ப்பட்டிருந்தார் என்பதை அடுத்தவர்கள் தெரிந்து கொள்வதனை நான் விரும்பவில்லை. ஏனென்றால் மனிதர்களுக்கு இது பற்றி சரியான அறிவு இல்லை. அவ்வாறு தேவைக்கு அதிகமாக நாங்கள் ஏன் மனிதர்களுக்கு அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும்? அதனால் நான் அனேகமானவர்களிடம் சொல்லி வைத்திருந்தேன்: இவர் தனிமைப்படுத்தல் முகாம் ஒன்றில் தான் இருக்கிறார் என்பதாக. அங்கும் யாராவது ஒரு நோயாளி கண்டுபிடிக்கப்பட்டால் மேலும் 14 நாட்கள் இருந்துவிட்டுத் தான் ஏனையவர்களும் வர வேண்டி ஏற்படும். அவருடைய சகோதரரின் குடும்பத்தில் சகோதரரின் மனைவிக்கும் பின்னர் சகோதரனின் மகளுக்கும் இந்த நோய் ஏற்பட்டது. அவர்களை ஐ.டி.எச் வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றனர். சகோதரரின் மனைவி பொலன்னறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

கித்சிரி: தாமதித்தால் நாங்கள் தகவல் கொடுக்கவில்லை என்று பிரச்சினைகள் ஏற்படலாம் என்பதால் நான் வீடு வந்தவுடன் அன்றைய தினமே பொது சுகாதார பரிசோதகருக்கு அறிவித்தேன். நான் கதைத்த மறுநாளே பொது சுகாதார பரிசோதகரும் சுகாதார மருத்துவ அதிகாரியும் எங்கள் வீட்டுக்கு வந்தனர். அந்த வைத்தியர் மிகவும் சிறந்த ஒரு மனிதர். மேலும் 14 நாட்கள் வீட்டுக்குள்ளேயே இருக்கும் படி அவர்கள் என்னிடம் வேண்டிக் கொண்டனர். ஒரு பெண் வைத்தியரும் இன்னும் ஒரு ஆணும் தான் வந்தனர்.

செநெஹலதா: எனக்கு நடந்த இன்னொரு விடயத்தையும் நான் சொல்ல வேண்டும். நான் விமான நிலையத்துக்கு சென்றேன் என்றாலும் இவரோடு ஒரு வார்த்தையேனும் பேசவோ, வாகனத்தை நிறுத்தி அதன் ஜன்னலுக்கு ஊடாக கதைக்கவோ கூட என்னால் முடியவில்லை. கையசைத்து விட்டு வந்தது மாத்திரம்தான். இவர் சுகவீனமுற்று அழைத்துச் செல்லப்பட்டதற்கு அடுத்த நாளே பொலிஸ் அதிகாரிகள் 7 பேர் மட்டில் வீட்டுக்கு வந்தனர். அவர்களோடு சேர்ந்து மற்றொரு உயர் அதிகாரியும் வந்திருக்கிறார் என்பதை நான் புரிந்து கொண்டேன். அவர்கள் வீட்டின் உள்ளே வரவும் இல்லை முற்றத்தில் இருந்து கொண்டு என்னிடம் விவரங்கள் கேட்டனர். அறிவின்மை காரணமாக பின்வருமாறு நான் கூறினேன்: “விமான நிலையத்துக்கு அருகில் சென்றாலும் அவரோடு பேசக் கிடைக்கவில்லை. அவர் பஸ் வண்டியில் செல்வதை மாத்திரம் தான் நான் பார்த்தேன் என்பதாக. பின்னர் அவர்கள் அனைவரும் அவ்விபரங்களை மீண்டும் கேட்டுக் கொண்டனர். அயல் வீட்டவர்கள் எனது வீட்டுக்கு பொலிசார் ஏன் வந்திருக்கின்றனர்? என்று எட்டிப் பார்க்கத் தொடங்கினர். அது எவ்வாறு என்றால், நாங்கள் ஏதோ குற்றம் இழைத்தவர்கள் போலத்தான் அவர்கள் எங்களைப் பார்த்தார்கள். அவ்வளவு தூரம் அவர்கள் எங்களை குறைவாக மதிப்பிட்டார்கள். இந்தக் காரணத்தால் தான் நான் மன ரீதியாக பாதிக்கப்பட்டேன். உண்மையில் பொலிசாரோடு கதைத்த அனுபவம் எங்களுக்கு இல்லை. பொலிசார் விசாரணைகளை நடத்தும்

போது அதனை எதிர் கொள்வது மிகவும் சிரமமானது. எனது தொழில், பிள்ளைகள் எங்கே பாடசாலைக்குச் செல்கிறார்கள் போன்ற விபரங்களை பாதை நடுவில் இருந்து கொண்டு கேட்டார்கள். அவ்வாறு அவர்கள் விசாரணை நடத்தி விட்டுச் சென்ற பின்னர் அடுத்தநாள் சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்திலிருந்து சிலர் வந்தனர். அவர்கள் வீட்டுக்குள் வந்து நல்லமுறையில் என்னோடு கதைத்தனர். அது நடந்து ஒரு மணித்தியாலம் செல்வதற்கு இடையில் பொலிஸ் அதிகாரிகள் இருவர் வந்தனர். ஒருவர் சீருடையில். மற்றவர் சாதாரண உடையில். நுழைவாயிலால் உள்ளே வரக் கூட இல்லை. முன்னர் போலவே அவர்கள் பாதையின் நடுவில் இருந்து கொண்டே கேள்விகள் கேட்கத் தொடங்கினர். நான் சென்ற இரவு கூறிய அதே விபரங்களை மீண்டும் கூற வேண்டி ஏற்பட்டது. சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்தில் இருந்து வந்தவர்களுக்கும் நான் இந்த விபரங்களை கூறியிருக்கிறேன். முதல் நாள் இரவு வந்தவர்களுக்கும் இந்த விபரங்களைச் சொல்லி இருக்கிறேன். தற்பொழுது வந்திருக்கின்ற இருவருக்கும் அதே விபரங்களை நான் சொன்னேன். அவர்கள் மொரட்டுவ பொலிஸ் நிலையத்தில் இருந்து வந்தவர்கள். ஒருவர் உப பொலிஸ் அத்தியட்சகர். இராணுவ புலனாய்வுப் பிரிவு அதிகாரி ஒருவரும் அங்கு இருந்திருப்பார் என நான் நினைக்கின்றேன். இவ்வாறான விடயங்கள் நடப்பது தான் கவலை தரும் விடயம்.

என்னுடைய கணவர் எத்தனை மணிக்கு, எந்த சந்தர்ப்பத்தில் இலங்கை வந்தார்? என்பதையும், வந்தவர்கள் வீட்டுக்கு வர அனுமதிக்கப்பட்டதா? என்பதைப் பற்றியும் அவர்கள் எங்களுக்கு முன்னர் தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும். உண்மையில் நான் மிகவும் கவலைப்படுகிறேன், அவர் நோய்வாய்ப்பட்டு இருக்கும் சந்தர்ப்பத்தில், அதுவும் மரணத்தை ஏற்படுத்துகின்ற ஒரு நோய் ஏற்பட்டு இருக்கின்ற நிலைமையில் தான் அங்கிருந்து வந்தார். அவை அனைத்தையும் தாங்கிக் கொண்டு இவ்வாறு ஏற்படும் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. அதன் பின்னர் நாங்கள் விமான நிலையத்திற்கு அருகாமையில் சென்ற காரணத்தினால் நாங்களும் தனிமைப்படுத்தலில் இருக்க வேண்டும் என்று அவர்கள் கூறினார்கள். அப்போது நான் அவரிடம் கேட்டேன்: அலுவலரே! என்னை தனிமைப்படுத்தலில் இருக்கும்படி நீங்கள் கூறுகின்றீர்கள், இங்குள்ள நடைமுறைகள் பற்றி உங்களுக்கு தெரியுமா? அங்கிருந்து வருபவர்களை நுழைவாயிலால் கூட வெளியே வர விடாமல் அப்படியே உள்ளே வைத்து பஸ் வண்டிகளில் ஏற்றிக் கொண்டு தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அழைத்துச் செல்கிறார்கள் என்ற விடயம் உங்களுக்கு தெரியுமா? என்று கேட்டேன். அதன் பின்னர் பொதிகள் கொண்டு வந்தீர்களா? என்று அவர் கேட்கிறார். இதுதான் இங்கு நடக்கும் பெரிய பகடி.

அவர்களுடைய கடமை மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் விடயங்கள் பற்றி அவர்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டும். மனிதர்களை அசௌகரியங்களுக்கு உட்படுத்தக் கூடாது. பின்னர் நானும் அவர்களோடு தர்க்கம் புரிந்தேன். பிறகு நான் உள்ளே வந்து சொன்னேன்: திருடர்கள், பாரதூரமான குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் ஆகியோருக்குக் கூட இந்தளவு பிரச்சினைகள் இருக்க மாட்டாது என்று. பின்னர் அவர்கள் தனிமைப்படுத்தலில் ஈடுபட்டிருப்பதாக தெரிவிக்கும் விளம்பரத்தை ஒட்டினர். அப்பொழுது நான் அவர்களைப் பார்த்து, “இந்த அறிவித்தலை ஒட்டாதீர்கள். நாங்கள் தனிமைப்படுத்தலில் இருக்க வேண்டிய தேவையில்லை. சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய அலுவலர்களும் வந்து விட்டுத் தான் சென்றார்கள். எனவே, இந்த அறிவித்தலை அகற்றி விடுங்கள்.” என்று சொன்னேன். அதற்கு அவர்கள், “எங்களுக்கு எதுவும்

செய்ய முடியாது. எங்களிடம் செய்யும்படி கூறப்பட்டதைத் தான் நாங்கள் செய்கிறோம்." என்றும் "நீங்கள் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தோடு கதைத்து இப் பிரச்சினையை தீர்த்துக் கொள்ளுங்கள்." என்றும் கூறினார்கள். அதாவது பொது சுகாதார பரிசோதகர் செய்ய வேண்டிய வேலையை தான் மொரட்டுவ பொலிசார் மேற்கொண்டனர். பிறகு நான் மொரட்டுவ பொலிஸ் நிலையத்துக்குக் கதைத்தேன். அதற்கு அவர்கள், "அறிவித்தலை அகற்ற முடியாது, சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தோடு பேசுங்கள்." என்று கூறினர். அதன் பின்னர் நான் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்குச் சென்று, எனக்கு இவ்வாறான பிரச்சினை ஒன்று ஏற்பட்டு இருக்கிறது, அது பற்றிக் கதைக்க வேண்டும் என்று சொன்னேன். வைத்தியர்கள் இருவரும் அங்கேயே இருந்தனர். பெண் வைத்தியரும் ஏனைய வைத்தியரும் என்னுடைய பிரச்சினைகள் அனைத்தையும் செவிமடுத்து விட்டு, "ஆரம்பத்திலேயே உங்களுடன் நாங்கள் கதைத்தோமே, நாங்கள் தான் அந்த அறிவித்தலை ஒட்டி இருக்க வேண்டும் அவர்கள் அல்ல." என்றும் "தெளிவில்லாமல் கடமை புரியச் சென்றால் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படும்." என்றும் கூறினர். "இப்பொழுது உங்களுடைய உளநிலை எங்களுக்குப் புரிகிறது. நீங்கள் இரண்டு பிள்ளைகளோடு வீட்டில் இருக்கிறீர்கள். உங்களுடைய கணவர் அங்கே நோய்வாய்ப்பட்டிருக்கிறார். இது சுற்றி இருப்பவர்களுக்கும் ஒரு பெரிய பிரச்சினையாக மாறிவிட்டது. இப்பொழுது எங்களையும் கொரோனா நோயாளர்கள் போல் தான் கணிக்கிறார்கள். ஆனால் அந்த நோய்க்கும் எங்களுக்கும் எவ்வித தொடர்பும் இருக்கவில்லை. அதன்பின்னர் நான் நிறைய அழுதேன். ஏனென்றால் உளரீதியாக எனக்கு ஏற்பட்ட அழுத்தம் மிக அதிகம். ஏனென்றால் இந்தப் பிரச்சினை காரணமாக தொடர்ந்து பொலிசார் வீட்டுக்கு வந்து கொண்டிருந்தமை என்னை பெரிதும் பாதித்தது. உளவுத்துறையிலிருந்து என்று சொல்லிக்கொண்டு சிலர் வருவார்கள். ஒரே விபரங்களை மீண்டும் மீண்டும் சொல்ல வேண்டிய நிலைமை எனக்கு ஏற்படுகிறது. உண்மையில் அவ்வாறு சொல்லிச் சொல்லி எனக்கு அலுத்துப் போய்விட்டது. அதனை தாங்கிக் கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டது. குறிப்பாக பொலிசார் இரவு 10 மணி 11 மணி போன்ற நேரங்களிலும் எங்களுடைய வீட்டைத் தேடிக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவ்வாறான சந்தர்ப்பங்களில் பாதையின் ஒரு கோடியில் இருந்து எமது வீடு பற்றி பொலிஸ் ஜீப்பில் வந்து விசாரிக்கும்போது அங்கிருப்பவர்கள் எப்படி அதனைப் புரிந்து கொள்வார்கள்? அங்கிருக்கும் எல்லோரும் எங்களைப் பற்றித் தெரிந்தவர்கள். அங்கு எங்களைப் பற்றித் தெரியாதவர்கள் கொஞ்சம் பேர்தான் இருக்கிறார்கள். பொலிசார் வந்து விட்டுச் சென்ற பின்னர் அடுத்த நாள் காலை கடைச் சந்தியில், நான் என்னுடைய கணவரை வீட்டுக்கு அழைத்துவந்து கட்டிலுக்குக் கீழ் ஒளித்து வைத்திருந்ததாகவும் பொலிசார் வந்து அவரை அழைத்துச் சென்றதாகவும் பொய் கூறி இருக்கிறார்கள். அதாவது என்னுடைய கணவருக்கு கொரோனா நோய் ஏற்பட்டு அவரை அழைத்துச் செல்ல பொலிசார் வந்து இருப்பதாக கதை விட்டிருக்கின்றனர். வேறு ஒருவர் என்னுடைய தந்தையை அவ்வாறு அழைத்துச் சென்றதாகக் கூறி இருக்கிறார்.

என்னுடைய பிள்ளைகளில் இளையவளை கட்டுப்படுத்திக்கொள்வது மிகவும் சிரமமாக இருந்தது. கணவர் இத்தாலி செல்லும் பொழுது அவளுக்கு இரண்டரை வருடங்கள். அவள் என்னுடைய கணவரோடு மிகவும் நெருக்கமானவள். ஏனென்றால் பகல் நேரங்களில் என்னுடைய கணவரோடு தான் அப்பிள்ளை இருந்தது. அவர் அங்கு போய் இருந்த சந்தர்ப்பத்திலும் வீடியோ தொலைபேசி மூலம் அதிக நேரம் கதைப்பவராக அவர் இருந்தார். என்னுடைய கணவர் வீட்டுக்கு வருகின்ற

பொழுதும் நான் பிள்ளையைத் தான் பார்த்துக் கொண்டிருந்தேன். ஏனென்றால் தந்தையைக் கண்ட மாத்திரத்தில் அவள் போய் அவரது மேலில் தொங்கிக்கொள்ளும் என்ற அச்சம் எனக்கு இருந்தது. அந்த அளவுக்கு இந்தப் பிள்ளையைக் கட்டுப்படுத்திக் கொள்ள நான் சிரமப்பட்டேன். என்னுடைய கணவர் கதவைத் திறக்கும் சத்தம் கேட்ட மாத்திரத்திலேயே மகள் பாய்ந்து போய் தந்தையை கட்டிக்கொண்டார். தந்தை தன்னை அணைத்துக்கொள்ள கைகளை விரிக்கும் வரை அவள் பார்த்துக் கொண்டிருந்தாள். உண்மையில் கணவர் சற்றுப் பயந்து இருந்தார். “குழந்தையை சற்று அணைத்துக் கொள்ளுங்கள்.” என்று நான் சொன்னேன். ஆரம்பத்தில் அவர் தனிமைப்படுத்தலில் இருக்கும் எட்டாவது நாள் தன்னுடைய சிறிய விரலால் தன்னுடைய தந்தையைப் பிடிக்க முடியாதா? என்று பிள்ளை என்னிடம் கேட்டது. அப்பொழுது கணவர் சனிடைசர் இட்டு தனது கைகளை நன்கு சுத்தப்படுத்திக் கொண்டு வந்தார். அதன் பின்னர் பிள்ளையின் கையையும் சனிடைசர் இட்டு தொற்று நீக்கம் செய்த பின்னர் நான் கையை சற்று பிடிக்கச் சொன்னேன். பின்னர் கணவரின் விரலை ஊன்றிப் பிடித்து விட்டு, சத்தமாக சிரித்து சனிடைசர் போத்தலை எடுத்து தன்னுடைய கைகளை துடைத்துக் கொண்டே நான் கைகளை துடைத்துக் கொண்டேன் என்று குழந்தை சொன்னது.என்ன பிரச்சினைகள் இந்தாலும், இரண்டு குழந்தைகளின் முகங்களைப் பார்ப்பது எல்லா வேதனையையும் குறைத்து புதிய வாழ்க்கையைத் தொடங்க உதவும்.



## ஏழைகளான எங்களுக்கு எங்கே ஒன்லைன்.? !

கொரோனா தொற்று நோய் பரவல் காரணமாக கூடுதலாக பாதிப்புக்கு உட்பட்டவர்கள் எங்களைப் போன்ற ஏழைகள் தான். என்னுடைய இரண்டு பிள்ளைகளும் கல்வி கற்பதில் மிகவும் ஆர்வம் கொண்டவர்கள், திறமைசாலிகள். பாடசாலைகளில் ஆசிரியர்கள் இணையத்தளத்தினூடாக கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். என்றாலும் எங்களுக்கு தொலைபேசி, கம்பியூட்டர், டப் போன்ற வசதிகள் எதுவும் இல்லாத காரணத்தால் என்னுடைய இரண்டு பிள்ளைகளுக்கும் ஒரு பாடத்திலாவது கலந்து கொள்ள வாய்ப்புக் கிடைக்கவில்லை. ஏனைய நாட்களைப் போல நண்பர்களின் வீடுகளுக்குச் சென்று வீட்டு வேலைகள் பற்றிக் கேட்டு எடுத்து வந்து வீட்டில் அவற்றை செய்வதற்குக் கூட அவகாசம் கிடைக்கவில்லை. ஏனென்றால் இந்தத் தொற்று நோய்க்கு அனைவருமே பயந்தனர். பாடசாலை ஆரம்பித்ததும் வீட்டுவேலைகளைச் செய்யவில்லை என்று ஆசிரியர்கள் ஏசுவார்களோ என்று என்னுடைய பிள்ளைகள் இருவரும் பெரும் மன உளைச்சலில் இருக்கிறார்கள்.

**கதையை முன் வைப்பவர் : ஈ.வீ.ஜீ. துஷினி மதுபாஷினி**


NEINA MOHOMED NAJEEBA

# அந்நேரத்தில் அனைவரும் சிறுவர்களை போல அழுதார்கள்

நான் நைனா முகமது நஜிபா. கோவிட் பேரழிவு ஏற்பட்டபோது நான் குவைத்தில் இருந்தேன். 2016ல் நான் இரண்டாவது முறையாக அங்கு சென்றேன். இந்த சூழ்நிலையில் எங்களை இலங்கைக்கு அனுப்புமாறு தூதரகத்திடம் கோரிக்கை விடுத்தோம். பின்னர் ஏப்ரல் 21 முதல் குவைத்தின் சல்வாவில் 21 நாட்கள் தனிமைப்படுத்தப்பட்டோம். எப்படியோ நாங்கள் மே 19 அன்று இலங்கையில் கால் வைத்தோம். அந்த விமானத்தில் 481 பேர் நம் நாட்டுக்கு வந்தனர். நாங்கள் விமான நிலையத்தில் திரையிடப்பட்டு நேராக சீன துறைமுக தனிமைப்படுத்தல் மையத்திற்கு அனுப்பப்பட்டோம். நான் இலங்கைக்கு வந்தேன், ஆனால் எனது குடும்பத்தினரைப் பார்க்கவில்லை என்று எனக்கு மிகவும் வருத்தமாக இருந்தது.

நாங்கள் தனிமைப்படுத்தலில் சுமார் 35 நாட்கள் வைக்கப்பட்டோம். சில நிமிடங்களிலில் என் குடும்பத்தைப் பார்க்காமல் நான் இறக்கப்போகிறேனோ என்று அஞ்சினேன். இதற்கிடையில், ரமலான் நோன்பு தொடங்கியது. முதல் சில நாட்கள் மிகுந்த சோகத்துடன் கடந்து சென்றன. இந்த முகாமில் சிங்கள்வர்கள, தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் இருந்தனர். படிப்படியாக நாங்கள் நட்பை வளர்த்துக் கொண்டோம். உண்மையில் அந்த முகங்களை ஒருபோதும் மறக்க முடியாது. நாங்கள் பிரிந்து வீட்டிற்கு அனுப்பப்பட்டபோது, எல்லோரும் சிறு குழந்தைகளைப் போல அழுதனர். மற்றுமொரு மிகப்பெரிய சோகம் என்னவென்றால், பல ஆண்டுகளாக வெளிநாட்டில் இருந்த என்னால் ஒரு டொப்பி கூட வீட்டிற்கு எடுத்துச் செல்ல முடியவில்லை.

கதையை சமர்ப்பித்தவர்: நைனா முகமது நஜிபா | திருகோணமலை மாவட்டம்


UWANESHWARI

# முகம் பார்த்துப் பார்த்துத் தான் பணம் பங்கிட்டார்கள்

எனது பெயர் ராஜவேலு உவனேஸ்வரி. நாங்கள் மாத்தளை மாவட்டத்தில் ரத்தொட்டை பிரதேசத்தில் ஹரங்கந்த கிராமத்தில் ஹுனுகல தோட்ட மேல் பிரிவில் வசிக்கிறோம். லயன் அறை ஒன்றில் தான் நாங்கள் வாழ்கிறோம். எங்கள் வீடு 10 அடிக்கு 10 அடி விசாலம் கொண்ட ஒரு சிறிய அறை. அதிலே நாங்கள் ஆறு பேர் வாழ்கிறோம்.

எனது கணவர் சுப்பிரமணியம் கனகராஜ். அவர் கூலி வேலை செய்து வருகிறார். எங்களுக்கு நான்கு பிள்ளைகள் இருக்கிறார்கள். பிள்ளைகள் நால்வரையும் பார்த்துக்கொள்ள வேண்டிய தேவை இருப்பதால் நான் வேலைக்கு செல்வதில்லை. தொற்றுநோய் ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் கணவர் வேலை செய்த கடை மூடப்பட்டது. அவர் கடையில் இருந்து வரும் பொழுது 5,000 ரூபாய் பணம் எடுத்து வந்தார். எங்களுடைய துரதிஷ்டம் வந்த மாத்திரத்தில் அவர் நோய் வாய்ப்பட்டார். வைத்தியசாலைக்கு சென்றதும் சில பரிசோதனைகளை வெளியில் செய்து கொண்டு வருமாறு கூறினார்கள். அதற்கு 3,500 ரூபாய் செலவழிந்தது. மீதி இருந்த பணத்தில் அரிசி ஐந்து கிலோ வாங்கிக் கொண்டு வீடு வந்தோம். கிராம உத்தியோகத்தர் விநியோகித்த 5 கிலோ அரிசியும் எங்களுக்கு கிடைத்தது. எங்களுக்கு கிடைத்தது அது மாத்திரம் தான். எங்கள் தோட்டத்தில் அனேகம் பேருக்கு இடைக்கிடை உலர் உணவுப் பொருட்கள் கிடைத்தன என்றாலும் எங்களுக்கு யாரும் அவற்றைத் தரவில்லை.

உண்மையில் அது ஒரு அரசியல் பழிவாங்கல். எங்கள் பிரதேசத்தில் அரசியல் பழிவாங்கல் அதிகமாக இடம்பெறுகிறது. அரசாங்கம் வழங்கிய 5000 ரூபாய் பணத்தை பெற்றுக்கொள்ளச் சென்ற சந்தர்ப்பத்தில் பெரும் சண்டை மூண்டது.

வந்திருந்தவர்களின் முகத்தைப் பார்த்துப் பார்த்துத் தான் அவர்கள் பணம் பங்கிட்டார்கள். எப்படியோ எங்களுடைய அதிர்ஷ்டம் இறுதியில் அதிகாரிகள் ஒரு தீர்மானத்திற்கு வந்தார்கள். அரசியல்வாதிகளை துரத்திவிட்டு மக்களுக்கு பணத்தைப் பங்கிட வேண்டுமென்று. அதன் காரணமாக எனக்கும் இரண்டு மாதங்களுக்கு உரிய பணம் கிடைத்தது. என்றாலும் நாங்கள் ஆறு பேர் வயிறு நிறைய சாப்பிட அந்தப் பணம் போதுமானதாக இருக்கவில்லை. நாங்கள் இருவரும் எங்கள் பிள்ளைகள் நால்வரும் பசியோடு இருந்த நாட்கள் மிக அதிகம். இந்தக் காலத்தில் தான் சாதாரணமாக தோட்டங்களில் கராம்பு பறிப்பார்கள். கூலி வேலை செய்து எதையாவது தேடிக்கொள்ள வேண்டும் என்று தோட்டங்களில் வேலைக்குச் சென்றோம். என்றாலும் ஊரடங்குச் சட்டம் காரணமாக பொருட்களை விற்பனை செய்ய உரிய சந்தை வாய்ப்பு இல்லை என்று காரணம் கூறி எங்களுக்கு உரிய கூலியை அவர்கள் தரவில்லை. இப்பொழுது நாங்கள் பானையிலிருந்து அடுப்பில் விழுந்த நிலைமைக்குத் தள்ளப்பட்டோம். கடனுக்குப் பணம் தாருங்கள் என்று கேட்டால் யாருமே உதவி செய்யும் நிலையில் இல்லை. அதற்காக பிறரை குறை கூற முடியாது. கூலி வேலை செய்து அன்றை அன்றைக்கு எதையாவது உழைத்துக் கொள்ளும் எங்களை நம்பி எப்படி கடன் தரமுடியும்? மிகவும் சிரமப்பட்டு மிகவும் கெஞ்சிக் கேட்டு சிறு சிறு கடன் தொகைகளைப் பெற்றுக்கொண்டோம்.

வாழ்க்கையை ஓட்டுவதற்காக எங்களுக்குக் கடன் தந்தவர்கள் இப்பொழுது எங்களைத் தேடி எங்கள் வீட்டுக்கு வருகின்றனர். உண்மையில் மிகவும் வெட்கமாக இருக்கிறது. நாங்கள்

ஏழைகளாக இருந்தாலும் எங்களுக்கும் சுயகௌரவம் என்ற ஒன்று இருக்கின்றது. எனது கணவருக்கு தொழிலை செய்து கொள்ளவும் முடியாத நிலை இருக்கிறது. நான்கு பிள்ளைகள் இருப்பதனால் எனக்கும் வேலைக்குப் போக முடியாது. நாங்கள் இப்பொழுது நாட்டுக்கு கடன்காரர்களாக மாறி இருக்கிறோம்.



# குளக்கரையில் தனித்துப் போன பெருமூச்சு

இலங்கையில் வசிக்கும் தெலுங்கு மக்களின் வரலாறு பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்ததாகும். நாடோடிகளாக அடையாளப்படுத்தப்படும் இம்மக்கள் சுமார் 4000 பேர் வரை இங்கே வாழ்கின்றனர். இவர்கள் இந்தியாவின் ஆந்திரப் பிரதேசத்திலிருந்து இந்நாட்டுக்குக் குடிபெயர்ந்தவர்கள். தெலுங்கு மொழியிலிருந்து பிரிந்து வந்த மொழிகளில் ஒன்றைப் பேசுகின்றனர் என்றாலும் இன்று அவர்கள் அனைவரும் போல் சிங்கள மொழியை சரளமாக பேசுகின்றனர். பல தலைமுறைகளாக சம்பிரதாயபூர்வமல்லாத தொழில்களில் ஈடுபட்டுத் தான் அவர்கள் பணம் சம்பாதித்தார்கள். இவர்களில் அனேகமான ஆண்கள் நாகப் பாம்பு, குரங்குகள், மலைப்பாம்புகள் போன்றவற்றைக் காட்டி பணம் சம்பாதிக்கும் தொழிலை செய்கின்றனர். பெண்கள் சாஸ்திரம் சொல்வார்கள். சிலர் கத்தரிக்கோல் மற்றும் தேங்காய்த் துருவி தீட்டுதல் போன்ற தொழில்களைச் செய்கின்றனர். வேறு சிலர் ஊதுபத்தி விற்பனையிலும் கூலி வேலைகள் செய்வதிலும் ஈடுபடுகின்றனர். அவர்களுக்கு நிரந்தரமான வசிப்பிடம் இல்லை.

ஓரிரு வாரங்கள் அல்லது ஓரிரு மாதங்கள் எங்காவது திறந்தவெளி ஒன்றில் கூடாரம் அடித்துக் கொள்ளும் இவர்கள் குறித்த அப்பிரதேசம் முழுக்க அலைந்து திரிந்து ஜீவனோபாயத்தைத் தேடிக் கொள்வர். பிறகு அங்கிருந்து வேறு இடத்திற்கு இடம்பெயர்வது, அங்கிருந்து பிறிதொரு இடத்துக்கு இடம்பெயர்வது என்று இவர்கள் நாடோடிகளாக வாழ்க்கை நடத்துவார்கள். ஈ எறும்புக்குக் கூட தீவினை செய்யாத இம்மக்களில் ஒரு பிரிவினர் தொற்று நோய் காலத்தில் அனுராதபுர மாவட்ட கலாவெவ குளக்கரையில் பலளுவெவ என்ற கிராமத்தில் தங்கியிருந்தனர்.

**வேலாமாணிக்கம் சுரேஷ்**

எங்கள் குழுவில் 15 பேர் வரை இருந்தனர். மூன்று வேளையல்ல ஒரு வேளை சாப்பிடக் கூட வழியில்லாத நாட்கள் பல இருந்தன. யாருமே எங்களைப்பற்றி தேடிப் பார்க்கவில்லை. நாங்கள் சாப்பிட்டோமா? குடித்தோமா? என்பதைப் பற்றி யாரும் கரிசனை காட்டவில்லை. நாடோடிகளாக இருந்தாலும் நாமும் இந்த நாட்டு மனிதர்கள். ஊர் மக்கள் எங்களை புறக்கணித்தார்கள். வீடுகளில் எங்களுக்கு வேலை இல்லாமல் போனது. எங்களைக் காணும் போது சிலர் தங்கள் வீடுகளின் கதவுகளை மூடிக் கொண்டனர். உண்மையில் சரியாக கோவிட் நோயாளர்கள் போலத்தான் அவர்கள் எங்களைப் பார்த்தார்கள்.

**ரிஸ்கானா**

நாங்கள் வீட்டுக்குள்ளேயே முடங்கி விட்டோம். எனக்கு ஒரு கைக்குழந்தை இருக்கிறது. மேலும் மூன்று வயது மகன் ஒருவரும் இருக்கிறார். எனக்கு தண்ணீரை மாத்திரமாவது குடித்துவிட்டு இருக்க முடியும். என்றாலும் நான் பிள்ளைக்கு பால் கொடுக்க வேண்டும். குளத்திலிருந்து பிடித்த மீன்களை உப்பிட்டு அவித்து சாப்பிட்டுத் தான் நாங்கள் எங்களுடைய பசியை ஆற்றிக் கொண்டோம்.

**வேலா மாணிக்கம் சுரேஷ்**

குளத்தில் மீன் பிடித்தோம் என்றாலும் பிடித்த மீன்களை விற்பனை செய்ய மிகவும் சிரமப்பட வேண்டியதாயிற்று. சைக்கிள் வண்டிகள் இருந்தவர்களுக்கு மாத்திரம் தான் வீடு வீடாகச் சென்று மீன் விற்பனை செய்ய போலீசார் அனுமதி வழங்கினர். எங்களுக்கு எங்கே சைக்கிள்கள். நாங்கள் பிடித்த மீன்களை பாதையில் வைத்துக் கொண்டிருந்தோம். சைக்கிள்களில் வந்த முதலாளிமார் எங்களுடைய மீன்களை அற்பக் கிரயத்திற்குத் தான் வாங்கிச் சென்றனர்.

**எஸ்.எம். ஹனீபா**

நான் இப் பிரதேசத்தில் வாழும் ஒரு கடை உரிமையாளன். இவர்கள் இந்தப் பிரதேசத்துக்கு வந்த நாளிலிருந்து எனது கடையில் தான் பொருட்களைக் கொள்வனவு செய்தார்கள். கோவிட் நோய் ஏற்பட்ட காலத்தில் அவர்கள் வந்து என்னிடம் உதவி கேட்டார்கள். என்றாலும் எந்த அளவுக்குத்தான் கடனுக்கு வழங்க முடியும்? அத்தோடு இவர்கள் இன்று ஓரிடத்தில், நாளை வேறோரிடத்தில் என்று வாழ்க்கை நடத்துபவர்கள். நிரந்தர வதிவிடம் ஒன்று இருக்குமானால் பயம் இல்லாமல் கடன் கொடுக்க முடியும். என்றாலும் பிள்ளைகளை பசியில் போடுவது எப்படி? அந்தப் பிள்ளைகளின் முகத்தைப் பார்த்துக் கொண்டே நான் எப்படி அவர்களுக்கு பொருள்களை கொடுக்காமல் இருக்க முடியும்? நான் அவர்களைப் பார்த்துச் சொன்னேன்: ‘‘கோபித்துக் கொள்ளாமல் அடையாள அட்டையை வைத்து பொருட்களை எடுத்துச் செல்லுங்கள்’’ என்று. ஒரு வகையில் அது மனிதாபிமானம் இல்லாத ஒரு செயல் தான். இருந்தாலும் நான் என்ன செய்யமுடியும்? அக்காலப்பகுதியில் நான் இவர்களுக்கு 45,000 ரூபாய் பெறுமதி கொண்ட பொருட்களை கொடுத்து இருக்கிறேன். ஆனால் அது எப்பொழுது எனக்கு திருப்பிக் கிடைக்கும் என்பது பற்றிய நம்பிக்கை இல்லாமல் தான் இருக்கிறேன்.

**ஹரிஷ் சந்திரன்**

அரசாங்கம் முழு நாட்டு மக்களுக்கும் 5,000 ரூபாய் கொடுத்தது என்றாலும் அது எங்களுக்குக் கிடைக்கவில்லை. இன்று வரை எங்களுக்கு அது கிடைக்கவே இல்லை. நாங்கள் இங்கே மூன்று மாதங்களாக இருக்கிறோம். அரசாங்க அதிகாரிகள் வந்து நாங்கள் இருந்த இடத்திலிருந்து அகன்று செல்லுமாறு கட்டளையிட்டனர். என்றாலும் இந்த கொள்ளை நோய் காலத்தில் நாங்கள் எங்கே செல்வது? நாங்களும் இந்த நாட்டு மக்கள் தானே!

**கதையை முன்வைத்தவர்: சுலோச்சனா வீரசிங்க**

# கோவிட் கால நீர்கொழும்பு மனிதாபிமானம்

ஏப்ரல் மாதம் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பற்றிய சிறு குறிப்பு ஒன்றுடன் இக்கதையை சொல்வதுதான் பொருத்தமானது. அதனை சிறிதாக, வேறாக முன்னுரையில் எழுத முடியும்.

உயிர்த்த ஞாயிறு தினமான 2019 ஏப்ரல் 21ம் திகதி இடம் பெற்ற அந்த மிகவும் துர்ப்பாக்கியமான நிகழ்வு இலங்கையின் கத்தோலிக்க தேவாலயங்கள் மூன்றும் மற்றும் கொழும்பில் அமைந்துள்ள அதி நவீன ஹோட்டல்கள் மூன்றும் தேசிய தவ்ஹீத் ஜமாஅத் என்னும் தீவிரவாதக் குழுவினரால் தற்கொலைத் தாக்குதலுக்கு உட்பட்டன. சுமார் 45 வெளிநாட்டவர்களும் 03 பொலிஸ் அதிகாரிகளும் குண்டுதாரிகள் எட்டுப் பேரும் உள்ளிட்ட 260 பேர் மரணத்தை தழுவினார்கள். சுமார் 500 பேர் காயங்களுக்கு உட்பட்டனர். இவ்வாறு தாக்குதலுக்கு உட்பட்ட ஒரு தேவாலயம் நீர்கொழும்பில் அமைந்திருக்கிறது. இந்த துர்பாக்கிய நிகழ்வைத் தொடர்ந்து நீர்கொழும்பு பிரதேசத்தில் முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையிலான இன நல்லிணக்கம் பாதிக்கப்பட்டது. சிறு சிறு சம்பவங்கள் ஆங்காங்கே இடம்பெற்ற போதும் அரசாங்கம் மற்றும் சமாதான செயற்பாட்டாளர்கள் அர்ப்பணிப்போடு நடவடிக்கைகளை மேற்கொண்டதால் நிகழ்வுகள் முறையாக கட்டுப்படுத்தப்பட்டன.

நான் மௌலவி முஹம்மத் சல்மான். நீர்கொழும்பு நகர பள்ளிவாயிலின் பிரதான (இமாம்) மதத் தலைவர். நீர் கொழும்பு பெரிய பள்ளிவாயில் நிர்வாக சபையிலும் நான் அங்கத்துவம் வகிக்கிறேன். அந்த நிர்வாக சபையின் கீழ் 11 பள்ளிவாயில்கள் காணப்படுகின்றன. அந்த 11 பள்ளிவாயில்களுக்கும் ஒரு நிர்வாக சபை தான் காணப்படுகிறது. நல்ல விடயம் ஒன்று நடப்பதாக இருந்தால் நாங்கள் அதற்கு உதவுவதற்கு எப்பொழுதும் தயாராக இருக்கிறோம்.

கோவிட் 19 தொற்று நோய் பரவ ஆரம்பித்த போது எங்கள் பிரதேசத்தில் அனைவரும் போல் அசௌகரியங்களுக்கு உட்பட்டனர். ஏழை, பணக்காரர் என்ற பேதமில்லாமல் அனைவரும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தனர். அப்பொழுது முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த நாங்கள் ஒன்று சேர்ந்து, முஸ்லிம் மதத் தலைவர்கள் மாத்திரமன்றி பிரதேசத்தின் ஏனைய மதங்களின் தலைவர்களையும் இணைத்துக் கொண்டு பாதிக்கப்பட்ட அப்பாவி மக்களுக்கு உதவிகள் செய்ய வேண்டும் என்று தீர்மானித்தோம். இது உண்மையில் எமது நாடு அனர்த்தம் ஒன்றுக்கு முகம் கொடுத்த ஒரு சந்தர்ப்பமாகும்.

எங்களுக்கு சிங்களவர், தமிழர், முஸ்லிம் என்று பாகுபாடு காட்டி இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நேரம் இல்லை. அதனால் தான் நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து எங்களுக்குத் தெரிந்த செல்வந்தர்கள், வியாபாரிகள், சமூக சேவைகளில் சிறந்த ஒருங்கிணைப்போடு ஈடுபடுகின்றவர்கள் ஆகிய அனைவருக்கும் ஒரு சிறு அறிவித்தலை விடுத்தோம். இந்தச் சந்தர்ப்பத்தில் அனைவரும் ஒன்றிணைந்து இந்த சமூகப் பணியை மேற்கொள்வோம் என அவர்களிடம் வேண்டுகோள் விடுத்தோம். உண்மையில் எங்களுக்கு பிரமிக்கத் தக்க வகையிலான பதில்கள் கிடைத்தன. இந்த நாட்டில் இருப்பவர்கள் மாத்திரமன்றி வெளிநாடுகளில் இருக்கும் எங்கள் நண்பர்களும் கூட எங்களுக்கு பண உதவிகள் செய்தனர். அந்த அனைத்துப் பண உதவிகளையும் ஒரு சதம் கூட வீணாக்காத வகையில் ஒன்று சேர்த்து மிகச் சிறந்த முறையில் நாங்கள் செலவிட்டோம்.

முழுமையான வெளிப்படைத் தன்மையுடன் அந்தப் பணத்தை நாங்கள் செலவிட்டோம். கிடைத்த ஒவ்வொரு ரூபாவையும் செலவிட்ட ஒழுங்கு குறித்து உரிய பதிவுகளை மேற்கொண்டு வாட்ஸ்அப் சமூக வலைத்தளம் ஊடாக பகிரங்கப்படுத்தினோம். இந்நற்பணிக்கு உதவிய அனைவரும் விளங்கிக் கொள்ளும் வகையில் எங்களுக்குத் தரப்பட்ட ஒவ்வொரு சதத்தையும் எதற்காக செலவிட்டோம் என்பதை அனைவருக்கும் தெரியப்படுத்தினோம். நீர்கொழும்பில் இருக்கும் கத்தோலிக்க, கிறிஸ்தவ மற்றும் பௌத்த மக்களுக்கும் நாம் உதவி செய்ய வேண்டும் என்று கருதி கலந்துரையாடல் ஒன்றை நடத்தினோம். இவ் உதவிகளை கிறிஸ்தவ தேவாலயத்தின் மூலம் செய்வதற்குத் தீர்மானித்து நாங்கள் பெரிய வீதி மற்றும் தளுபத ஆலயங்களுக்குச் சென்றோம். அவ்வாறே நாம் அகுருகாரமுல்ல சிறிய மற்றும் பெரிய விகாரைகளுக்கும் சென்று உலர் உணவுகளை மதகுருமார்களிடம் கையளித்தோம்.

அப்போது அந்த சங்கைக்குரிய மதகுருக்கள், ‘‘நாங்கள் தலையிடத் தேவையில்லை. நீங்களாகவே இவற்றை செய்யுங்கள்.’’ என்று எங்களிடம் கோரிக்கை விடுத்தார்கள். நாங்கள் நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்துக்கும் சென்றோம். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அவர்கள் நாங்கள் சென்ற எல்லா இடங்களுக்கும் வந்து எங்களுக்குப் பேருதவி புரிந்தார். இக்காலப்பகுதியில் பெரியவர்கள், சிறியவர்கள் என்ற பேதமின்றி அனைவரும் பிரச்சினைகளுக்கு உட்பட்டிருந்தனர். பொலிஸ் அதிகாரிகளுக்கும் உதவ வேண்டுமென்று நாங்கள் தீர்மானித்தோம். அவர்களுக்கும் நாங்கள் உலர் உணவுப் பொதி ஒன்று வீதம் வழங்கினோம். அவை ரூபாய் 2000 பெறுமதியான உணவுப் பொதிகள். ஒரு மாதம் அல்லது 20 நாட்களுக்குப் பயன்படுத்த முடியுமான அளவு பொருட்கள் அப்பொதிகளில் காணப்பட்டன. எங்களுக்கு முஸ்லிம் சகோதரர்கள் அனைவரும் உதவி புரிந்தனர். அவர்களது வாகனங்களை எங்களுக்கு தந்து உதவினர். அவர்களிடமிருந்த மிகக் குறைந்தளவு வளங்களையும் எங்களுக்குத் தந்து ஒத்தாசை புரிந்தனர். அதனால் தான் இப்பணியை எங்களால் வெற்றிகரமாக நிகழ்த்த முடிந்தது. நாங்கள் இந்து சகோதரர்களுக்கும் உதவி செய்தோம்.

அப்பொழுது அவர்கள், ‘‘இந்தச் சந்தர்ப்பத்தில் நீங்கள் செய்வது மிகவும் பெறுமதியான ஒரு நற்காரியம்’’ என்பதாகக் கூறி எங்களுக்கு நல் வாழ்க்கையையும், நீண்ட ஆயுளையும் வேண்டி பிரார்த்தனை புரிந்தார்கள். நாங்கள் இந்த நற்பணிகளின் ஊடாக எதிர்பார்த்த ஒரே விடயம் சமூக ஒற்றுமை ஏற்பட வேண்டும் என்பதும் கடவுளின் ஆசிர்வாதம் கிடைக்க வேண்டும் என்பதும் தான். இந்த நற்பணிகள் எங்களுடைய ஒற்றுமையை மேலும் பலப்படுத்த உதவின.

**கதையை முன்வைத்தவர்: தியாகா சந்தனா | கம்பஹா மாவட்டம்**



# ATM பிரச்சினை

எனக்கு நல்லதொரு வேலை நடந்தது. ஏப்ரல் 20 ஆம் திகதியை அண்மித்த தினமொன்றில் வெலிசர கடற்படை முகாமிலிருந்து கோவிட் நோய்க்கு ஆளான சிலர் கண்டுபிடிக்கப்பட்டனர். அது பற்றி அறியாமல் இருந்த காரணத்தினால் அவர்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டு அவர்கள் நாடு முழுக்க வலம் வந்தார்கள். அவர்களில் ஒருவர் எங்கள் பகுதிக்கும் வந்த சந்தர்ப்பத்தில் அவர் தங்காலை இலங்கை வங்கியின் ஏடிஎம் இயந்திரத்தில் இருந்து பணம் எடுத்து இருக்கிறார். அது பற்றி எனக்கு எதுவும் தெரியாது நானும் அந்த ஏடிஎம் இயந்திரத்தில் இருந்து தான் பணம் எடுத்திருந்தேன். அந்த ஏடிஎம் இயந்திரத்தில் பணம் எடுத்தவர்களுடைய பெயர் விவரங்களை அவர்கள் பகிரங்கப்படுத்தினார்கள். என்னுடைய பெயரும் முகவரியும் அந்தப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

மின்னல் வேகத்தில் அந்தப் பட்டியல் முகப்புத்தகத்திலும் வாட்ஸ்அப் வலைத்தளத்திலும் வலம் வர ஆரம்பித்தது. என்னை அடையாளம் கண்டு கொண்ட என்னுடைய நண்பர்கள் நாலாபுறமும் இருந்து எனக்கு தொலைபேசி அழைப்புகளை எடுக்கத் தொடங்கினர்.

மிகுந்த உபதேசங்களையும் எச்சரிக்கைகளையும் அவர்கள் வாரி இறைக்கத் தொடங்கினர். ஊரிலிருந்த வயோதிபர்கள் என்னை கொள்ளை நோய் என்றே ஓரம் கட்டி விட்டனர். எங்கள் வீட்டுப் பக்கம் யாரும் தலைவைத்துக் கூடப் படுக்கவில்லை. உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்து கொள்ளவோ வீட்டிலிருந்து வெளியேறவோ முடியாமல் போனது. இச்சந்தர்ப்பத்தில் எந்நாளும் போல் பொது சுகாதார பரிசோதகர்கள் எனது வீட்டுக்கு வந்து போய்க்கொண்டிருந்தார்கள். பொலிஸ் நிலையத்தில் இருந்து தொலைபேசி மூலம் என்னோடு கதைத்தனர். உண்மையில் உளவியல் அடிப்படையில் நான் பூச்சியத்துக்கு விழுந்துவிட்டேன். 14 நாட்கள் நிறைவுற்றன.

நான் தனிமைப்படுத்தலை நிறைவு செய்ததும் கோவிட் நோயாளி அல்ல என்ற சான்றிதழ் எனக்குக் கிடைத்தது. நான் விவசாயம் செய்து சீவியம் நடாத்திய ஒரு மனிதன். நான் எனது விவசாய நிலத்துக்குச் சென்று பார்த்த போது என்னுடைய அனைத்துப் பயிர்களும் நாசமடைந்திருந்தன. தாங்க முடியாத கவலை எனக்கு ஏற்பட்டது. அதைவிடவும் கவலையான விடயம் என்னவென்றால் ஊர் மக்கள் என்னை ஒதுக்குகிறார்கள் என்பது தான். நண்பர்கள், உறவினர்கள், ஊரவர்கள் அனைவரும் என்னைக் கைவிட்டார்கள். உண்மையில் நான் ஒரு மிகப்பெரிய நாசகார செயலைச் செய்த ஒரு குற்றவாளி போல் என்னோடு அவர்கள் நடந்து கொண்டார்கள். என்னை அவர்கள் புறக்கணித்தார்கள். இப்பொழுது கோவிட் பிரச்சினை முடிவடைந்து விட்டது என்றாலும் அந்தப் பிரச்சினை காரணமாக நான் நல்ல ஒரு பாடத்தைப் படித்துக் கொண்டேன். இப்போது என்னுடைய பயிர்கள் மீண்டும் தளிர் விட்டு வளரும் வரை காத்துக் கொண்டிருக்கிறேன்.

**கதையை முன்வைத்தவர்: ஆர்.கே.எச். தீரசிங்ஹ டி. சொய்ஸா | அம்பாந்தோட்டடை மாவட்டம்**



# கதைகளினால் தடுமாறும் மனம்

இக்கதையின் கதாநாயகி பெயர் அருணி. தனியார் துறை நிறுவனம் ஒன்றில் பணிபுரிகிறார். ஊரடங்குச் சட்டம் அமலுக்கு வருவதற்கு ஒரு கிழமைக்கு முன்னர் அருணி செயலமர்வு ஒன்றில் கலந்து கொள்கிறார். சரியாக அதற்கு அடுத்த நாள் அவருக்கு தடிமல் பீடிக்கிறது. மூக்கிலிருந்து சளி வடிய ஆரம்பிக்கிறது. ஏற்கனவே பீனஸ் நோய் இருந்ததனால் வீட்டாருக்கு அது ஒரு சாதாரண விடயமாகவே பட்டது. என்றாலும் இம்முறை அனைவரும் முன்பு ஒருபோதும் இல்லாத வகையில் அச்சமுற்றனர். ஊடகங்கள் வெளியிட்ட கொரோனா நோய் பற்றிய செய்திகளைக் கேட்கும், பார்க்கும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் அருணியின் உள்ளம் அச்சத்தால் நிரம்பியது. ஒருநாள் அருணியின் அலுவலக நண்பி ஒருத்தி தன்னுடைய தொண்டை வலிக்கிறது என்று சொல்கிறார். அவரது கம்பெனியின் மேல் அதிகாரி, இரண்டு தினங்களாக அவருடைய உடம்பு வலிக்கிறது என்று சொல்கிறார். இந்த அத்தனை செய்திகளும் அருணியின் உள்ளத்தை குழம்பி விடுகிறது. கொரோனா நோய் தொடர்பாக சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பட்ட அனைத்து செய்திகளையும் விலாவாரியாக தேடிப் பார்க்கிறார்.

ஊரடங்கு சட்டம் அமுல் நடத்தப்படுகிறது. இவரது மனோ ரீதியான நோய் வர வர அதிகரிக்கிறது. வீட்டின் நீர் குழாய்கள், கதவுகளின் கைப்பிடிகள் போன்ற கை படும் கண்ணில் தென்படும் அனைத்துப் பொருட்களையும் சவர்க்காரம் இட்டு கழுவத் தொடங்குகின்றார். எத்தனை கலன் கொத்தமல்லி அருந்தி இருப்பார் என்பது கடவுளுக்குத் தான் வெளிச்சம்.

இப்பொழுது இவருக்கு அனைவர் குறித்தும் சந்தேகம் ஏற்படுகிறது. வீட்டுக்கு வந்து போகின்ற வியாபாரிகள் குறித்தும் கூட அவர் சந்தேகம் கொள்கிறார். தனக்கு கோவிட் தொற்றுநோய் ஏற்பட்டு இருப்பதாகவும், ஊரின் முதலாவது கோவிட் நோயாளி தான் என்பதால் ஊர் வாசிகள் தன்னுடைய வீட்டுக்கு கல் எறிவார்கள் என்றும் அவர் பயப்படத் தொடங்குகிறார். இப்பொழுது இடைவிடாமல் உளரத் தொடங்குகிறார்.

இப்பொழுது அவரது உள்ளம் நன்றாகவே குழம்பிப் போயிருக்கிறது. எவ்வளவு தான் அவருக்கு விளக்கிச் சொல்ல முற்பட்டாலும் அவர் அதற்கு செவிமடுக்கத் தயாராயில்லை. வேறு எந்த ஒரு மாற்று வழியும் இல்லாத காரணத்தினால் அருணியின் தந்தை அவரை ஒரு வைத்தியரிடம் அழைத்துச் செல்கிறார். இது கணக்கெடுக்கத் தேவையில்லாத ஒரு நோய் என்பதாக வைத்தியர் சொன்னபோதும், அருணி அதை நம்பவில்லை. இப்பொழுது அவர் தொண்டை அடைக்கிறது என்றும் உணவு தொண்டைக் குழியில் இறங்குவதில்லை எனவும், மருந்து குடிக்க விருப்பமில்லை எனவும் மூச்சு விட சிரமமாக இருப்பதாகவும், ஏராளமான நோய்கள் இருப்பதாக அவதிப்படுகிறார். அடுத்த நாள் காலை அரச மருத்துவமனையில் அனுமதி பெற்று பலாத்காரமாக பி.சி.ஆர் பரிசோதனை ஒன்றைச் செய்து கொள்கிறார். அதன் அறிக்கை வரும் வரை அவரை இரண்டு தினங்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கிறார்கள். இந்தக் கால இடைவெளியில் தான் பண்டாரவளை பிரதேசத்தில் கொரோனா தொற்றுள்ள இருவர் கண்டுபிடிக்கப்படுகிறார்கள். அந்த நோயாளர்கள் இருவரும் இந்த வைத்தியசாலைக்குத் தான் அழைத்து வரப்பட்டனர். இரண்டு நாட்களின் பின் அவரது பரிசோதனை அறிக்கை கிடைக்கிறது.

அதன் பிரகாரம் அவர் கோவிட் தொற்றாளர் அல்ல என்று தெரிய வருகிறது. அவர் வீடு செல்ல அனுமதிக்கப்படுகிறார். மன உளைச்சல் தீவிரமடைந்ததன் காரணமாக தான் செய்துகொண்ட காரியத்தின் பாரதூரத்தை தானே அனுபவிக்க நேர்கிறது. பிரதேசத்துக்குப் பொறுப்பான பொது சுகாதார பரிசோதகர் வந்து ஏன் பீசீஆர் பரிசோதனை ஒன்றைச் செய்து கொண்டீர்கள்? என்று கேள்வி கேட்கிறார். அது மாத்திரமல்லாமல் வீட்டில் இருக்கும் அனைவரும் 14 நாட்கள் தனிமைப்படுத்தல் செயன்முறைக்கு உட்படுமாறு கட்டளையிடுகிறார். இப்பொழுது நிலைமை மேலும் தீவிரமடைகிறது. வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்ட கோவிட் நோயாளிகளிடம் இருந்து தனக்கு கொரோனா தொற்றியது என்று கவலைப்பட்டு அழ ஆரம்பிக்கிறார். தான் செய்த மடமைத்தனமான செயலை எண்ணி அவர் கவலைப்படுகிறார். இப்பொழுது அவரிடம் வித்தியாசமான நோய் அறிகுறிகள் தென்பட ஆரம்பிக்கின்றன. 14 நாட்கள் 21 நாட்களாக அதிகரிக்கப்படுகின்றன. 21 நாட்கள் 30 நாட்களாக அதிகரிக்கப்படுகின்றன. நோய் குணமடைந்தபாடில்லை. செய்திகளை செவிமடுக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர் மானசீக உளைச்சலின் அடி ஆழத்திற்குச் சென்று விடுகிறார். பிறகு படிப்படியாக மக்களிடம் இருந்து கோவிட் பீதி மெதுமெதுவாக விலகத் தொடங்குகிறது. அருணிக்கு யதார்த்த நிலைமை தெரிய வருகிறது. அலுவலக வேலையும் ஆரம்பிக்கிறது. அருணி வயோதிபர் இல்லங்களுக்கு உணவுப் பொருட்களை வழங்குவதற்காக செல்கிறார். இப்பொழுது கோவிட் முடிவடைந்துவிட்டது. அருணி சுகமடைந்து விட்டார்.

# ஐயோ எங்கள் மாமியார் எங்கே போனாரோ?

இந்த கோவிட் கொள்ளை நோய் காரணமாக கூடுதலாக நிர்க்கதிக்குள்ளானவர்கள் எங்களைப் போன்ற மத்தியதர வர்க்க சிறிய மனிதர்கள் தான். எங்களுக்குப் பெரிய கிளைகளை பற்றிக் கொள்வதற்கான சக்தி இல்லை. எங்களுக்காகப் பேசுவதற்கு யாருமே முன்வரவில்லை. எங்களுக்கு அப்படி நிகழ்ந்தாலும் அதிகாரத்தைப் பயன்படுத்தி சாதிக்க முடிந்த மனிதர்கள் இலகுவாகவே தத்தமது தேவைகளை ஒரு தொலைபேசி அழைப்பின் மூலம் நிறைவேற்றிக் கொள்வார்கள் என்பது எங்களுக்கு நன்கு தெரியும். என்றாலும் சிறிய மனிதர்களான எங்களது விவகாரங்கள் எந்தளவு தூரம் நியாயமானவையாக இருந்த போதும், அனுதாபம் மிக்கதாக இருந்தபோதும் யாருமே எங்கள் பிரச்சினைகளை செவிமடுக்க முன்வருவதில்லை.

இது உண்மையில் மிகவும் துரதிஷ்டமான ஒரு விடயம். அவ்வாறே எங்களுடைய அதே பொருளாதார மட்டத்தில் இருக்கின்ற, எங்களது வகுப்பு மனிதர்கள் கூட எங்கள் பிரச்சினையில் கருணை காட்டாமல் போவது அதைவிடப் பாரதூரமான ஒரு விடயமாகும்.

டபிள்யு. டபிள்யு. எஸ்.எச் பெர்னாண்டோ என்பவர் எனது உறவினர் ஆவார். 2019ஆம் ஆண்டு அவருக்கு ஒரு இருதய சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. 2020 ஏப்ரல் 15ஆம் திகதி அவரது நோய் நிலைமை முற்றியது. இப்பொழுது என்ன செய்வது? அவரை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லவேண்டுமென்றாலும் ஊரடங்குச் சட்ட அனுமதிப் பத்திரம் ஒன்று இல்லாமல் வெளியே செல்ல முடியாது.

ஒருவாறாக எங்கள் கிராம உத்தியோகத்தரைத் தேடிப்பிடித்து நோய் பற்றிய சான்றிதழை பெற்றுக் கொண்டோம். அதை எடுத்துக்கொண்டு பொது சுகாதார அதிகாரியை சந்திப்பதற்காக சென்றோம். அங்கிருந்து சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்திற்கு சென்றோம். அங்கிருந்து பொலிஸ் நிலையத்திற்குச் சென்றோம். கிராம உத்தியோகத்தரை இலகுவாக தேடிப் பிடித்துக் கொள்ள முடிந்தாலும் ஏனைய அனைவரும் கொள்ளை நோய் நிலைமை காரணமாக மிகவும் வேலைப்பளுவுடன் காணப்பட்டனர். அதனால் எங்கள் நோயாளிக்கு எவ்வளவுதான் நோய் அதிகரித்த போதும் அவரை உரிய நேரத்தில் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்ல முடியவில்லை. அதிகாலை நோய் தீவிரம் அடைந்த அந்த நோயாளியை அனுமதிப்பத்திரங்களைத் தயாரித்துக்கொண்டு சிலாபம் வைத்தியசாலையில் அனுமதித்தோம். அப்போது நேரம் மிகவும் பிந்தி இருந்தது. நிலைமை மிகவும் மோசமானதாக மாறிக்கொண்டு வந்த போது சத்திரசிகிச்சை ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என்று கூறி நோயாளியை சிலாபத்தில் இருந்து கொழும்பு மருத்துவமனைக்கு அனுப்பினர்.

நோயாளியின் நிலை நிமிடத்துக்கு நிமிடம் மோசமான நிலைமைக்கு சென்றுகொண்டிருந்தது. கொழும்பு வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்ற உடனேயே சத்திர சிகிச்சைக்கு அனுமதிப்பார்கள் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். என்றாலும் அப்படி நடைபெறவில்லை. முதலாவதாக பீசிஆர் பரிசோதனையை மேற்கொண்டனர். அந்தப் பரிசோதனையின் அறிக்கை வரும் வரை நோயாளியை சத்திரசிகிச்சைக்குப் பாரமெடுக்க முடியாது என்று கூறினர். ஐயோ எங்களுக்கு நேர்ந்த துரதிஷ்டம்! பரிசோதனை அறிக்கை தாமதமாகும் போது நோயாளி இந்த உலகத்தை விட்டும் நிரந்தரமாகச் சென்றுவிட்டார்.

அவர் மரணிக்கும் பொழுது அதிகாலை ஒன்றரை மணி இருக்கும். நம்புவதாக இருந்தால் நம்புங்கள்: அதிகாலை 6 மணி ஆகும் போது இறுதிக் கிரியைகளை விரைவாக செய்து கொள்ளுங்கள் என்று கூறி ஊரடங்குச் சட்ட அனுமதிப்பத்திரத்தை பெற்றுத் தந்தனர் அந்த அளவு விரைவாக அந்த நோயாளி உயிரோடு இருக்கும்போது அவரை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்வதற்கு ஒரு அனுமதிப்பத்திரத்தை பெற்றுத்தந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். அவ்வாறு நடந்திருந்தால் எங்கள் மாமியாருக்கு இவ்வாறான அகால மரணம் ஒன்று நிகழ்ந்து இருக்கமாட்டாது. அது பற்றி நினைக்கும் போது பெரும் துயர் ஏற்படுகிறது.

# கும்பிட போன கோவில் தலையில் இடிந்து விழுந்தது

நான் ஒருகொடவத்த மஜீத் பிளேசில் வசிக்கும் முஹம்மத் லாபீர். நான் சமூக சேவையில் ஈடுபாடு கொண்டவன். என்னிடம் பணம் இல்லை என்றாலும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் பிறருக்கு உதவுவேன். நான் ஒரு நோயாளியை அழைத்துக் கொண்டு மஹரகம புற்றுநோய் வைத்தியசாலைக்குச் சென்றேன். அவர் மிகவும் ஏழை. லியூகேமியா நோயினால் அவர் பீடிக்கப்பட்டு இருந்தார். அவருடைய மருமகனும் நானும் தான் அவரை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றோம். மஹரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கு முன்னால் என்னுடைய முச்சக்கர வண்டியின் கிளச் கேபிள் அறுந்து விட்டது. வாகனத்தைப் பழுது பார்க்க எனது கையில் பணம் இருக்கவில்லை. என்றாலும் நான் என்னுடைய தைரியத்தைக் கைவிடவில்லை. நோயாளியை முன் நுழைவாயிலால் எடுக்க முடியாது என்று சொன்னபோது பின்பக்க நுழைவாயிலால் அவரை உள்ளே அழைத்துச் சென்று வைத்தியசாலையில் அனுமதித்தோம்.

அவரை கொரோனா நோய் பரிசோதனைக்கு உட்படுத்தி அவருக்கு காய்ச்சலாக இருக்கிறது என்று கூறி அங்கொட காய்ச்சல் வைத்தியசாலைக்கு மாற்றினர். அப்படி இருக்கும் பொழுது மூன்று நாள் கழித்து அங்கொட காய்ச்சல் வைத்தியசாலையில் இருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. நீங்கள் அழைத்துச் சென்ற நோயாளி கோரோனா நோய்க்கு ஆளாகி இருக்கிறார். ‘‘நீங்களும் உங்கள் வீட்டார் அனைவரும் தனிமைப்படுத்தலுக்கு செல்வதற்காக தயாராகுங்கள்’’ என்று அவர்கள் என்னிடம் வேண்டினர். சிறிது நேரம் சென்றதும் பொது சுகாதார பரிசோதகரும் ஊடகவியலாளர்களும் பொலிஸ்காரர்களும் எங்கள் வீட்டைச் சுற்றி வளைத்துக் கொண்டு இருந்தனர்.

நோயாளியான ரியால் ஐயாவின் வீட்டிலிருந்து 12 பேர். எங்களது வீட்டிலிருந்து 9 பேர். சிறு பிள்ளைகள் உட்பட அனைவரையும் அழைத்துச் செல்லப் போகிறார்கள். எங்கள் வீட்டில் வலது குறைந்த பாட்டி ஒருவர் இருந்தார். பாட்டியை வீட்டிலே தனிமைப்படுத்தளுக்கு உட்படுத்தி விட்டு எங்களை அழைத்துச் செல்லுங்கள் என்று நான் பொதுச் சுகாதார பரிசோதகரிடம் கூறினேன். அதற்கு அவர்,‘‘முடியாது, முடியாது, 24 மணித்தியாலங்களுக்குள் தயாராகி விடுங்கள்.’’ என்று கட்டளையிட்டார். பின்னர் பஸ் வண்டி ஒன்றைக் கொண்டுவந்து நிறுத்தி விட்டு, எங்களை வீதிக்கு நடந்து வருமாறு பணித்தனர். அப்போது எங்கள் ஊரில் இருந்தவர்கள் எங்களை வித்தியாசமாக, அதாவது போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களைப் பார்ப்பது போலத்தான் பார்த்தார்கள்.

எங்களை பாதைக்கு அழைத்து வரும் வரை வீடுகளில் இருந்தவர்கள் எங்களைப் பற்றி குறை கதைத்தார்கள். சரியாக ஒரு திருடனை அழைத்துச் செல்வது போலத்தான் என்னை அழைத்துச் சென்றார்கள். எங்களது குடும்பத்தை பாலத்திற்கு கீழ் மூன்று மணித்தியாலங்கள் நிறுத்தி வைத்து விட்டு பின்னர் தான் பயணத்தை ஆரம்பித்தார்கள். எங்களுக்கு குடிப்பதற்கு ஒரு துளி தண்ணீர் கூடத் தரவில்லை. பிறகு எங்களை தம்புள்ளைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு இராணுவ முகாம் ஒன்றுக்கு அருகில் வைத்து ஒரு ரோல்ஸ் மற்றும் ஒரு தண்ணீர் போத்தல் தந்தார்கள். அப்பொழுது நேரம் மாலை 5 மணி மட்டில் இருக்கும். வெலிகந்த பூனானி முகாமுக்குள் நாம் நுழையும் பொழுது இரவு 10 மணி மட்டில் இருக்கும். அங்கு தண்ணீர் போத்தல் ஒன்றும் சாப்பாட்டுப் பார்சல் ஒன்றும் தந்தனர். அதுதான் எங்களுக்கு கிடைத்த உணவு.

ஆனால் பூனானி சென்ற பின்னர் எங்களை சிறந்த முறையில் கவனித்தனர். இராணுவத்தினர் தான் எங்களைப் பார்த்துக் கொண்டார்கள். அதன் பின்னர் 9 நாட்களில் பிசிஆர் பரிசோதனை மேற்கொண்டனர். அதில் யாருமே நோயாளர்கள் என அடையாளம் காணப்படவில்லை.

அதன் பின்னர் தான் எங்களுக்கு போன உயிர் திரும்பி வந்தது. ஏனென்றால் கொரோனா என்றால் என்ன என்பது எங்களுக்கு தெரியாது. நாங்கள் கடவுளிடம் தான் உதவி கேட்டோம். உண்மையில் கடவுள் தான் எங்களைக் காப்பாற்ற வேண்டும். எங்களுக்கு வேறு யார் இருக்கிறார்கள்? உண்மையில் நாங்கள் மரணத்தை எதிர்பார்த்து இருப்பவர்கள் போலத் தான் இருந்தோம். அந்தளவு தூரம் நாங்கள் பயந்தோம்.

ஒரு நோயாளிக்கு உதவப்போய் நானும் எனது பிள்ளைகளும் குடும்பத்தவர்களும் இவ்வாறு சிறைப்பட்டு விட்டோமே என்று நான் கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். 14 நாட்களும் எங்களுக்கு இரவிலோ பகலிலோ சரியான தூக்கம் கிடைக்கவில்லை. 14 நாட்கள் கழித்து இராணுவத்தினர் எங்களை அழைத்து வந்து பொலிசாரிடம் கையளித்தனர். ஆனால் பொலிசாரோ எங்களை சிறிது கூட பொருட்படுத்தவில்லை. நீங்கள் எங்கே? ஒருகொடவத்த, மஜீத் பிளேசைச்  சேர்ந்தவர்களா? என்று மாத்திரம் தான் கேட்டனர். பின்னர், ‘‘பாதையின் மறு பக்கத்தில் நின்று கொள்ளுங்கள்.’’ என்று கூறினார்கள். ‘‘எங்களோடு வயது முதிர்ந்த பாட்டி ஒருவர் இருக்கிறார்.  அவரால் நடக்க முடியாது.’’ என்று நான் சொன்னேன். ‘‘பரவாயில்லை ஒரு கதிரையையும் எடுத்துக் கொண்டு சென்று வெளியே நில்லுங்கள்.’’ என்று அவர் கூறினார். ‘‘நீங்கள் வீடு செல்ல வாகனம் ஒன்றை அழைப்பித்து கொள்ளுங்கள்.’’ என்று அவர் எங்களுக்குச் சொன்னார். ‘‘இந்த ஊரடங்குச் சட்ட அமுலாக்க நேரத்தில் வாகனம் ஒன்றை எப்படி அழைப்பது?’’ என்று நான் அவரிடம் கேட்டேன்.

‘‘இல்லை, இல்லை, உங்களை இந்த வாகனத்தில் ஏற்றிக் கொள்ள முடியாது என்று அவர்கள் சொல்கிறார்கள்.’’ என அவர் கூறினார். அந்தளவு தூரம் மோசமாகத்தான் பொலிசார் எங்களை நடத்தினார்கள். இறுதியில் ஊரில் இருந்த இளைஞர்களுக்குத் தொலைபேசி அழைப்பெடுத்து, பொலிசார் சொன்னதாக பொய் சொல்லி இரண்டு முச்சக்கர வண்டிகளை வரவழைத்து நாங்கள் 9 பேரும் ஏறி வீடு சென்றோம்.

நாங்கள் வீட்டுக்கு வந்த பின்னர் மீண்டும் இரண்டு பொலிசார் எங்கள் வீட்டுக்கு வந்தார்கள். நீங்கள் 14 நாட்கள் வீட்டுக்குள்ளேயே இருக்க வேண்டும் என்று அவர்கள் கூறினர். அச்சந்தர்ப்பத்தில் என்னிடம் விற்பனைக்காக கொண்டு வந்திருந்த தேங்காய், வெங்காயம், கிழங்கு, முட்டை, இஞ்சி, தக்காளி, பச்சை மிளகாய் போன்ற பொருட்கள் வீட்டிலிருந்தன. அவை சுமார் 80,000 ரூபாய் பெறுமதியான பொருட்கள்.

அவை அனைத்துமே அழுகி, நாசமாகி  இருந்தன. உண்மையில் நான் அதன் காரணமாக மிகவுமே ஆதரவற்ற நிலைக்கு இப்பொழுது தள்ளப்பட்டுள்ளேன்.



# இன்றைக்கு சந்தோசமாக இருந்து நாளைக்கு இறந்தாலும் பரவாயில்லை.

நான் கருணாசேன. அநுராராதபுரம் மாவட்டத்தில் குபுகொல்லாவ எனும் இடத்தில் வசிக்கிறேன். நான் உழைக்கும் பணம் கூடுதலாக செலவானது மதுபானத்திற்கே ஆகும். எவ்வளவு முயற்சி செய்தும் இந்தக் கூடாத பழக்கத்தை விட முடியவில்லை. நான் குடித்தால் அழகாக பாடல் பாடுவேன். நான் நினைத்துக்கொண்டிருந்தேன் நன்றாக தூங்க வேண்டும் என்றால் குடிக்க வேண்டும் என்று. அந்தி வேளையில் குடித்தால் உடம்பு வலி இருக்காது என அந் நாட்களில் நினைத்தேன். பின்னேரம் வீடு வரும் போது எப்போதும் மனைவியிடம் திட்டு வாங்குவேன். பிள்ளைகள் முகத்தை கூட பார்க்கமாட்டார்கள். வீட்டின் பொருளாதாரம் சம்பூரணமாக வீழ்ந்துவிட்டது. மதுபானம் குடிப்பது தான் வாழ்க்கைக்கு சந்தோசத்தை அளிக்கக்கூடியது என நினைத்துக்கொண்டிருந்தேன். மதுவை தவிர வேறு எதுவும் வாழக்கையில் இருக்கவில்லை.

கொரோனா பரவல் இடம்பெற ஆரம்பித்தது. வீட்டிலேயே அடைபட்டு இருந்தோம். வீட்டிலிருந்து வெளியே செல்ல முடியவில்லை. நண்பர்களை சந்திக்க முடியவில்லை. சுக துக்கங்களில் உங்களுடன் இருப்போம் என்றவர்களை கண்ணால் காணவே இல்லை. மதுபானம், கசிப்பு போன்றவற்றை காணமுடியவில்லை. இப்படியாக இரண்டு மூன்று மாதங்கள் சென்றது. மதுபானம் ஒரு துளி கூட கிடைக்கவில்லை. அப்போது தான் எனக்கு புரிந்தது மதுபானம் ஒரு மாயை என்று. அழகாகப் பாடவும் நன்றாகத் தூங்கவும் குடிக்க வேண்டும் என்ற சிந்தனை பொய் என்பது உறுதியானது. உண்மையாக மற்றைய நாட்களை விட ஆழந்து தூங்கினேன். சோற்றின் ருசி தெரிய வேண்டும் என்றால் குடிக்க வேண்டும் என்று நினைத்த எனக்கு முன்பை விட சாப்பாடு ருசியாக இருந்தது. அந் நாட்களில் என்னுடைய வாழ்கையில் பெரிதான மாற்றம் உண்டானது. மனைவி இன்னும் அருகானார். நாங்கள் இருவரும் மீண்டும் பாசத்தில் திளைத்தோம். பிள்ளைகள் பயமில்லாமல் என் பக்கத்தில் இருந்தார்கள்.

முன்பு தட்டிக்களித்த விவசாயத்தையும், வீட்டுத் தோட்டத்தையும் மீண்டும் தொடங்கினேன். மதுபானம், புகைபிடித்தல் பழக்கத்தின் நாடகமானது சரியான மாயை என எனக்கு இப்பொழுது விளங்குகிறது. மீண்டும் அதை வாயில் வைக்க மாட்டேன்.

**கதையை முன்வைத்தவர் : ஏ. கருணாசேன I அநுராராதபுரம் மாவட்டம்.**

ஆசிய பிராந்தியத்தில் வன்முறைத் தீவிரவாதத்தைத் தடுப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (யு.என்.டி.பி) முன்னெடுக்கும் ‘‘சகிப்புத்தன்மையையும் பன்முகத்தன்மைக்கு மதிப்பளித்தலையும் ஊக்குவிப்பதன் மூலம் வன்முறைத் தீவிரவாதத்தைத் தடுத்தல்’’ என்ற செயற்திட்டத்தின் ஒரு பகுதியாக சர்வோதய சாந்தி சேனா அமைப்பின் முன்னெடுப்பு

**Layout / Design - UNDP Communication Team**